ஆண்டறிக்கை 2017

கை.அ.ச.

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை

எமது தொலைநோக்கு

"இலங்கையில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் அபிவிருத்தி செய்தல்"

எமது பணி

"இலங்கையில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்துக் கைத்தொழில்களையும் ஊக்குவித்தல், மேம்படுத்துதல், அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றிற்குத் தேவையான மூலோபாயத் தொழில்நுட்ப மற்றும் வர்த்தக அடிப்படையினை வழங்குதல்"

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை

2015 பெப்வரி முதல்2017 டிசெம்பர் வரை

திரு. மகிந்த ஜினசேன - தலைவர்

2017 சனவரி முதல் டிசெம்பர் வரை

திருமதி சந்தியா விஜயபண்டார - பதவி வழியில் நியமனம் பெறும் உறுப்பினர்

2017 சனவரி முதல் ஆகஸ்ட் வரை

திரு. டி.டீ.எஸ். பெரேரா - பதவி வழியில் நியமனம் பெறும் உறுப்பினர்

2017 சனவரி முதல் மே வரை

திரு. தர்சன விஜயசிறிவர்த்தன - பதவி வழியில் நியமனம் பெறும் உறுப்பினர்

யூன் முதல் டிசெம்பர் வரை

திரு.எம்.என்.டீ.குணரத்ன - பதவி வழியில் நியமனம் பெறும் உறுப்பினர்

2017 சனவரி முதல் டிசெம்பர் வரை

திரு. றோய் ஜெயசிங்க - பணிப்பாளர் சபை ஆலோசகர்

பெப்ரவரி முதல் 2017 டிசெம்பர் வரை

திரு.கலீல் றஹுமதுல்லா - பணிப்பாளர் சபை உறுப்பினர் .

திரு. சமீன் பெரேரா - பணிப்பாளர் சபை உறுப்பினர்.

திரு. நிசாத கமகே - பணிப்பாளர் சபை உறுப்பினர்

2017 சனவரி முதல் 2017 டிசெம்பர் வரை

கீ திரு.பீ.டபிள்யு.பீ. மென்டிஸ் - பணிப்பாளர் சபை உறுப்பினர்

2017 யூலை முதல் 2017 டிசெம்பர் வரை

திரு.சஞ்சீவ திக்வெல்ல - பணிப்பாளர் சபை உறுப்பினர்

2017 சனவரி முதல் யூன் வரை

திருமதி.மாலிகா சமரவீர - பணிப்பாளர் சபை உறுப்பினர்

தலைவரின் செய்தி

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையின் 2017 ஆம் ஆண்டு நிதியாண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கு எனது செய்தியினை சமர்ப்பிப்பதற்கு கிடைத்தமை பற்றி நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை நடைமுறைப்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் தாபிக்கப்பட்டுள்ள முதன்மையான அரச நிறுவனம் என்ற வகையில் கைத்தொழில் அபிவிருத்தி சபை நான்கு தசாப்தங்களாக கைத்தொழிலாளர்களுக்கு பல உதவிச் சேவைகளையும் ஒத்தாசைகளையும் வழங்கியுள்ளது என்பதை மிகவும் பெருமையுடன் குறிப்பிட விரும்புகின்றேன். இச்செயன்முறையை எதிர்வரும் காலத்தில் இடையறாமல் முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு 2017 ஆம் ஆண்டிலும் அமைச்சின் உதவி மற்றும் வழிகாட்டலின் கீழ் பல்வேறு செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

கைத்தொழில் அபிவிருத்தி சபை கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மூன்று கட்டங்களின் கீழ் ரூபாய் 140 மில்லியன் ஒட்டுமொத்த ஒதுக்கீடாக செலவிட்டு ஏற்றங்கீகரிக்கப்பட்ட உணவு இரசாயனக்கூடம் ஒன்றை நிறுவுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. இக்கருத்திட்டம் இந்நாட்டில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு பெறும் பயன்களைப் பெற்றுக்கொடுப்பதுடன் இந் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பெருமளவு பங்களிப்பினை வழங்கிவருகின்றது. இந்நாட்டின் கைத்தொழில்களுக்கு வசதி வழங்குனராக கைத்தொழில் அபிவிருத்தி சபை செயற்படுவது மிகவும் முக்கியமான விடயமாக அமையும் என கைத்தொழில் அபிவிருத்தி சபை நம்புகின்றது.

நிரல் அமைச்சு மற்றும் விஞ்ஞான, தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சுடன் ஒன்றிணைந்து செயற்படுத்தப்படும் அரச-தனியார் கூட்டாண்மை கருத்திட்டமாக ரொபோ தொழில்நுட்பத்திற்கான சிறப்புத்தேர்ச்சி நிலையத்தை உருவாக்கும் ஒட்டுமொத்த செயன்முறையை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.ரொபோ தொழில்நுட்பத்திற்கான சிறப்புத்தேர்ச்சி நிலையம் ரொபோ தொழில்நுட்ப முறைமையை திட்டமிடுதல், தயாரித்தல் மற்றும் பரிசோதித்துப் பார்த்தல் போன்றவற்றை மேற்கொள்வதுடன் இந்நிலையம் தொழில்நுட்பத்தை வழங்கும் நிலையமாக செயற்படுகின்றதென கைத்தொழில் அபிவிருத்தி சபை திடமாக நம்புகின்றது.

2017ஆம் ஆண்டில் எமது சபையின் ஒவ்வொரு பிரிவினதும் விடய பரப்பினை விரிவாக்கி பயனாளிகளுக்கு வழங்கப்படும் சேவைகளின் தரத்தை உயர்த்துவதின் ஊடாக நிலைபேறான முறையில் கைத்தொழிலாளர்களுக்கான சேவையினை வழங்கும் ஆற்றலை முன்னேற்றினோம். மேலும் செயல்முறை அபிவிருத்தி, உற்பத்தி அபிவிருத்தி, மனிதவள அபிவிருத்தி, வளங்கள் தொடர் அபிவிருத்தி, உற்பத்தி முறைமை அபிவிருத்தி போன்ற துறைகளில் கருத்திட்டங்களுக்கு வழங்கப்படுகின்ற அமைச்சு நிதியத்தினை பயன்படுத்தும்போது நாம் மிகவும் கிரயத்திற்கான விளைவு கிடைக்கும் வகையில் எமது தொழிற்பாட்டு முகாமைத்துவத்தை மேற்கொள்ளுதல் பற்றி கவனம் செலுத்தினோம். மேலும் மகிழ்ச்சிகரமானதும் திருப்திகரமானதுமான மனித மூலதனத்தை உருவாக்குவதற்கு காரணமாக அமையக் கூடிய சாதகமான சூழலொன்றை

உறுதிப்படுத்தும் பொருட்டு சேவை நிலையங்களில் பின்பற்றவேண்டிய ஒழுக்க நெறி கற்பிக்கப்படுவதுடன் பதவி உயர்வு, ஊக்குவிப்பு கொடுப்பனவு, போன்றவற்றிற்கான அளவுகோல்கள் இசைந்தொழுகப்பட வேண்டும் என்பதில் திடமாக செயற்படுகின்றோம். நவீன மனித வள அனுபவங்களை நடைமுறைப்படுத்தும் பணி கண்டங்களுக்கு இடையிலான மனித வள முகாமைத்துவ நிறுவனம்(IIHRM) எனும் நிறுவனத்திற்கு சாட்டப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, கைத்தொழில் அபிவிருத்தி தொழில் முயற்சி கிராமங்கள் மற்றும் மகளிர் தொழில் முயற்சி அபிவிருத்தி, உற்பத்தி கிராம அபிவிருத்தி, மேற்கு மாகாண கைத்தொழில் அபிவிருத்தி, வெட்டு மரம் சார்ந்த கைத்தொழில்களின் அபிவிருத்தி, மற்றும் கைத்தொழில் பேட்டைகளில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளை நவீனமயப்படுத்தல் போன்றவை பற்றி மேலும் பல நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளது.

கடந்த வருடம் முழுவதும் எமது நாட்டின் பொருளாதாரம் பெருமளவு மாற்றத்துக்கு உள்ளாகியுள்ளதாள் அது இவ்வருடத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் ஊடாக ஒரு வருடத்துக்குள் அடைந்து கொள்ளக் கூடிய பெறுபேறுகளின் மீது பெறும் மாற்றகரமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. கடந்த வருடத்தில் ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் எமது செயலாற்றுகைக்கு தாக்கம் விளைவித்த அதே காரணி எதிர்வரும் காலத்திலும் அதாவது, 2018 ஆம் ஆண்டிலும் எமது இலாபத்தை உருவாக்கிக் கொள்வதற்கு தடையாக இருக்கின்றது என்பதனை நாம் இனம் கண்டுள்ளோம். எவ்வாறாயினும், எதிர்வரும் ஆண்டில் சபையின் இலாபத் தன்மையை உயர்த்திக் கொள்ளுதல் எமது பொறுப்பாக இருப்பதுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விரிவாக்கம் மற்றும் கிரயத்தில் ஏற்படுத்துப்படவுள்ள மாற்றங்கள் ஊடாக முதலீடுகளை நாம் எதிர் வரும் காலத்திலும் தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவோம். கைத்தொழில் அபிவிருத்தி சபையின் அனைத்து பிரதான முயற்சிகளின் போதும் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் கௌரவ ரிஷாட் பதியுதீன் அவர்களினால் வழங்கப்படுகின்ற நேர்மையான ஒத்துழைப்பு, ஒத்தாசை மற்றும் வழிகாட்டல்களுக்கு அவருக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் சபை இன்று வரை அடைந்து கொண்டுள்ள அனேக வெற்றிகளை நோக்கி சபையினை முன்னெடுத்துச் செல்வதற்கு தயக்கமின்றி உதவியளித்த அர்ப்பணிப்புமிக்க எமது பணியாளர்கள் கொண்டுள்ள தொலைநோக்கு மற்றும் அவர்கள் தொடர்ச்சியாக வழங்கிய பெறுமதிமிக்க ஒத்தாசையினை எனது நேர்மையான மதிப்பீட்டுக்கு உட்படுத்துகின்றேன்.

மஹிந்த ஜினசேன
தலைவர்

பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு

நிறுவன செயலாற்றுகையின் விரிவான கண்ணோட்டத்தை கருத்தில் கொள்ளும்போது நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை தயாரிக்கும் பணி மிகவும் பாரதூரமான பொறுப்பாகும். தெளிவாகவே வருடாந்த அறிக்கை என்பது நிறுவனத்தின் வளங்கள் எந்த அளவுக்கு வினைத்திறன் மிக்க வகையில் ஒதுக்கப்பட்டுள்ளது மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை வெளிப்படுத்துகின்ற மதிப்பீடு மாத்திரமன்றி அது ஆண்டிற்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது இடம்பெற்றுள்ள குறைபாடுகள் பற்றிய மதிப்பீடாகவும் அமைகின்றது இது அடுத்துறும் ஆண்டுக்கான மூலோபாயங்களை மீள பொருள்கோடல் செய்துகொள்வதற்கும் தடைகளை தடுத்துக் கொள்வதற்கும். உதவி வழங்குகின்றது. ஆகவே உள்நாட்டு கைத்தொழில் அபிவிருத்தி செயல்முறையில் மேற்கொள்ளப்படுகின்ற நிறுவன ரீதியிலான பங்கேற்புக்கு ஏதேனும் உள்ளடக்கத்தை ஒன்று சேர்ப்பதற்கு இடமளிக்கும் வகையில் பௌதிக மற்றும் நிதித்துறைகளின் நிறுவன ரீதியான முன்னேற்றத்தை புரிந்து கொள்ளும் பொருட்டு தயாரிக்கப்படும் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கு எனது கருத்துக்களை சேர்த்துக் கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு நான் மகிழ்வடைகின்றேன்.

2017ஆம் ஆண்டு என்பது இந்நாட்டின் தேசிய கைத்தொழில்களின் அறிவார்ந்த மற்றும் மூலோபாய அபிவிருத்தி பிரயத்தனமொன்றின் ஊடாக பிரதானமாக குறைநிரப்பு செய்யப்படவேண்டிய துரித மறுமலர்ச்சிக்கு அவசியத்தை ஏற்படுத்திய ஆண்டாக அமைந்தது. நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் எண்ணிக்கை ரீதியில் உள்நாட்டு கைத்தொழில் துறையில் மிகவும் பாரிய பகுதியினை பிரதிநிதித்துவம் செய்வதால் கைத்தொழில் அபிவிருத்தி சபை உள்நாட்டுக் கைத்தொழில்களை பொருத்தமான அபிவிருத்தி மட்டத்திற்கு கட்டியெழுப்பும் பொருட்டு நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் ஆற்றலை வலுவூட்டும் விடயத்தில் காணப்படும் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டுள்ளது.

இவ்விடயத்தில் தனியார் துறையில் காணப்படுகின்ற மிகவும் பாரிய கைத்தொழில்களுக்கு மொத்த தேசிய உற்பத்திக்கு அதிகமான வலுவை வழங்கி அவற்றின் தொழில் முயற்சிகளின் எல்லைகளை சர்வதேச அளவிலான மட்டத்திற்கு விரிவாக்கி பாரிய பணியினை மேற்கொள்ள வேண்டி இருக்கின்றது. ஆகவே, மிகவும் பாரிய கைத்தொழில்களினால் கணிசமான மட்டத்திற்கு பெறுமதி சேர்க்கும் விடயத்தை மேற்கொண்டு அதிகமான பயன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விசேட தொழிற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு பாரிய கம்பெனிகளுக்கு சந்தர்ப்பத்தை வழங்கி அவற்றின் சிறிய தொழிற்பாடுகளை மேற்கொள்வதற்கு நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு கதவுகளைத் திறப்பதற்கு தீர்மானிக்க முடியும். இவ்வாறான முறைமை ஒன்றில் கைத்தொழில் அபிவிருத்தி சபை சந்தையினால் எதிர்பார்க்கப்படுகின்ற நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள், தரத்திற்கும் அளவிற்கும் தர நியமங்களுக்கும் ஏற்புடையவாறு தேவையான உற்பத்தி சாத்தியவளத்திற்கு இசைவுடையதாக்கும் பணி சாட்டப்பட்டுள்ளது.

இவ்வருடத்தில் கைத்தொழில் அபிவிருத்தி சபை நிதி சந்தைப்படுத்தல், தொழில்நுட்பம். மனித வளங்கள் மற்றும் தொழிற்பாட்டு முகாமைத்துவம் ஆகிய துறைகளிலும் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு அறிவினை வழங்குவதற்கான தொடர்புகளை கட்டியெழுப்புதல் செயல்முறைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மனித மூலதனத்தை கட்டியெழுப்புதல் போன்ற முறைமைகள் வாயிலாக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு உதவிகளை வழங்கி அவற்றை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் கைத்தொழில் அபிவிருத்தி சபை நாடு முழுவதும் அமைந்துள்ள உணவுத்துறை கைத்தொழில்களை உள்வாங்கி வெற்றிகரமான செய்முறைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியுள்ளது. செயல்முறை ஆற்றல்களை உயர்த்துவதற்கு கைத்தொழில்களுக்கு வழங்கப்படுகின்ற நிதி உதவி உண்மையிலேயே ஆக்க விளைவினை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்பு ஆகும். அதற்கு சமாந்தரமாக மிகவும் உயர்ந்த சேவையினை வழங்கும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கைத்தொழில் பேட்டைகள் உள்ளிட்ட அனைத்து சேவை வழங்கல் நிறுவனங்களையும்' உள்ளடக்கி வெற்றிகரமான செயன்முறைகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டமொன்றை தற்போது மேற்கொண்டு வருகிறது. மேலும் ரொபோ தொழில்நுட்பத்திற்கான

தேர்ச்சி நிலையத்தை ஆரம்பித்தல், மற்றும் இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி அத்துடன் சேவை நிலையங்களுக்கும் பொறியியல் வார்ப்பு நிலையங்களுக்குமான நவீன இயந்திர உபகரணங்கள் மற்றும் பரிசோதனை உபகரணங்களை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக அனைத்து நிறுவன தொடர்புகளின் போதும் சம்பந்தப்பட்ட வழிகாட்டல்களும் தரநியமங்களுக்கும் இசைந்து ஒழுகுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு முகாமைத்துவத்தினால் கணக்காய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் மீது அதிக கவனத்தை ஈடுபடுத்தியுள்ளது.

இவ்வருடத்திற்காக நாம் மேற்கொண்ட முயற்சிகளை வெற்றியடையச் செய்யும் பொருட்டு கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் கௌரவ ரிஷாத் பதியுதீன் அவர்களும் கௌரவ பிரதி அமைச்சர் அவர்களும் செயலாளரும் சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் நிறுவனத்தின் பணியாளர்கள் எமக்கு வழங்கிய ஊக்கம், உதவி தேவையான அங்கீகாரங்கள் மற்றும் ஒத்துழைப்பிற்கு கைத்தொழில் அபிவிருத்தி சபையின் சார்பில் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவிப்பதற்கு இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்கிறேன்.

நாம் திட்டமிடுகின்ற வகையில் எமது எதிர்பார்ப்புகளை அடைந்துகொள்வதற்கு எமக்கு வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் மற்றும் அறிவுரைகளையும் வழங்கிய தலைவர் அவர்களுக்கும் பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவுக்கும் எனது நன்றியினை தெரிவிக்க விரும்புகின்றேன். மேலும் 2017ஆம் ஆண்டில் நாம் மேற்கொண்ட அனைத்து முயற்சிகளிலும் வழங்கப்பட்ட கூட்டு ஒத்துழைப்புக்கும் அர்ப்பணிப்பிற்கும் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபைக்கும் ஒட்டுமொத்த பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

பி. எல். யூ. ரத்னமலல

பணிப்பாளர் நாயகம்

உள்ளடக்கம்

1.0 நிறுவனம் 01-04

1.1 பின்னணி

1.2 சபையின் குறிக்கோள்கள்

1.3 சபையின் பிரிவுகள் வழங்கும் சேவைகள்

1.4 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள்/கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் பிரதான சேவைகள் மற்றும் வசதிகள்

1.5 தாபனக் கட்டமைப்பு

2.0 2017 ஆம் ஆண்டின் கருத்திட்டங்கள் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றுகை 05-16

2.1 மேலோட்டமான பகுப்பாய்வு

2.2 செயலாற்றுகை மீளாய்வு

2.3 தொழில்நுட்பத்தை வழங்குதல் சேவை பெறுநர்களின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி

2.4 பிரிவு வாரியாக 2017ஆம் ஆண்டின் செயல் திட்டத்தின் முன்னேற்றம் பற்றிய பொழிப்பு

3.0 விசேட கருத்திட்டங்கள்/ நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கண்காட்சி 2017 17-20

3.1 இலங்கையிலுள்ள சிறிய அளவிலான உணவுக் கைத்தொழில்களை கட்டியெழுப்புவதற்கான நிதியுதவிகள்.

3.2 பாதணி மற்றும் தோல் பொருள் கண்காட்சி 2017

3.3 கைத்தொழில் அபிவிருத்தி சபை வர்த்தக குறியீடு நிகழ்ச்சித்திட்டத்துடன் தெரண சி.ந.கை சமூகம்

3.4 பி யூ.எம் நெதர்லன்ட் சீனியர்ஸ் எக்ஸ்பர்ட்ஸ் அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

3.5 பொதியிடல் அபிவிருத்தி ஊடாக சி.ந.கைத்தொழில்களுக்கான வசதிகளை வழங்குதல்

3.6 பிளாஸ்டிக் கழிவுப் பொருள் மீள் சுழற்சி

3.7 அகற்றப்படுகின்றன கடதாசி மீள்சுழற்சி மற்றும் கைகளினால் தயாரிக்கப்பட்ட கடதாசி உற்பத்தி

4.0 ஒவ்வொரு பிரிவினதும் முன்னுரிமை நிகழ்ச்சித்திட்டங்கள் 21

- நிர்வாக் பிரிவு (AD) 22-23
- பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD) 24-29
- திட்டமிடல் பிரிவு (PD) 30
- சந்தைப்படுத்தல் பிரிவி (MD) 31-32
- கைத்தொழிற் பேட்டைப் பிரிவு (IED) 33-39
- பொறியியல் பிரிவு (ED) 40-41
- தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம்(CEDACS) 42-44
- தொழில்நுட்பச் சேவைப் பிரிவு (TSD) 45-50
- தோற் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம்(CDLPF) 51-52
- இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம்(RPD & SC) 53-56

5.0 நிதிக் கூற்றுக்கள் 57

- விரிவான நிதிநிலைக் கூற்று 58
- விரிவான வருமானக் கூற்று 59
- உரிமைப் பங்கிலான மாற்றங்கள் பற்றிய கூற்று 60
- காசுப் பாய்வுக் கூற்று 61
- முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் ஏனைய தெளிவுபடுத்தற் தகவல் 62-85

6.0 சபையின் தெளிவுபடுத்தலுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 86-101

சுருக்க பெயர் ஆவணம்

AAT	-	கணக்காய்வாளர்கள் சங்கம்
AD	-	நிர்வாகப் பிரிவு
ATRDC	-	பொருத்தமான தொழிநுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்
BHC	-	தொழில் முயற்சி ஆரோக்கிய சான்றிதழ்
CDLPF	-	தோல் பொருள் உற்பத்தி மற்றும் பாதணிஅபிவிருத்தி நிலையம்
CEDACS	-	தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம்
CP	-	தூய்மை உற்பத்தி
CSC	-	பொது சேவைகள் நிலையம்
ED	-	பொறியியல் பிரிவு
EMS	-	சுற்றாடல் முகாமைத்துவ முறைமைகள்
EPC	-	மின்முலாம் பூசுதல் நிலையம்
EPL	-	சுற்றாடல் பாதுகாப்பு உரிமம்
EPM	-	தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்
GP	-	பசுமை ஆக்க விளைவு
HRD	-	மனிதவள அபிவிருத்தி
HRM	-	மனித வள முகாமைத்துவம்
ICT	-	தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்
IDB	-	கைத்தொழில் அபிவிருத்தி சபை
IED	-	கைத்தொழில் பேட்டை பிரிவு
IEs	-	கைததொழில் பேட்டைகள்
ISO	-	சர்வதேச தரநியம அமைப்பு
GMP	-	சிறந்த உற்பத்தி அனுபவம்
HM	-	உயர் முகாமைத்துவம்
HMI	-	மனித இயந்திர இடைமுகம்
MD	-	சந்தைப்படுத்தல் பிரிவு
MM	-	நடுத்தர முகாமைத்துவம்
MOU	-	புரிந்துணர்வு ஒப்பந்தம்
MOIC	-	கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சு
MSMEs	-	நுண்,சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சி
MT	-	மெட்ரிக் தொன்
NCPC	-	தேசிய தூய்மையான உற்பத்தி நிலையம்
NGRS	-	தேசிய பசுமை அறிக்கையிடல் முறைமை
OHSAS	-	தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு முகாமைத்துவ முறைமை

PD	-	திட்டமிடல் பிரிவு
PLC	-	வரையறுக்கப்பட்ட பொது கம்பெனிகள்
PVC	-	பொலி வினயில் குளோரைட்டு
RDD	-	பிரதேச அபிவிருத்தி பிரிவு
RM	-	மூலப்பொருட்கள்
RPD & SC	-	இறப்பர் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் சேவைகள் நிலையம்
SCP	-	நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தி
SCX	-	துணை ஒப்பந்த பரிமாற்றங்கள்
SME	-	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள்
SMI	-	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள்
SLIIT	-	இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவனம்
SLIM	-	இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகம்
SOP	-	பதவி உயர்வு நடைமுறை
SOR	-	ஆட்சேர்ப்பு நடைமுறை
TSD	-	தொழில்நுட்ப சேவைகள் பிரிவு
TOT	-	பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவித்தல்
UNOPS	-	கருத்திட்ட சேவைகளுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம்

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை 2017 டிசம்பர் 31ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை

1. நிறுவனம்

1.1 பின்னணி

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை 1957ஆம் அண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் முதலாவதாக 1966ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. பின்னர் 1969ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்க் கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் தற்போதைய வடிவத்தில் கூட்டிணைக்கப்பட்டது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு இலங்கையின் கைத்தொழில் பிரிவினை அபிவிருத்தி செய்யும் பொறுப்புச் சாட்டப்பட்டுள்ளது.

1.2 சபையின் குறிக்கோள்கள்

1969ஆம் ஆண்டின் 36ஆம் இலக்கக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளவாறு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் குறிக்கோள்கள் பின்வருமாறு:

- இலங்கையின் கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல், முன்னேற்றுதல் போன்றவற்றுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- இந்நாட்டின் பொருளாதாரத்தில் தனியார் மற்றும் அரச துறைகளுக்குச் சொந்தமான அனைத்துக் கைத்தொழில் முயற்சிகளுக்கும் உரிய ஒருங்கிணைப்பும் மற்றும் ஒன்றோடொன்று தொடர்புடைய வளர்ச்சிகளுக்கு ஒத்துழைப்பும் வழங்குதல்
- இலங்கையின் இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல், கைத்தொழில்களில் பயன்படுத்தப்படுகின்ற தொழில்நுட்பச் செயன்முறைகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்துதல் அத்துடன் உள்நாட்டுக் கைத்தொழிலுக்குப் பொருத்தமான தொழில்நுட்பம் மற்றும் உபகரணங்களை விருத்தி செய்தல், உருவாகும் கழிவுகளை மிகச் சிறந்த முறையில் பயன்படுத்துவதற்கான செயன்முறைகளையும் நடைமுறைகளையும் தயாரித்தல் ஆகிய குறிக்கோள்களுடன் கைத்தொழில் ஆராய்ச்சியினை ஊக்குவித்தல்
- உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்தியினை வெளிநாட்டுச் சந்தைக்கு எற்றுமதி செய்வதனை மேம்படுத்துதல்
- கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான அல்லது சாதகமானவாறு சர்வதேச சந்தை மற்றும் வலய ஒத்துழைப்பு ஆகிய துறைகளில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல்
- மூலதனம் மற்றும் கடன், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் அத்துடன் தொழில்நுட்ப வசதிகள், சட்ட ஆலோசனைகள் வழங்குதல் உள்ளிட்ட இலங்கையிலுள்ள எந்தவொரு கைத்தொழில் முயற்சிக்கும் அல்லது கைத்தொழில் நிறுவனத்திற்கும் அவற்றிற்கு ஏதுவாகத் தேவையாக இருக்கின்ற அனைத்து வகைகளிலுமான வசதிகளையும் சேவைகளையும் வழங்குதல்

1.3 சபையின் பிரிவுகளும் சேவைகளும்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான துறைகளுக்குச் சேவைப் பொதியினை வழங்குவதற்கு இச்சபை பின்வரும் ஒன்பது பிரதான பிரிவுகளையும் நிறுவனங்களையும் தோற்பொருள் மற்றும் இறப்பர் பிரிவுக்கான இரண்டு சேவை நிலையங்களையும் கொண்டுள்ளது.

1. நிர்வாகப் பிரிவு (AD)
2. பிராந்திய அபிவிருத்திப் பிரிவு (RDD)
3. திட்டமிடற் பிரிவு (PD)
4. சந்தைப்படுத்தற் பிரிவு (MD
5. கைத்தொழிற் பேட்டைப் பிரிவு (IED)
6. பொறியியல் பிரிவு(ED)
7. தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் ஆலோசனை சேவைகள் நிலையம் (CEDACS).
8. தொழில்நுட்ப சேவைகள் பிரிவு (TSD)
9. நிதிப் பிரிவு (FD)
10. தோற் பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்திப் பிரிவு (CDLPF)
11. இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் பிரிவு (RPD&SC)

25 அலுவலகங்களைக் கொண்ட மாவட்ட அலுவலக வலையமைப்பு பிராந்திய அபிவிருத்திப் பிரிவின் கீழ் தொழிற்படுவதுடன் 19 தொழிற் பேட்டைகள் கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் கீழ் செயற்படுகின்றன. பொறியியல் பிரிவின் கீழ்ச் செயற்படுகின்ற 2 சேவை நிலையங்கள் உள்ளன. தொழில்நுட்ப சேவைப் பிரிவு, பொறியியல் பிரிவு, தோற் பொருள் அபிவிருத்தி நிலையம் மற்றும் இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி நிலையம் உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு தேவையான தொழில்நுட்பம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சேவைகளை வழங்குதல் இவற்றின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது.

கைத்தொழில் அபிவிருத்திச் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 714 ஆக இருப்பதுடன் அது 11 பணியாளர் பிரிவு மட்டத்துடன் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

1.4 நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள்/கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் பிரதான வசதிகளும் சேவைகளும்



1.5 தாபனக் கட்டமைப்பு



2. கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட செயலாற்றுகை – 2017ஆம் ஆண்டு.

2.1 மேலோட்டம்

இந்நாட்டிலுள்ள நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் வளர்ச்சிக்கு ஏதுவான தற்போதைய பிரச்சினைகளைப் பற்றி அதிகமான கவனத்தைச் செலுத்திக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை இவ்வாண்டிற்குள் பல நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தியது. கைத்தொழில் அபிவிருத்திச் சபை 2017ஆம் ஆண்டாகின்ற போது நடைமுறைப்படுத்தியிருந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை மேலும் இடையறாமல் செயற்படுத்துவதை வலுவூட்டுவதுடன் உள்நாட்டுக் கைத்தொழில்களின் தொழிற்பாட்டினைக் கட்டியெழுப்புவதும் இந்த அபிவிருத்திச் செயற்பாடுகளின் முக்கியமான நோக்கமாக அமைந்திருந்தது.

அமைச்சின் ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்காகச் செயன்முறைகளை அபிவிருத்தி செய்தல், உற்பத்தி அபிவிருத்தி, மனித மூலதன அபிவிருத்தி, வளங்கள் தொடர் அபிவிருத்தி, உற்பத்தி முறைமைகள் அபிவிருத்தி, உற்பத்தித் தரத்தினை உயர்த்துதல், தொழில் முயற்சித் திறன்களை அபிவிருத்தி செய்தல், சந்தைப்படுத்தல் மற்றும் வர்த்தகக் குறியிடுதலை அபிவிருத்தி செய்தல், தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல், தொழில் முயற்சி அபிவிருத்தி, சிறந்த முகாமைத்துவ அனுபவங்களை மேம்படுத்துதல், விசேட மூலப்பொருட்களை வழங்குவதற்கு வசதிகளை வழங்குதல், நிதியியல் சேவைகளை அறிந்துகொள்வதற்கு வசதிகளை வழங்குதல், கைத்தொழில் நெறிப்படுத்தலுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல், மற்றும் புதிய நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துதல் போன்ற துறைகளில் நிகழ்ச்சித் திட்டங்களையும் கருத்திட்டங்களையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதியத்தினை ஈடுபடுத்துவதற்கு வாய்ப்புக் கிட்டியது.

இதற்கு மேலதிகமாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் நிதியளிப்பின் கீழ்த் தொழில் முயற்சிக் கிராமங்களையும் பெண்களின் தொழில் முயற்சி அபிவிருத்தி, உற்பத்திக் கிராமங்களையும் அபிவிருத்தி செய்தல், மேல் மாகாண உணவுக் கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் வெட்டுமரம் சார்ந்த கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பாகப் பல நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளது.

2.2 செயலாற்றுகை மீளாய்வு

இவ்வருடத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2.1 படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு பொழிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைவாக மேற்படி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

01. ஆற்றல் அபிவிருத்தி, தொழில் முயற்சி அபிவிருத்தி, மற்றும் முகாமைத்துவப் பயிற்சி நிகழ்சித் திட்டங்கள் – 1507 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அதில் கலந்துகொண்ட புதிய மற்றும் தற்போதுள்ள தொழில் முயற்சியாளர்களின் எண்ணிக்கை 2,289 ஆகும்.

02. உணவு, இரசாயனப் பொருட்கள், எண்ணெய் மற்றும் கொழுப்பு போன்ற துறைகள் பற்றிய தொழில்நுட்பத்தை வழங்குதல், தொழில்நுட்பத் திறன் மற்றும் சேவை பெறுனர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் – நடாத்தப்பட்ட மொத்த நிகழ்ச்சிகள் 258 ஆக அமைந்ததுடன் 3,905 எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களுக்கு அதனுடாக நன்மை கிட்டியது.

03. 188 கருத்திட்டச் சாத்தியவள அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.
04. வழங்கப்பட்ட வார்ப்பு வேலை நிலைய மற்றும் பொறியியல் சேவைகள் மற்றும் புதிதாக இயந்திரோபகரணங்களைத் தயாரித்தல் – 742
05. சந்தைப்படுத்தலுக்கான உதவிகளை வழங்குதல் - 704
06. நிதி வசதியினை அண்மித்துக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் – 105
07. சந்தைக் கண்காட்சி வாயிலாக நன்மைகளைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை – 1,200
08. விசேட மூலப்பொருட்களை வழங்குவதற்கான வசதிகளை வழங்குதல், **பதனிடப்பட்ட**
    - இறப்பர் கலவை – மெ.தொ. 62
    - இறப்பர் பால் – லீற்றர் 13, 750

    பதனிடப்படாத
    - கழிவு மூலப்பொருட்கள் – மெ.தொ. 1680
    - kasper போத்தல் – 3245
09. 13 கைத்தொழிற் பேட்டைகளில் கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்.
10. முறைமை உறுதிப்படுத்தும் மற்றும் தரச் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை
    - GMP 16 கைத்தொழில்கள்
    - ISO 13 கைத்தொழில்கள்

2.3 தொழில்நுட்பத்தை வழங்குதல், சேவை பெறுனரின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி

உணவு, இரசாயனப் பொருட்கள், எண்ணெய், நார், தோற்பொருட்கள், இறப்பர் போன்ற கைத்தொழில் துறை பற்றிய தொழில்நுட்பத்தை வழங்கும் 258 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அந்நிகழ்ச்சித் திட்டங்களினூடாக 3950 எதிர்காலத் தொழில் முயற்சியாளர்கள் நன்மை பெற்றனர். "கடல் தாவரங்களினால் போசாக்கு ஊட்டப்பட்ட பிஸ்கட்" "பலா விதைகளினால் தயாரிக்கப்பட்ட இனிப்பு வகைகள்" மற்றும் "நீரகற்றப்பட்ட மரக்கறி சூப் கலவை" ஆகிய மூன்று உற்பத்திகளும் புதிதாகத் தயாரிக்கப்பட்டதுடன் தற்போதுள்ள மற்றும் புதிய கைத்தொழிலாளர்கள் 243 பேருக்கு சேவை பெறுனர்களின் தேவைப்பாட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்ட 41 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

மேலும், 8 வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களைப் புதிதாகப் பெற்றுக்கொண்டு, அத்தொழில்நுட்பங்கள் பல்வேறு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன.



படம் 2.1 – சபையினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் - 2017

2.4 – பிரிவு வாரியாக 2017ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தின் முன்னேற்றம் பற்றிய பொழிப்பு.

ஒவ்வொரு துறையினதும் செயலாற்றுகை

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
பிரிவு: தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவைகள் நிலையம்				
1	வழங்கப்பட்ட விருதுகளின் எண்ணிக்கை	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	3	2
		பங்கேற் ஊழியர்கள்/ கைத்தொழில்களின் எண்ணிக்கை	60	61
2	பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (தொழில்முயற்சி அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் நிதி முகாமைத்துவம் போன்றவை)	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	8	6
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	160	119
3	இலத்திரனயியல்- செய்திச் சஞ்சிகையினைப் பிரசுரித்தல்	பிரசுரிக்கப்பட்ட ஈ – செய்திச் சஞ்சிகைகளின் எண்ணிக்கை	4	3
4	கைத்தொழில் சஞ்சிகையினை ஆக்குதல்	பிரசுரிக்கப்பட்ட சஞ்சிகைகளின் எண்ணிக்கை	3	2
5	தொழில் முயற்சியாளர்கள்/ கைத்தொழிலாளர்கள்/ அரச மற்றும் வெளி நிறுவனங்களுக்கான சேவை பெறுனர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்	நடாத்தப்பட்ட சேவை பெறுனர்களின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	4	16
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	80	293
6	தகவல்களைப் பிரச்சாரம் செய்தல்	வழங்கப்பட்ட தகவல்களின் எண்ணிக்கை	700	1647
7	இயந்திர உபகரணங்கள்/ இணையத்தளம்/ நூல்களின் பெயர்ப்பட்டியல்/ தரவுக்களஞ்சியத்தை இற்றைப்படுத்துதல்	உள்ளடக்கப்பட்ட உருப்படிகளின் எண்ணிக்கை	1200	2727
பிரிவு: பொறியியல் பிரிவு				
1	மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல்	தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளின் எண்ணிக்கை	66	95
2	பதனிடப்படாத மூலப்பொருட்களை நியாய விலையில் வழங்குதல் (அலுமினியம், செப்பு, பித்தளை, இரும்பு மற்றும் ஏனைய கழிவுகள்)	மூலப்பொருட்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	88	195

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
3	கைத்தொழில் சேவைகளை வழங்குதல் – இயந்திர உருவாக்கம், வெப்பப் பதனிடல்	நிறைவேற்றப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை	66	174
4	இயந்திரோபகரணங்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை	உற்பத்தி செய்யப்பட்ட மற்றும் விற்பனை செய்யப்பட்ட இயந்திரோபகரணங்களின் எண்ணிக்கை	44	101
5	வார்ப்பு சேவைகளை வழங்குதல் (இரும்பு மற்றும் இரும்பல்லாத)	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	66	44
6	செப்பு, நிக்கல், குரோமியம் மற்றும் வன்குரோமியம் மின்முலாம் பூசுதல் சேவைகளை வழங்குதல்	பயனடைந்த கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	44	225
7	கலந்துரையாடல்/ மதியுரை சேவை வழங்குதல்	வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை	44	3
8	தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (செயலமர்வுகள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சிகள்)	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	3	15
9	பட்டப்படிப்பினைத் தொடர்கின்ற மாணவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (கைத்தொழிற்சாலைகளில் நடைமுறைப் பயிற்சி)	பங்கேற்ற பயிற்சி பெறுனர்களின் எண்ணிக்கை	22	3
10	இயந்திர உபகரணங்கள் மற்றும் ஏனைய உற்பத்திகளை வடிவமைத்தல் மற்றும் புதிதாக உற்பத்தி செய்தல்	வடிவமைக்கப்பட்டு உற்பத்தி செய்யப்பட்ட புதிய உற்பத்திகளின் எண்ணிக்கை	7	2
பிரிவு: கைத்தொழிற் பேட்டைப் பிரிவு				
1	புதிய கைத்தொழில்களை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.	உருவாக்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	20	16
		உருவாக்கப்பட்ட தொழில்வாய்ப்புக்களின் எண்ணிக்கை	400	356
2	தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பராமரிப்பு வசதிகளை மேம்படுத்துதல்.	கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை	16	13
3	தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளைச் சுற்றாடல் நேயம்மிக்க எண்ணக்கருக்களுடன் கூடியவாறு விருத்தி செய்தல்.	விருத்தி செய்யப்பட்ட கைத்தொழிற் பேட்டைகளின் எண்ணிக்கை	1	1

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
4	தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளை விரிவாக்குவதற்காக அண்மித்த இடங்களிலுள்ள காணிகளை இனங்காணுதல்.	விரிவாக்கப்பட்ட காணிகளின் எண்ணிக்கை	1	1
5	ஒவ்வொரு கைத்தொழிற் பேட்டைக்கும் புதிய கைத்தொழிலாளர்களைத் தெரிவு செய்தல்.	தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை.	30	27
6	தெரிவு செய்யப்பட்ட கைத்தொழிலாளர்களுக்கு அபிவிருத்தி செய்யப்பட்ட காணித் துண்டுகளை/ கட்டிடங்களை ஒதுக்கிக் கொடுத்தல்.	ஒதுக்கப்பட்ட காணித் துண்டுகளின் எண்ணிக்கை	20	21
7	குத்தகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுதல்.	கைச்சாத்திடப்பட்ட குத்தகை ஒப்பந்தங்களின் எண்ணிக்கை	20	44
8	புதிய நில அளவைத் திட்டங்களைத் தயாரித்தல் (பன்னல, கலிகமுவ, பானலுவ)	தயாரிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை	3	4
9	ஒவ்வொரு கைத்தொழிற் பேட்டைக்கும் பொருளடக்க அட்டவணை(கைத்தொழில் தோற்றப்பாடு) தயாரித்து அதனைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் இணையத்தளத்தில் பிரசுரித்தல்.	தயாரிக்கப்பட்ட தோற்றப்பாடுகளின் எண்ணிக்கை	1	2
10	கைத்தொழிற் பேட்டைகளில் காணப்படுகின்ற மூடப்பட்ட நிலையிலுள்ள கைத்தொழிற் சாலைகளைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சுவீகரித்துக் கொள்ளுதல்.	சுவீகரிக்கப்பட்ட காணித்துண்டுகளின் எண்ணிக்கை.	8	9
11	தற்போதுள்ள கைத்தொழிற் பேட்டைகளை மேம்படுத்துவதற்கும் அடுத்துறும் வருடத்திற்கு நிதியினைக் கோருவதற்கும் புதிய கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.	முன்மொழிவுகளின் எண்ணிக்கை.	1	1
12	கைத்தொழிற் பேட்டைகள் வாயிலாக வருமான உற்பத்தி.	ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் – வாடகை (ரூ.மி.)	45.0	51.5
		ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் – நீர்வழங்கல் சேவை (ரூ.மி.)	6.0	4.9

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
		ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் – நிலுவைப் பணத்தொகையினை அறவிட்டுக் கொள்ளுதல் (ரூ.மி.)	10.0	22.5
		ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் – குத்தகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுதல் (ரூ.மி.)	0.3	0.8
		ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் – கைத்தொழிற் பேட்டைகளைப் பேணிவருவதற்காக சுழற்சி நிதியமொன்றைத் தாபித்தல் (ரூ.மி.)	3.0	6.7
13	உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொடர்புடைய நிர்மாண நடவடிக்கைகள் பற்றிய செயலமர்வு	செயலமர்வுகளின் எண்ணிக்கை (ரூ.மி)	1	1
பிரிவு: தோற்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் – தோற்பொருட்கள் பிரிவு				
1	தரத்தை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	3	7
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	50	121
2	உற்பத்தியாளர்களுக்குப் பதனிடல் வசதிகளை வழங்குதல். (பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தி)	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	180	131
3	வருடாந்தப் பாதணி மற்றும் தோற்பொருள் வர்த்தகக் கண்காட்சியினை ஒழுங்கு செய்தல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	1	1
4	சேவை பெறுனர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	3	3
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	50	46
5	தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (பாதணி/ தோற்பொருட்கள்) கட்டுபத்த.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	10	8
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	100	86
6	தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் (பாதணி/ தோற்பொருட்கள்) பிரதேச	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	7	18
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	100	330

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
7	பாதணி இயந்திரோபகரணங்களைப் பராமரித்தல் பற்றிய நிகழ்ச்சித் திட்டம்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	2	1
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	22	9
பிரிவு: சந்தைப்படுத்தற் பிரிவு				
1	கொள்வனவாளர்கள் – விற்பனையாளர்கள் சந்திப்புக்களை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட கொள்வனவாளர் – விற்பனையாளர் சந்திப்புக்களின் எண்ணிக்கை	2	4
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	100	245
2	பதனிடப்படாத மூலப்பொருட்களை நியாய விலையில் வழங்குதல். (அலுமினியம், செப்பு, பித்தளை, இரும்பு மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள்)	வழங்கப்பட்ட மூலப்பொருட்களின் அளவு (மெ.தொ.)	900	1680.6
		மூலப்பொருட்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை.	300	413
3	கைத்தொழிலாளர்களுக்குத் துணை ஒப்பந்தங்களை வழங்குதல்.	துணை ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை.	35	21
4	லக்கம் விற்பனை நிலையங்கள் வாயிலாகச் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல்.	வசதிகள் வழங்கப்பட்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை.	50	25
5	கண்காட்சிகளை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட கண்காட்சிகளின் எண்ணிக்கை	1	7
		பயன் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை.	500	1200
6	சிறந்த கைத்தொழில் அனுபவங்கள் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்துவதற்கு வெளியரங்கச் செயற்பாடுகளைத் திட்டமிடுதல்.	ஒழுங்கு செய்யப்பட்ட அமர்வுகளின் எண்ணிக்கை.	2	2
7	வெளிவாரியான சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கான வசதிகளை வழங்குதல்.	நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.	1	2
பிரிவு: இறப்பர் உற்பத்தி அபிவிருத்திச் சேவை நிலையம்				
1	உற்பத்தித்தரப் பரிசோதனை மற்றும் சான்றளித்தல்.	வழங்கப்பட்ட சான்றளிப்புக்களின் எண்ணிக்கை	80	135
		பரிசோதிக்கப்பட்ட உற்பத்தி மாதிரிகளின் எண்ணிக்கை.	3100	1150

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
2	கைத்தொழிலாளர்களுக்குத் துணை ஒப்பந்தங்களை வழங்குதல்.	துணை ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	10	2
3	சேவை பெறுனர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	2	5
		கைத்தொழிலாளர்கள்/ நிறுவனங்களின் எண்ணிக்கை	0	5
4	இறப்பர் உற்பத்தி அபிவிருத்தியினை மேற்கொள்வதற்கு உதவி வழங்குதல்.	நிறைவேற்றப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை	33	12
		தொழில் முயற்சிகளின் எண்ணிக்கை.	20	9
5	கலந்தாலோசனை/ மதியுரை சேவைகளை வழங்குதல்.	வழங்கப்பட்ட சேவைகளின் எண்ணிக்கை	96	86
6	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கான இறப்பர் உற்பத்தியின் அபிவிருத்தி.	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்காக விருத்தி செய்யப்பட்ட உற்பத்திகளின் எண்ணிக்கை.	24	15
7	பதனிடல் செய்யப்பட்ட பொருட்களை வழங்குதல் (மையநீக்கம் செய்யப்பட்ட இறப்பர் பால்)	வழங்கப்பட்ட அளவு (லீற்றர்)	13750	9351
		இறப்பர் பாலைப் பெற்றுக்கொண்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை.	95	473
8	பதனிடப்பட்ட பொருட்களை வழங்குதல் (இறப்பர் கலவை)	கலவைகளைப் பெற்றுக்கொண்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை.	62000	26455
		கலவைகளைப் பெற்றுக்கொண்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	320	1869
9	அரைக்கப்பட்ட இறப்பர் கலவை	வழங்கப்பட்ட அளவு (கி.கிராம்)	38,000	14,354
		கலவைகளைப் பெற்றுக்கொண்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	20	51
10	இறப்பர் உற்பத்திகளை உள்வாரியாக உற்பத்தி செய்தல்.	நிறைவேற்றப்பட்ட வேலைகளின் எண்ணிக்கை	6	2
11	தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் (செயலமர்வுகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்)	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	33	14

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
பிரிவு: பிரதேச அபிவிருத்திப் பிரிவு				
1	சர்வதேச சந்தையினை அடைந்துகொள்வதற்காக வர்த்தகக் கண்காட்சிகள் மற்றும் ஏனைய கண்காட்சிகள் வாயிலாகக் கைத்தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	35	16
2	கொள்வனவாளர்கள் – விற்பனையாளர்கள் சந்திப்புக்களை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட கொள்வனவாளர் – விற்பனையாளர் சந்திப்புக்களின் எண்ணிக்கை	10	12
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	500	105
3	ஏற்றுமதிக் கைத்தொழிலுக்காகப் பிணை ஒப்பந்தங்களை வழங்குவதற்கு வசதிகளை வழங்குதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	25	3
4	சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்குப் புதிய தொழில்நுட்பத்தை வழங்குதல்.	வழங்கப்பட்ட புதிய தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	5	5
		பயன்பெற்ற கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	25	5
5	சர்வதேசத் தரம் மற்றும் சான்றிதழ் அளிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.	தரநியமச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	6	5
6	கடன் மற்றும் மானியங்களை அடைந்துகொள்வதற்கான வசதிகளை வழங்குதல்.	கடன் பெற்றுக்கொண்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	25	8
7	**பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்**			
	7.1 தொழில்நுட்பம்	நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	50	72
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	500	807
	7.2 முகாமைத்துவம்	நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	25	80
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை	500	1112
	7.3 நிதி	நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	25	41
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	375	508

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
8	உற்பத்தி அபிவிருத்தி மற்றும் தரத்தினை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.	அபிவிருத்தி செய்யப்பட்ட உற்பத்திகளின் எண்ணிக்கை	15	85
9	மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரித்தல்.	தயாரிக்கப்பட்ட அறிக்கைகளின் எண்ணிக்கை	20	10
10	கடனைப் பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.	கடன் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	50	73
11	பதனிடப்பட்ட பொருட்களை வழங்குதல் (கஸ்பர்)	வழங்கப்பட்ட அளவு (போத்தல்)	4000	3245
		கலவையினைப் பெற்றுக்கொண்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	100	23
12	கைத்தொழிலாளர்களுக்குத் துணை ஒப்பந்தங்களை வழங்குதல்.	துணை ஒப்பந்தங்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	25	13
13	உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	75	14
		பங்கேற்றவர்களின் எண்ணிக்கை	75	194
14	முறைமைச் சான்றிதழ் அளித்தல் மற்றும் உற்பத்தித் தரச்சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்			
	14.1 GMP	சான்றிதழ் அளிப்புக்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	20	16
	14.2 ISO		2	13
15	பட்டப்படிப்பு மாணவர்களுக்கான பயிற்சிகளை வழங்குதல் (கைத்தொழற்சாலைகளில் நடைமுறைப் பயிற்சி)	பங்கேற்ற பயிற்சி பெறுனர்களின் எண்ணிக்கை	100	18
16	பயிற்சி பெறாத ஊழியர்கள் மற்றும் இளைஞர்களின் ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	25	105
		பயனடைந்த ஊழியர்களின் எண்ணிக்கை	500	255
17	தொழில்முயற்சித் திட்டங்கள்/ கருத்திட்ட சாத்தியவள அறிக்கைகளைத் தயாரித்தல்	தயாரிக்கப்பட்ட தொழில்முயற்சித் திட்டங்களின் எண்ணிக்கை	125	83
18	கடன் வசதிகளை அடைந்துகொள்வதற்கான வசதிகளை வழங்குதல்	கடன்களைப் பெற்றுக்கொண்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	125	24
19	சந்தைப்படுத்தலை மேம்படுத்துவதற்கான உதவிகளை வழங்குதல்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	50	14

இல.	செயற்பாடு	செயலாற்றுகைக் குறியீடு	ஒட்டுமொத்தப் பௌதிக முன்னேற்றம்	
			இலக்கு	அடைவு
20	தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	50	41
21	விசேட நிகழ்ச்சித் திட்டங்கள்		23	675
பிரிவு: தொழில்நுட்ப சேவைகள் பிரிவு				
1	உற்பத்திச் செயன்முறையினை மேம்படுத்துவதன் ஊடாகச் சிறிய, நடுத்தர அளவிலான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல் – உணவுக் கைத்தொழில்	தொழில்நுட்பச் செயன்முறையினை மேம்படுத்துவதனூடாக விருத்தி செய்யப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	40	43
2	உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களைப் பெற்றுக்கொள்ளுதல்	பெற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பங்களின் எண்ணிக்கை	5	8
3	உற்பத்தி அபிவிருத்திப் பணிகள்	அபிவிருத்தி செய்யப்பட்ட உற்பத்திகளின் எண்ணிக்கை	4	3
4	தற்போதுள்ள கைத்தொழில்களுக்கு பசுமை உற்பத்தித்திறன் எண்ணக்கருவினை அறிமுகப்படுத்துதல்.	பசுமை உற்பத்தித்திறன் எண்ணக்கரு அறிமுகப்படுத்தப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை	5	5
5	சேவை பெறுனர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	4	17
		பயனடைந்த கைத்தொழிலாளர்கள்/ நிறுவனங்களின் எண்ணிக்கை	40	496
6	கைத்தொழில் சான்றிதழ் பயிற்சி நெறிகளை நடாத்துதல்	நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	3	6
		நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	30	105
7	பொருத்தமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தை வழங்குதல்	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	6	10
8	தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.	நடாத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை	48	90

2.4.1. அட்டவணை



படம் 2.2 – வசதிகள் வழங்கப்பட்ட தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை - 2017

3. விசேட கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் -2017

3.1 இலங்கையிலுள்ள சிறிய அளவிலான உணவுக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்கான நிதியுதவி

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான உணவுக் கைத்தொழில்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நோக்குடன் மேல் மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட உணவுக் கைத்தொழில் அபிவிருத்திக் கருத்திட்டம் ஓர் முன்னோடிக் கருத்திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்நாட்டில் சிறியளவிலான உணவுக் கைத்தொழில்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்குச் சிறியளவிலான உணவுக் கைத்தொழிலாளர்களுக்கு நிதியுதவியினை வழங்குவதற்காக 2017ஆம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நிதியுதவி வழங்கப்பட்ட கைத்தொழில்கள் அவற்றின் செயன்முறைகளைப் பற்றிய பாரியளவிலான மேற்பார்வைகளை மேற்கொண்டதன் பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட முறைசார்ந்த மதிப்பீட்டு முறைமையொன்றின் ஊடாக விசேட பரிசோதனைச் செயன்முறையொன்றின் வாயிலாகத் தொிவு செய்யப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவு கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மேல் மாகாணத் தொழில் முயற்சியாளர்களின் ஒத்துழைப்புடன் இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தியது. தொிவுக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளுக்கு அமைவாக 2017ஆம் ஆண்டில் இக்கருத்திட்டத்தில் கலந்து கொள்வதற்கு சிறியளவிலான உணவுக் கைத்தொழிலாளர்கள் 50 பேர் தொிவு செய்யப்பட்டார்கள். தேவையான மட்டத்தைவிட அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொண்டிருந்த கைத்தொழில்களுக்குப் பரிசீலனைக்குட்படுத்தப்படுகின்ற சம்பந்தப்பட்ட கைத்தொழில்களின் உற்பத்திச் செயன்முறையினை நவீனமயப்படுத்துவதற்குத் தேவையான இயந்திரோபகரணங்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டு நிதியுதவிகள் வழங்கப்பட்டன. இக்கொடைகள் பயனாளி தேவையாக அமையக்கூடிய இயந்திரோபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு முதலீடு செய்கின்ற ஒட்டுமொத்தக் கருத்திட்டச் செலவினத்தில் ஆகக்குறைந்தது நூற்றுக்கு ஐம்பது வீதமான பங்களிப்பு ஆகும்.

இதற்கமைவாகக் கருத்திட்டம் நிறைவடையும் போது ஆகக் கூடியது ரூபாய் இரண்டு இலட்சம் கொடை வழங்கப்படுகின்றது. இதன்படி இந்த முன்னோடிக் கருத்திட்டத்திற்கு 43 கைத்தொழிலாளர்கள் தகைமை பெற்றதுடன் அவர்கள் அனைவருக்கும் அவர்களின் உற்பத்திச் செயன்முறையில் உற்பத்தித் திறனை மேம்படுத்திக் கொள்வதை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான வாய்ப்புக்கள் கிட்டின.

அபிவிருத்தி செய்யப்பட்ட துறைகளில் சிலவற்றைக் கீழே காணலாம்

- உற்பத்திக் கொள்ளளவினை அதிகரித்தல்
- உற்பத்தி பன்முகப்படுத்தப்படுதல்
- உற்பத்திகளின் தரம் மற்றும் பொதியிடலை மேம்படுத்துதல்
- புதிய தொழில்வாய்ப்புக்களை உருவாக்குதல்

3.2 பாதணி மற்றும் தோற்பொருள் வர்த்தகக் கண்காட்சி - 2017

கைத்தொழில் மற்றம் வாணிப அலவல்கள் அமைச்சு, கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் இலங்கை ஏற்றுமதிச் சபை ஆகியவை ஒன்றிணைந்து இலங்கைப் பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தியாளர்களின் சங்கத்தின் உதவியுடன் 9ஆவது சர்வதேச மற்றும் தோற்பொருள் கண்காட்சி 2017 கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2017 பெப்ரவரி 3 – 5ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது

சந்தை வாய்ப்புக்களை மேம்படுத்திக் கொள்ளுதல் மற்றும் இந்நாட்டுத் தொழில்

முயற்சிச் சமுதாயத்தின் அறிவினை மேம்படுத்திக் கொள்ளுதல் இக்கண்காட்சியின் நோக்கமாக அமைந்தது.100 உள்நாட்டுக் கம்பனிகள் மற்றும் 33 வெளிநாட்டுக் கம்பனிகள் 233 கண்காட்சி கூடங்கள் வாயிலாக தங்கள் உற்பத்திகளை காட்சிப்படுத்தினர்.

3.3 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கான கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் குறியீடு இடுதல் நிகழ்ச்சித் திட்டத்துடன் தெரண சிறிய, நடுத்தரக் கைத்தொழிலாளர்கள் சமூகம்.

"தெரண தொலைக்காட்சி" அலைவரிசை வாயிலாக சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களுக்கு நடாத்தப்பட்ட "கை.அ.ச. உடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் சமூகம்" வர்த்தகக் குறியிடல் நிகழ்ச்சித் திட்டம் நாடளாவிய ரீதியில் அனைத்து மாவட்டங்களும் உள்வாங்கப்படும் வகையில் தொிவு செய்யப்பட்ட எதிர்காலச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 30 தொழில் முயற்சியாளர்களுடன் வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

- விசேட கழிவுடன் கூடிய கட்டண முறைமையொன்றின் கீழ் தெரண ஊடக வலையமைப்பில் வர்த்தக விளம்பரங்களைப் பிரசுரிப்பதற்கான வாய்ப்பு.
- இலங்கைச் சந்தைப்படுத்தல் நிறுவகம், இலங்கைத் தகவல் தொழில்நுட்ப நிறுவகம் மற்றும் கணக்காய்வாளர் சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து சந்தைப்படுத்தல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணக்கியல் பற்றிய செயலமர்வுகளை நடாத்துதல்.
- அவர்களின் வர்த்தகக் குறியீட்டினை மேம்படுத்தும் பொருட்டு கண்காட்சிகளை ஏற்பாடு செய்தல்.
- அவர்களின் உற்பத்திகளுக்குப் பல்பொருள் அங்காடிகளில் அடுக்கி வைக்கும் வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- தொடர்ச்சியாக நிபுணத்துவம் மிக்கவர்களுடன் அனுபவங்களைப் பரிமாறிக் கொள்வதற்கான அரங்குகளை நடாத்துதல்.

3.4 பீ.யூ.எம். நெதர்லாந் சீனியர் எக்ஸ்பேட் அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்

பல்வேறு கைத்தொழில் பிரிவுகளின் உற்பத்தித் தரத்தினை உலகளாவிய தரங்களுக்கு ஏற்ப மேம்படுத்தும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மேற்கத்தைய நிபுணத்துவம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளும் வகையில் பொறிமுறையொன்றைத் தாபிப்பதற்குக் கைத்தொழில் அபிவிருத்தி சபைக்கும் பீ.யூ.எம். நெதர்லாந் சீனியர் எக்ஸ்பேட் அமைப்புக்குமிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டது. பீ.யூ.எம். நெதர்லாந் சீனியர் எக்ஸ்பேட் என்பது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் தொழில் முயற்சி, தன்னிறைவு மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றை மேம்படுத்தும் பொருட்டுப் பணியாற்றுகின்ற இலாபத்தினை அடிப்படையாகக் கொள்ளாத நிறுவனமாகும்.

3.5 பொதியிடல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் 2017 வாயிலாக உணவுத்துறையில் சிறிய, நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்குதல்.

தரம் மற்றும் பாதுகாப்பு உணவுப் பதனிடல் கைத்தொழிலில் காணப்பட வேண்டிய மிகவும் அடிப்படையான அம்சங்களாக அமைவதனால் உணவு உற்பத்தியினைப் பொதியிடல் கைத்தொழில்களில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய ஒரு பிரிவாகும். ஆகவே, சபையின் பிரதேச அபிவிருத்திப் பிரிவு கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சுடன் இணைந்து உணவு உற்பத்திகளின் தரத்தை உயர்த்துவதற்காக உணவு உற்பத்தித் துறையின் கைத்தொழில்களுக்கு விசேட நிதி வசதிகளை வழங்குவதுடன் உணவு உற்பத்தித் துறையினை விருத்தி செய்யும் பொருட்டு நடைமுறை ரீதியானதும் புத்தம் புதியதுமான நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இக்கருத்திட்டம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறு.

1. உற்பத்திகளின் தரத்தினை உச்ச மட்டத்திற்குக் கொண்டுவரும் பொருட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்குத் தற்போது வழங்கப்படும் பொதியிடல் மற்றும் சுட்டுத்துண்டு இடுதல் (லேபல் இடுதல்) முறைகளை மேம்படுத்துவதற்கு வசதிகளை வழங்குதல்.
2. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு வசதிகளை வழங்கும் பொருட்டு மதியுரைஞர்களாகப் பணியாற்றுவதற்குப் பொதியிடல் பற்றிய தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்களைப் பயிற்றுவித்துப் பின்வரும் நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக இக்குறிக்கோளை அடைந்து கொள்வதற்குத் திட்டமிடப்பட்டது.

   I. தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்களுக்கான பொதியிடல் பற்றிய பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிக்கும் உயர்ந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.

   II. உணவுப் பொதியிடல் நிகழ்ச்சித் திட்டம்

3.6 பிளாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி

பிளாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி சார்ந்த துறையில் கைத்தொழில் ஒன்றை ஆரம்பிக்க எதிர்பார்க்கின்ற எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களின் பங்களிப்புடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் பிளாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி பற்றிய தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் இடைநடுவே அதில் கலந்துகொண்டவர்களுக்கு நடைமுறை அறிவினை வழங்கும் பொருட்டு அவற்றை உருவாக்கும் இடத்தைப் பார்வையிடுவதற்கு மொரட்டுவப் பல்கலைக்கழகத்திற்குக் கூட்டிச் செல்லப்பட்டதுடன் அதன் மூலம் அவர்கள் பிளாஸ்டிக் கழிவு மீள்சுழற்சியினை மேற்கொள்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற இயந்திர உபகரணங்கள் மற்றும் அவற்றினூடாக மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திகள் பற்றி விரிவான அனுபவத்தினைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. மேலும், இந்தச் செயலமர்வின் ஊடாகப் பின்வரும் துறைகள் உள்வாங்கப்பட்டன:

- 'கழிவு' என்பதனை அறிமுகப்படுத்துதல், கழிவு வகைப்படுத்துதலில் உள்ள அனுகூலங்கள், பிளாஸ்டிக் கழிவு வகைகள், மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் வகைகள், இயற்கையாக உக்கிப் போகும் பிளாஸ்டிக் வகைகள், மற்றும் தனிப்பட்ட ரீதியிலும் சமூகம் என்ற ரீதியிலும் பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உள்ள பொறுப்புக்கள்.
- பிளாஸ்டிக் கழிவு முகாமைத்துவத்துக்கான சட்ட திட்டங்கள்.
- பிளாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி செய்வதற்கான செயன்முறை.
- பிளாஸ்டிக் கழிவு மீள்சுழற்சி செய்வதற்குப் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பம் மற்றும் இயந்திரோபகரணங்கள்.
- மீள்சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்கைப் பயன்படுத்திப் பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி மற்றும் இயற்கையாக உக்கிப்போகும் பிளாஸ்டிக் உற்பத்தி செய்தல்.

3.7 அகற்றப்படுகின்ற கடதாசிகளை மீள்சுழற்சி செய்தல் மற்றும் கைகளினால் தயாரிக்கப்படுகின்ற கடதாசி உற்பத்தி.

இயற்கை வளங்கள் மருகி வருவதற்குத் தீர்வாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்பப் பிரிவினால் கடதாசிக் கழிவுகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்துதல் மற்றும் கைகளினால் கடதாசியை உற்பத்தி செய்தல் பற்றி 2 நிபுணர்களின் பங்கேற்புடன் தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

4. ஒவ்வொரு துறையினதும் முன்னுரிமைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

4.1 நிர்வாகப் பிரிவு (AD)

4.2 பிரதேச அபிவிருத்திப் பிரிவு (RDD)

4.3 திட்டமிடல் பிரிவு (PD)

4.4 சந்தைப்படுத்தல் பிரிவு (MD)

4.5 கைத்தொழிற் பேட்டைப் பிரிவு (IED)

4.6 பொறியியல் பிரிவு (ED)

4.7 தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவைகள் நிலையம் (CEDACS)

4.8 தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD)

4.9 தோற்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் (CDLPF)

4.10 இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் (RPD & SC)

4.1 நிர்வாகப் பிரிவு (AD)

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அனைத்து மனித வளங்களையும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாடுகள், பெறுகைகள் செயற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு, போக்குவரத்துப் பணிகளை ஏற்பாடு செய்தல், நடைமுறைப்படுத்துதல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீட்டுச் சபையின் நிர்வாக மற்றும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவின் பொறுப்பாகும்.

4.1.1 இப்பிரிவிற்குச் சாட்டப்பட்டுள்ள பணிகள்:

- முகாமைத்துவச் சுற்று நிருப இலக்கம் 30இற்கு அமைவாகத் தாபன மற்றும் மீள்கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- சம்பள முரண்பாடுகளை நீக்குதல்.
- கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஆளணியினை வலுவூட்டும் பொருட்டு முகாமைத்துவச் சுற்று நிருப இலக்கம் 30இற்கு அமைவாக ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளைத் தயாரித்தல்.
- பொது ஆட்சேர்ப்பு, செயலாற்றுகை மதிப்பீடு, பதவியுயர்வு மற்றும் ஓய்வு பெறச்செய்தல் போன்றவை தொடர்பான பணிகளை நடைமுறைப்படுத்துதல்.
- ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல்.
- கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணியாளர்களின் அறிவினை எதிர்பார்க்கப்பட்ட மட்டத்திற்குப் பொருந்தக்கூடியவாறு மேம்படுத்துவதற்குத் தேவையான வெளிநாட்டுப் புலமைப் பரிசில்கள்/ பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.
- உள்நாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கமைத்தல் மற்றும் வழங்குதல்.
- ஊழியர் நலனோம்புகை மற்றும் ஊழியர் இழப்பீட்டுத் திட்டங்களை முகாமைத்துவம் செய்தல்.
- மனக்குறைகள் தொடர்பாகப் பணியாற்றுதல்.
- உள்வாரியான பாதுகாப்புச் சேவை மற்றும் பாதுகாப்பு அலுவல்களை முகாமைத்துவம் செய்தல்.
- சபையின் பெறுகைகள் நடவடிக்கைகளை முகாமைத்துவம் செய்தல்.
- சபையின் போக்குவரத்துச் சேவைகளை முகாமைத்துவம் செய்தல்.
- சட்ட நடவடிக்கைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக இடையீடு செய்தல்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊழியர்களின் செயலாற்றுகை மட்டத்தை உயர்த்தும் பொருட்டு அவர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் ஆற்றலை விருத்தி செய்வதற்கும் நோக்கம் கொண்டதாக நிர்வாக மற்றும் மனித வளங்கள் அபிவிருத்திப் பிரிவினால் பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 26 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் மிகவும் முக்கியமான 5 நிகழ்ச்சித் திட்டங்கள் பின்வருமாறு:

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஊழியர்களுக்காக 2017ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

இல.	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பங்குபற்றிய வர்களின் எண்ணிக்கை
1.	தொழில்முயற்சி நிதி பற்றிய பகுப்பாய்வினை மேற்கொள்ளுதல் மற்றும் தீர்மானம் மேற்கொள்ளுதல்	25
2.	வினைத்திறன்காண் தடைப்பரீட்சை பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	32
3.	புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்களுக்கான ஒழுங்குபடுத்தல் பயிற்சி	17
4.	கை.அ.சபையின் தலைவர்களுக்கான மக்கள் தலைமைத்துவ அபிவிருத்தி	60
5.	உயர் முகாமைத்துவம், நடுநிலை முகாமைத்துவம் மற்றும் அனைத்து நிறைவேற்றுத்துறை உத்தியோகத்தர்களுக்கான பெறுமதிசேர் நிகழ்ச்சித் திட்டம்	160

அட்டவணை -4.1.1

4.1.2 ஊழியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கான பெறுமதி சேர்த்தல் நிகழ்ச்சித் திட்டம்.

ஊழியர்களின் ஆற்றலை விருத்தி செய்யும் நோக்கில் பின்வரும் புலமைப்பரிசில்கள் மற்றும் வெளிநாட்டு விஜயங்கள் வழங்கப்பட்டன.

புலமைப்பரிசில்களை வழங்குதல் – 2017

இலக்கம்	பயிற்சித் துறை	செலவு (ரூ)
1.	பொதியிடலை மேம்படுத்துதல் பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – மும்பாய்	217,936.00
2.	தோற்பொருள் உற்பத்தி செய்தலுடன் தொடர்புடைய தூய்மைத் தொழில்நுட்பம் பற்றி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - சீனா	199,636.50
மொத்தம்		**417,572.50**

அட்டவணை 4.1.2

4.1.3 தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்தல்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கேற்ப முகாமைத்துவம், கமத்தொழில், உணவுத் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் மற்றும் இரசாயனப் பொருட்கள் ஆகிய துறைகளில் சிறப்புத் தேர்ச்சியுடன் கூடிய 17 தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்களுக்குத் தலைமையலுவலகம் மற்றும் பிரதேச அலுவலகங்கள் உள்ளடங்கும் வகையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

4.2 பிரதேச அபிவிருத்திப் பிரிவு (RDD)

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதேச அபிவிருத்திப் பிரிவு நாட்டிலுள்ள 25 மாவட்டங்களையும் உள்வாங்கும் வகையில் தாபிக்கப்பட்டுள்ள அதன் பிரதேச வலைப்பின்னல் வாயிலாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் பிரிவினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு பல விசேட பணிகளை ஈடேற்றிவருகின்றது. பிரதேச அலுவலகங்களில் கடமைப் பணிகளுக்காக 25 பிரதி/ உதவிப் பணிப்பாளர்களும் 62 தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை மேம்படுத்தி அவற்றின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு பிரதேச அபிவிருத்திப் பிரிவிற்குப் பிரதான நான்கு குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்ட புதிய செயற்றிட்டமொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக இலக்கு வைக்கப்பட்டுள்ள பிரதான நான்கு குறிக்கோள்களும் பின்வருமாறு:

1. உள்நாட்டுச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களை உலகளாவிய சந்தை வாய்ப்பிற்காக முன்னேற்றுதல்.
2. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களின் வருமானத்தைப் பெருக்குதல்.
3. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில் பிரிவிற்குக் கைத்தொழிலை இலக்காகக் கொண்ட ஆற்றல் விருத்தியினை மேம்படுத்துதல்.
4. பிரதேச ரீதியாகக் காணப்படும் பொருளாதாரச் சமத்துவமின்மையைத் தீர்த்துக் கொள்வதற்கு உதவியளித்தல்.

ஆற்றல் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல், மதியுரைச் சேவைகளை வழங்குதல், சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படுதல், கைத்தொழிலுக்குத் தேவையான தகவல்களை வழங்குதல் ஆகியவை பிரதேச அபிவிருத்திப் பிரிவிற்கும் அதன் மாவட்ட அலுவலகங்களுக்கும் சாட்டப்பட்டுள்ள பிரதான பணிகளாகும்.

4.2.1 தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்களுக்கான பொதியிடல் பற்றிய பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான உயர்மட்டப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்.

பொதியிடல் பற்றிய பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவிப்பதற்கான உயர்மட்டப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று 2017.02.28ஆம் திகதி முதல் 2017.03.02ஆம் திகதி வரை கொழும்பு - 7 இல் அமைந்துள்ள கெக்ரெர் கொப்பேக்கடுவ கமநல ஆராய்ச்சி நிறுவகத்தில் நடாத்தப்பட்டது. சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட தொழில்முயற்சி முகாமையாளர்கள் உற்பத்தியினைப் பெருக்குவதற்குத் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக, அவர்கள் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்கின்ற கைத்தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு ஆலோசனையாளர்களுக்கான பயிற்சியளிக்கப்பட்டது.

இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பின்வரும் விடயங்கள் விபரமாகக் கலந்துரையாடப்பட்டன.

- பொதியிடலின் போது உணவுத் தொழில்நுட்பம்
- உணவுப் பொதியிடலில் தொழில்நுட்பத் துறை
- பொதியிடல் பற்றிய உணவு ஒழுங்கு விதிகள்
- பொதியிடலுடன் தொடர்புடைய இயந்திர உபகரணங்கள்
- உணவுப் பொதியிடல் மற்றும் உணவின் ஆயுட்காலம் – நடைமுறைக் கையேடு
- பொதியிடல் மற்றும் ஏற்றுமதிச் சந்தை – அனுபவங்களைப் பரிமாறிக்கொள்ளும் அமர்வு

4.2.2 உணவுப் பொதியிடல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

சபையில் பதிவு செய்துகொண்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 790 கைத்தொழிலாளர்களை இணைத்துக்கொண்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதேச உத்தியோகத்தர்களினால் ஒவ்வொரு கைத்தொழிலாளர்கள் தொடர்பிலான தேவைகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது. "உணவுப் பொதியிடல் விருத்தி நிகழ்ச்சித்திட்டம்" எனும் இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்பதற்குச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைத் தெரிவு செய்யும்போது சில நிபந்தனைகளும் வரையறைகளும் மாத்திரம் கவனத்தில் கொள்ளப்பட்டது.

தெரிவு செய்யும் செயன்முறையின் போது ஆகக்குறைந்தது 3 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் உணவுத்துறைசார் கைத்தொழிலில் ஈடுபட்டிருந்த கைத்தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதுடன் இவர்களின் சம்பந்தப்பட்ட உற்பத்திச் செயன்முறைகள் அல்லது உற்பத்திக்கான ஏதேனும் முன்னேற்றமொன்றை மேற்கொள்ளும் போது அதற்கு ரூபாய் 50,000 எனும் உச்ச மட்டத் தொகையின் கீழ் நூற்றுக்கு ஐம்பது வீதமான நிதியதவி வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோள்கள் பின்வருமாறு

- உணவின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டு தற்போதுள்ள பொதியிடல் மற்றும் சுட்டுத்துண்டிடல் முறைமைகளை மேம்படுத்துவதற்கு உணவுத் துறையில் காணப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 125 கைத்தொழில்களுக்கு வசதிகளை வழங்குதல்.
- உணவுப் பொதியிடலின் போது கைத்தொழிலாளர்கள் முகங்கொடுக்கின்ற குறைபாடுகள்/ நடைமுறைப் பிரச்சினைகள் போன்றவற்றை இனங்காண்பதற்காகக் கைத்தொழிலாளர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குதல் மற்றும் அவர்களின் பொதியிடல் முறைகளை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

இக்குறிக்கோள்களை ஈடேற்றிக்கொள்வதற்குப் பின்பற்றப்பட்ட மூலோபாயங்கள் பின்வருமாறு:

அ) தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களில் காணப்படும் பொதியிடல் முறைகளை மேம்படுத்துவதற்கு ஆலோசனைச் சேவைகளை வழங்குதல்.

ஆ) உத்தேச அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு நிதியுதவிகளை வழங்குதல் – (ஆகக்கூடியது ரூபாய் 50,000)

கருத்திட்டத்தின் முன்னேற்றம்

மாவட்டம்	பூர்த்தி செய்யப்பட்ட செயற்பாடுகள்		
	பயனாளிகளைத் தெரிவு செய்தல்	அபிவிருத்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்	கொடை (ரூ)
அநுராதபுரம்	5	4	200,000.00
பதுளை	5	5	250,000.00
மட்டக்களப்பு	6	6	265,000.00
கொழும்பு	4	2	100,000.00
காலி	5	5	250,000.00
கம்பஹா	7	7	323,000.00
அம்பாந்தோட்டை	5	5	250,000.00
யாழ்ப்பாணம்	5	5	250,000.00
களுத்துறை	5	5	250,000.00
கண்டி	5	5	250,000.00
கேகாலை	8	8	400,000.00
கிளிநொச்சி	6	4	157,400.00
குருநாகல்	10	10	500,000.00
மன்னார்	2	2	100,000.00
மாத்தளை	8	4	200,000.00
மாத்தறை	5	5	250,000.00
மொனராகலை	5	5	216,825.00
முல்லைத்தீவு	5	5	232,500.00
நுவரெலியா	4	4	200,000.00
பொலன்னறுவை	6	2	87,650.50
இரத்தினபுரி	5	4	187,500.00
திருகோணமலை	5	1	31,000.00
வவுனியா	5	5	205,000.00
மொத்தம்	**131**	**108**	**5,155,875.50**

அட்டவணை – 4.2.1

4.2.3 நிதிக் கொடைகளை வழங்கும் விழா

கைத்தொழிலாளர்களுக்கு நிதிக் கொடைகளை வழங்கும் விழா கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சர் கௌரவ றிஸாட் பதியுதீன் அவர்களின் அனுசரணையின் கீழ் 2017 நவம்பர் மாதம் 05ஆம் திகதி கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சில் நடாத்தப்பட்டதுடன் அந்நிகழ்வில் அக்கருத்திட்டத்தின் கீழ் பயனடைந்த சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 108 கைத்தொழிலாளர்களுக்குச் செயன்முறை/ உற்பத்தி அபிவிருத்திக்கான நிதிக்கொடைகள் வழங்கப்பட்டன. கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதையடுத்து இற்றைவரை அவ்வாறான கைத்தொழிலாளர்களுக்கு ரூபாய் 5,155,875.00 பணத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

4.2.4 தூய்மையான உற்பத்தி அனுபவங்கள் வாயிலாகச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு ISO 14001 சான்றிதழ்களைப் பொற்றுக் கொள்வதற்கு வசதிகளை வழங்குதல் 2017/2018

உற்பத்திச் செயன்முறையொன்றினுள் சுற்றாடல் மாசடைதல் மற்றும் கழிவுருவாக்கம் ஆகியவை தவிர்க்க முடியாதவைகளாகும். கைத்தொழிலாளர்களுக்குப் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுவதனூடாக இதற்கான கிரயத்தினைக் குறைத்துக்கொள்ள முடியும்.

- பொருட்கள், செயன்முறை மற்றும் தொழிற்பாட்டு முகாமைத்துவத்தை மேம்படுத்திக் கொள்ளுதல்.
- கழிவுகளை இயன்றளவு குறைத்தல், மீள்சுழற்சிக்கு உட்படுத்துதல்.
- உற்பத்தி மற்றும் சேவைகளை மிகக் கவனமாகத் திட்டமிடுதல் மற்றும் தொிவு செய்தல்.
- பொருத்தமான தொழில்நுட்பங்கள் மற்றும் வடிவமைப்புக்களைத் தொிவு செய்துகொள்வதனூடாகச் செயன்முறை, தொழிற்பாடு மற்றும் வளப் பாவனையை உச்ச மட்டப் பயனைப் பெற்றுக்கொள்ளும் மட்டத்திற்குக் கொண்டுவருதல்.

எவ்வாறாயினும், ஏனைய முகாமைத்துவத் தர நியமங்களுக்கு இசைந்தொழுகும் வகையில் ISO 9001மற்றும் OHSAS தர நியமங்களுடன் சுற்றாடல் செயலாற்றுகையை மேம்படுத்தும் பொருட்டு விதிக்கப்பட்டுள்ள ISO 14001 தர நியமங்களுக்கேற்ப ஏற்று அங்கீகரிக்கப்பட்ட முறைமையொன்றையும் தெளிவாக நிச்சயிக்கப்பட்டுள்ள சுற்றாடல் முகாமைத்துவ முறைமைசார் சட்டகமாக தூய்மை உற்பத்தி அனுபவங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

தூய்மையான உற்பத்தி நடைமுறைகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களினால் ஈடுபடுத்தப்படவேண்டிய அத்தியாவசிய சுற்றாடல் நடைமுறையாக இனங்காணப்பட்டாலும், அவ்வெண்ணக் கருவினை நடைமுறைப்படுத்தும் போது முகங்கொடுக்க வேண்டியுள்ள சிற்சில நடைமுறைத் தடைகள் உள்ளன. அத்தடைகள் பின்வருமாறு:

(அ). கடுமையான சுற்றாடல் நியமங்கள் காணப்படாமை மற்றும் உற்பத்தித் திறனைச் செயலுருவிற்கு உட்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்கள் காணப்படாமை.

(ஆ). தகவல்கள் மற்றும் தொழில்நுட்பக் குறைபாடுகள் – தூய்மையான உற்பத்திகள் பற்றிய போதியளவு அறிவு காணப்படாமை மற்றும் பல்வேறு தூய்மைசார் தொழில்நுட்பங்கள் காணப்படுதல்.

(இ) நிதி ஊக்குவிப்புக்களின் பற்றாக்குறை – கைத்தொழில்சார் தூய்மை உற்பத்தி நடைமுறைகளுக்கு மாற்றமடைவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் நிதி வசதிகள் போதாமை.

இவ்வாறான தடைகள் காரணமாக கைத்தொழில் அபிவிருத்திச் சபை இச்செயன்முறையைத் தடையின்றி நடைமுறைப்படுத்தும் பொருட்டு தேசியத் தூய்மைசார் உற்பத்தி நிலையத்துடன் இணைந்து இக்கருத்திட்டத்தை மேம்படுத்தியுள்ளது. தூய்மை உற்பத்தி நடைமுறைக் கருத்திட்டமானது பல கருத்திட்ட நோக்கங்களைக் கொண்டதாக ஆரம்பிக்கப்பட்டது. தூய்மை உற்பத்தி நடைமுறைகள் வாயிலாக வளப்பாவனையை ஆகக்கூடிய பயனைப் பெற்றுக்கொள்ளும் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்கும் அதற்குச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு வசதிகளை வழங்குதல், வளங்கள் வீண் விரயமடைதலை இயன்றளவிற்குக் குறைத்தல் போன்ற பரிகார நடவடிக்கைகள் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நிதியுதவி வழங்குவதற்கும் கைத்தொழில்கள் ISO 14001 சான்றளிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கும் வசதிகள் வழங்குதல் அந்நோக்கங்களாகும். 8 – 9.57

பிரதான கருத்திட்டச் செயற்பாடுகள்:

1. தூய்மை உற்பத்தி மற்றும் ISO 14001: சுற்றாடல் முகாமைத்துவ நடைமுறைகள் 2015 பற்றிக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்கள்/ தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்கள் ஆகியோரைப் பயிற்றுவித்தல் மற்றும் அவர்களின் ஆற்றலை விருத்தி செய்தல்.
2. வளங்களின் வினைத்திறனை (நீர், பொருட்கள் மற்றும் வலு) மேம்படுத்தும் பொருட்டு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, கண்டி, அம்பாந்தோட்டை, இரத்தினபுரி, கம்பஹா, களுத்தறை மற்றும் மாத்தறை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் தொிவு செய்யப்பட்ட 15 கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.
3. அவ்வாறான 15 கைத்தொழில்களின் ISO 14001: 2015 தர நியம நடைமுறைகளை அபிவிருத்தி செய்தல்.
4. அதனைப் பின்பற்றுவதற்காக ஏனைய கைத்தொழில்களை ஊக்குவித்தல்.

4.2.5 கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்களுக்கான ISO 14001:2015 சுற்றாடல் முகாமைத்துவ நடைமுறை பற்றிய மதியுரை அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்

2017 மே மாதம் 17, 18 மற்றும் 19 ஆகிய தினங்களில் களனி, வெதமுல்ல விடுமுறை விடுதியில் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் தேசிய தூய்மை உற்பத்தி நிலையத்தினால் நடாத்தப்பட்டது. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்முயற்சி மேம்படுத்தல் முகாமையாளர்கள் 20 பேர் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றனர்.

இந்தப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தில் பின்வரும் விடயங்கள் உள்வாங்கப்பட்டன:

- சுற்றாடல் முகாமைத்துவ நடைமுறை தரங்கள் பற்றிய மேலோட்டமான பகுப்பாய்வு மற்றும் ISO 14001 சுற்றாடல் முகாமைத்துவ நடைமுறைகளை அபிவிருத்தி செய்வது பற்றிய அறிமுகம்.
- ஒழுங்கமைப்புச் சூழமைவு மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி, ஒழுங்கமைப்பொன்றின் சுற்றாடல் கொள்கை.
- ஒழுங்கமைப்பொன்றின் சுற்றாடல் அம்சங்களை இனங்காணுதல்.
- சுற்றாடல் இடர்வரு நிலைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறை மற்றும் வாழ்க்கை வட்டக் கண்ணோட்டம்.
- சுற்றாடல் குறிக்கோள்கள் மற்றும் நடைமுறைகளைத் திட்டமிடுதல்.
- இலங்கையின் சுற்றாடல் முகாமைத்துவ நடைமுறைகள் தொடர்பிலான இசைந்தொழுகைக் கடப்பாடுகள்.
- மேற்பார்வை, மதிப்பீடு மற்றும் பகுப்பாய்வு, இசைந்தொழுகும் தன்மையினை மதிப்பீடு செய்தல், உள்ளகக் கணக்காய்வு, இசைந்தொழுகாமை மற்றும் திருத்திக் கொள்வதற்கான நடைமுறைகள்.
- தொழிற்பாட்டுத் திட்டமிடல் மற்றும் கட்டுப்பாடு.

4.2.6 கைத்தொழில் அபிவிருத்திச் சபை மற்றும் தேசியத் தூய்மை உற்பத்தி நிலையத்துக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தினைக் கைச்சாத்திடுதல்

கருத்திட்டத்தின் நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் திரு. மகிந்த ஜினசேன அவர்கள், தேசியத் தூய்மை உற்பத்தி நிலையத்தின் தலைவர் திரு. காமினி குணசேகர ஆகியோருக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் 2017.10.20ஆம் திகதி கொழும்பு 02, ஹயிட் பார்க் கோணரில் அமைந்துள்ள யூனியன் கெமிக்கல்ஸ் லங்கா பீ.எல்.சீ. கம்பனியில் கைச்சாத்திடப்பட்டது.

4.2.7 கருத்திட்டத்துக்கான கைத்தொழில்களைத் தொிவு செய்தல்

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டு தொிவுக் குழுவொன்றின் அவதானிப்புடன் எஸ்ரொப் மதிப்பீட்டு முறைமையைப் பயன்படுத்தி 15 கைத்தொழிலாளர்கள் தொிவு செய்யப்பட்டனர்.

கருத்திட்டத்திற்குத் தொிவு செய்யப்பட்ட கைத்தொழில்கள் பின்வருமாறு:

இல.	மாவட்டம்	கம்பனியின் பெயர்
1	இரத்தினபுரி	செசிலியான் அசோகியேட் (தனியார்) கம்பனி
2	இரத்தினபுரி	கல்படிதன்ன தேயிலைத் தொழிற்சாலை
3	யாழ்ப்பாணம்	அனாய் அன்ட் சன்ஸ் (தனியார்) கம்பனி
4	மாத்தறை	நில்வளா தேயிலைத் தொழிற்சாலை (தனியார்) கம்பனி
5	மாத்தறை	பிரீலான் என்டர்பிரைசஸ் (தனியார்) கம்பனி
6	மட்டக்களப்பு	ஈஸ்ட் லங்கா பொலிசக் (தனியார்) கம்பனி

7	கம்பஹா	கிரீன்வே ஏசியா லங்கா (தனியார்) கம்பனி
8	யாழ்ப்பாணம்	சாரா இன்டஸ்ட்ரீஸ் (தனியார்) கம்பனி
9	மாத்தறை	மொரவக கோரலே தேயிலைத் தொழிற்சாலை
10	கம்பஹா	கால்டன் ஸ்வீட் கவுஸ் (தனியார்) கம்பனி
11	கண்டி	பென்டியம் 2000 ஸ்டேசனரீஸ் (தனியார்) கம்பனி
12	இரத்தினபுரி	மைக்ரோ சிலோன் ஓகனிக்ஸ் (தனியார்) கம்பனி
13	யாழ்ப்பாணம்	அனா இன்டஸ்ட்ரீஸ்
14	களுத்தறை	பெர்ஸ்ட் பேர்னிச்சர் (தனியார்) கம்பனி
15	அம்பாந்தோட்டை	மலிந்து டெயரி (தனியார்) கம்பனி

அட்டவணை -*4.2.2*

4.2.8 தொழில் முயற்சிக் கிராமங்கள் மற்றும் மகளிர் தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம்

கிராம மட்டத்தில் பெண் தொழில் முயற்சியாளர்களை வலுவூட்டி அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கம் நோக்கில் 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் ஊடாகத் தொழில் முயற்சிக் கிராமங்களை அபிவிருத்தி செய்தல் பற்றி வலியுறுத்தப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் 5 கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரூபாய் மில்லியன் 8.6 தொகை ஒதுக்கப்பட்டதுடன் அதில் ரூபாய் மில்லியன் 5.49 செலவிடப்பட்டது. இக்கிராமங்களில் 155 பயனாளிகளுக்கு இக்கருத்திட்டத்தினூடாக நன்மை கிடைத்தது.

4.2.9 கைத்தொழிற் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டம்

2005ஆம் ஆண்டில் இந்நிகழ்ச்சித் திட்டம் "ஆயிரம் கைத்தொழிற் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டம்" ஆக ஆரம்பிப்கப்பட்டதுடன் பின்னர் அது "உற்பத்திக் கிராமங்களை அபிவிருத்தி செய்யம் நிகழ்ச்சித் திட்டம்" ஆகப் பெயரிடப்பட்டது. இப்புதிய மற்றும் மிகப் பாரிய கருத்திட்டத்திற்கு 2005ஆம் ஆண்டில் ரூபாய் மில்லியன் 400 ஒதுக்கப்பட்டது.

இந்த ஐந்து வருட நிகழ்ச்சித் திட்டத்தில் ஒரு வருடத்திற்கு 200 கிராமங்கள் வீதம் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. கொல்லன் பட்டறை வேலை, தும்புக் கைத்தொழில் மற்றும் களிமண் கைத்தொழில் போன்ற பாரம்பரிய கைத்தொழில்களுக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டது. அதன் பின்னர் கைகளினால் உருவாக்கப்படும் கடதாசி, வெட்டுமலர்கள், கருவாடு போன்ற பாரம்பரி மற்றக் கைத்தொழில்களும் நிகழ்ச்சித் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.

இயந்திர உபகரணங்களையும் உற்பத்திச் செயன்முறைகளையும் அறிமுகப்படுத்துதல், புதிய தொழில்நுணுக்க முறைகளுடன் கூடியதாகப் பயனாளிகளின் ஆற்றலை விருத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்குதல் போன்றவை இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கங்களாகும். எவ்வாறாயினும், இக்கருத்திட்டத்தை நிறைவு செய்வதற்கு முன்னர் 2009ஆம் ஆண்டில் அக்கருத்திட்டத்தின் காலம் நிறைவடைந்தது. 2005ஆம் ஆண்டு முதல் 2006ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் இக்கருத்திட்டத்திற்கு ஒட்டுமொத்த

நிதியாக ரூபாய் மில்லியன் 723.03 ஒதுக்கப்பட்டதுடன் உண்மையான செலவு ரூபாய் மில்லியன் 565.4 ஆக அமைந்தது.

2017ஆம் ஆண்டிற்குள் கைத்தொழில் உற்பத்திக் கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் மில்லியன் 8.6 பணத்தொகை ஒதுக்கப்பட்டதுடன் பின்வரும் ஐந்து கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு ரூபாய் மில்லியன் 5.49 பணத்தொகை ஒதுக்கப்பட்டது: கிளிநொச்சி மாவட்டத்தில் கோணாவில், குருநாகல் மாவட்டத்தில் பொல்கஹவெல, களுத்தறை மாவட்டத்தில் பாகொட, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சிரிபோபுர மற்றும் திருகோணமலை மாவட்டத்தில் மூதூர் ஆகியவை அந்த ஐந்து கிராமங்களாகும்.



படம் 4.2.1 – நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை - 2017

4.3 திட்டமிடல் பிரிவு

உள்நாட்டுக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களுக்கான ஒட்டுமொத்த மூலோபாயத் திட்டங்களை வடிவமைத்தல் திட்டமிடல் பிரிவின் பொறுப்பாகும். இதற்கு மேலதிகமாக அவ்வப்போது உசிதமான வகையில் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்தல், அவ்வாறான மதிப்பீடுகளூடாக அந்நிகழ்ச்சித் திட்டம் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதும் இப்பிரிவின் பொறுப்பாகும்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதேச செயற்பாடுகளுக்கு வசதி வழங்கும் பொருட்டு இப்பிரிவிற்குப் பின்வரும் துணைச் செயற்பாடுகள் சாட்டப்பட்டுள்ளன:

- தாபனத் திட்டமொன்றைத் தயாரிப்பதனூடாக கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கட்டாய நோக்கங்களுக்கு அமைவாகக் கொள்கைகளையும் மூலோபாய வழிகாட்டல்களையும் தயாரித்தல்.
- நிறுவனத்தின் வரவு செலவு மற்றும் எதிர்வரும் வருடத்தின் ஒட்டுமொத்தச் செயற்றிட்டத்திற்கு ஏற்ப மூலதன வரவு செலவு மற்றும் மீண்டெழும் செலவினங்களின் தேவைகளைத் தயாரிப்பதற்கு வசதிகளை வழங்குதல்.
- தொழில் முயற்சி/ கைத்தொழில் மதிப்பீடுகளை நடாத்துவதற்கும் கைத்தொழில்/ பொருளாதாரத்துடன் தொடர்புடைய புள்ளி விபரங்களை இற்றைப்படுத்துவதற்கு வசதிகளை வழங்குதல் மற்றும் சம்பந்தப்பட்ட துறைசார் அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- வெளிநாட்டு நிதி வழங்கல்களுக்கு அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல் மற்றும் எண்ணக்கருப் பத்திரங்களைத் தயாரித்தல்.
- ஏற்கனவே உள்ள கைத்தொழில்களுடன் தொடர்புடைய கொள்கை உருவாக்கக் குழுக்களுக்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பங்கேற்பினை உறுதி செய்தல் மற்றும் தேவையான போது கொள்கைப் பத்திரங்களைத் தயாரித்தல்.

- வருடாந்த செயற்றிட்டம் தொடர்பாக மாதாந்த, காலாண்டு மற்றம் வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளைத் தயாரித்தல்.

4.3.1 விசேட சாட்டுதல்கள்

கைத்தொழில் தரவுக் களஞ்சியம்

அனைத்து மாவட்டங்களையும் உள்வாங்கும் வகையில் 3,725 கைத்தொழில்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கைத்தொழில் மதிப்பீடொன்றை அடிப்படையாகக் கொண்டு கைத்தொழில் தரவுக் களஞ்சியமொன்று தயாரிக்கப்பட்டது.

2017 டிசம்பர் 31ஆம் திகதியில் மதிப்பீட்டின் முன்னேற்றம்

மாவட்டம்	கனத்திற் கொள்ளப்பட்ட சி.ந.கை. எண்ணிக்கை	பதிவு செய்யப்பட்ட சி.ந.கை. எண்ணிக்கை
குருநாகல்	850	259
கண்டி	800	224
களுத்தறை	1,000	308
மாத்தளை	500	159
காலி	690	167
இரத்தினபுரி	500	149
கேகாலை	600	528
கம்பஹா	1,250	272
யாழ்ப்பாணம்	400	223
கொழும்பு	1,030	513
அநுராதபுரம்	300	98
பொலன்னறுவை	200	252
திருகோணமலை	300	105
பதுளை	600	59
மாத்தறை	600	223
மொனராகலை	600	122
அம்பாறை	350	74
முல்லைத்தீவு	200	-
மட்டக்களப்பு	200	54
புத்தளம்	400	103
நுவரெலியா	450	57
மன்னார்	150	71
வவுனியா	248	130
கிளிநொச்சி	150	47
அம்பாந்தோட்டை	500	131
மொத்தம்	**12,868**	**4,328**

அட்டவணை – 4.3.1

இதற்கு மேலதிகமாக இக்காலகட்டத்திற்குள் மேலும் மூன்று புள்ளிவிபரவியல் வெளியீடுகள் பூர்த்தி செய்யப்பட்டன. "இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்கள் – 2014, அடிப்படைச் சமூக, பொருளாதாரத் தரவுகள், மற்றும் சனநாயகம், தேசியக் கணக்குகள், ஊழியப் படை, ஏற்றுமதி இறக்குமதி ஆகிய துறைகள் தொடர்பிலான தொிவு செய்யப்பட்ட சமூக, பொருளாதாரக் குறிகாட்டிகள்" அவ்வாறான மூன்று வெளியிடுகளாகும்.

4.4 சந்தைப்படுத்தல் பிரிவு (MD)

உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்குக் குறிப்பாகத் தமது தொழில் முயற்சிகளை வாணிப வடிவில் மேலும் உயிரோட்டமுள்ளதாக விருத்தி செய்து கொள்வதற்குச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கொத்தொழிலாளர்களுக்கும் எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளை மேம்படுத்தும் பொறுப்பு சந்தைப்படுத்தல் பிரிவிற்குச் சாட்டப்பட்டுள்ளது.

மேலும், நீண்டகாலத் தொழில் முயற்சித் தொடர்புகள் வாயிலாகச் சம்பந்தப்பட்ட உற்பத்திகளின் வர்த்தகக் குறியீட்டின் நன்மதிப்பினைக் கட்டியெழுப்பி எதிர்காலச் சந்தைகளுடன் தொடர்புகளைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொறுப்பு இப்பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ளது.

இப்பிரிவிற்குச் சாட்டப்பட்டுள்ள பணிகள்.

- கைத்தொழில் கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்துதல்/ தேசியக் கண்காட்சிகள் மற்றும் வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்றல்.
- நாடளாவிய ரீதியில் காணப்படுகின்ற தொிவு செய்யப்பட்ட நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்கள்/ கைத்தொழிலாளர்களுக்கு அத்துடன் சுய தொழில்களில் ஈடுபடுகின்ற ஆட்களுக்கான தேசிய விருது வழங்கும் விழாவினை ஏற்பாடு செய்தல்.

- 'லக்கம்' மற்றும் 'லக்னிபயும்' விற்பனை நிலையங்களுக்கு விற்பனைக்குத் தேவையான வசதிகளை வழங்குதல்.
- துணை ஒப்பந்தப் பரிமாற்றங்களுக்கான வசதிகளை வழங்குதல்.
- வார்ப்பு வேலைகள், சிறு பொறியியல், கொல்லன் பட்டறை வேலை மற்றும் ஏனைய உலோக வார்ப்பு மற்றும் தொழில்நுணுக்கக் கைத்தொழில்களின் ஈடுபட்டிருக்கின்ற கைத்தொழிலாளர்களுக்குச் சலுகை விலையின் கீழ் மூலப் பொருட்கள்/ கழிவுப் பொருட்களை வழங்குதல்.
- கைத்தொழில்கள்/ நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் சந்தைப்படுத்தல் உதவியினையும் மதியுரைச் சேவைகளையும் வழங்குதல்.

4.4.1 லக்கம் விற்பனை நிலையம்

இந்நிலையத்தின் வாயிலாகச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களுக்கு விற்பனை செய்யக்கூடிய உற்பத்திகளைப் போட்டி விலைகளின் கீழ் விற்பனை செய்வதற்கு விற்பனை வசதிகளை வழங்கிச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களைப் போலவே தனியார் தொழில் முயற்சியாளர்களுக்கும் வசதிகள் வழங்கப்படுகின்றன. மேலும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களினதும் தனியார் தொழில் முயற்சியாளர்களினதும் உற்பத்திகளின் விளைத்திறனை உயர்த்தி அவ்வுற்பத்திகளுக்கு நாடளாவிய ரீதியில் சந்தை வாய்ப்புகளை மேம்படுத்தும் நோக்குடன் விற்பனை நிலையம் கண்காட்சி மற்றும் சந்தைப்படுத்தல் வசதிகளை வழங்கி அப்பொருட்களை "லக்கம் இலச்சினை" இன் கீழ் காட்சிப்படுத்தி உள்நாட்டு மற்றும் சர்வதேசச் சந்தைகளில் அப்பொருட்களைச் சந்தைப்படுத்துவதற்கு அவர்களுக்கு வசதிகளை வழங்குகின்றது.

4.4.2 துணை ஒப்பந்தப் பரிமாற்றங்கள்

சந்தைப்படுத்தல் பிரிவின் கீழ்த் துணை ஒப்பந்தப் பரிமாற்றங்களுக்கு 1982ஆம் ஆண்டு முதல் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புகளின் ஒருங்கிணைப்புடன் உலக வங்கியின் நிதி வழங்கல் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது. கைத்தொழில் அபிவிருத்திச் சபை கைத்தொழிலார்கள்/ சேவை வழங்குனர்கள் ஆகியோருக்கு விலைக் கோரல்களை முன்வைத்து அவர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற பொருட்களை வழங்குதல் இதில் உள்ளடங்குகின்றது. அரச நிறுவனங்களிலிருந்து கொள்வனவுக் கோரல்கள் கிடைத்த சில பொருட்கள் பின்வருமாறு: மரத்திலான, உருக்கிலான அலுவலக மேசைகள் மற்றும் சோபா கதிரைகள், தோல்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பாதணிகள், செருப்பு வகைகள் மற்றும் பயணப் பைகள், இறப்பர் சார்ந்த உதிரிப் பாகங்கள், ரீசேட், தொப்பி, பாடசாலைப் புத்தகப் பைகள், காகிதாதிகள், அலுமினியக் கதவுகள், பெயர்ப் பலகைகள் மற்றும் அறைகளாகப் பிரிப்பதற்குப் பயன்படுத்தப்படுகின்ற பொருட்கள் (partition).

4.4.3 உலோகக் கழிவுக் கருத்திட்டம்

உலோகக் கழிவுக் கருத்திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களிலிருந்து இரும்பு, இரும்பு அல்லாத மற்றும் அதைச்சார்ந்த ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்து, அப்பொருட்களைக் குறிப்பாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையில் பதிவு செய்துகொண்டுள்ள சாதாரண பொறியியல் துறையைச் சேர்ந்த கைத்தொழிலாளர்களுக்கு உத்தியோத்தர் குழுவொன்றினால் நிர்ணயிக்கப்படுகின்ற நிவாரண விலைகளின் கீழ் மூலப்பொருட்களாக வழங்கப்படுகின்றன. உலோக வார்ப்புக் கைத்தொழில் துறையில் ஈடுபட்டுள்ள அநேக கைத்தொழிலாளர்கள் தங்களது உற்பத்திகளைச் சந்தைக்குள் போட்டி மிக்கதாக மாற்றிக்கொள்வதற்கு இக்கருத்திட்டத்தின் கீழ் நன்மைகள் கிடைத்தன.

4.4.4 கண்காட்சிகள்

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான பிரிவின் கீழ் ஒட்டுமொத்தமாக முழு நாட்டிலும் முனைப்புடன் காணக்கிடைக்கின்ற தொழில் முயற்சியாளர்களை இனங்காணும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களுக்கு மாவட்ட, மாகாண மற்றம் தேசிய மட்டத்தில் கண்காட்சிகளை ஒழுங்கு செய்கின்றது. மேலும், அதிகமாகத் தொழில் வாய்ப்புக்களை அறிமுகப்படுத்துவதற்காகவும் தற்போது போட்டிமிகு கைத்தொழில் சூழமைவிற்குள் சிறிய அளவில் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கும் இக்கண்காட்சிகளினூடாக வசதிகள் வழங்கப்படுகின்றன.

சந்தைப்படுத்தல் பிரிவின் செயலாற்றுகை - 2017

செயலாற்றுகை	லக்கம் சந்தைப்படுத்தல் நிலையம்	துணை ஒப்பந்தங் கள்	கழிவு உலோக் கருத்திட்டம்	மொத்தம் (ரூ.மி.)
சந்தைப்படுத் தல் பெறுமதி (ரூ.மி.)	11.37	10.91	163.80	186.08
வருமானம் (ரூ.மி.)	8.17	9.36	64.73	82.26
கொள்வனவுக் கோரிக்கைகளை விநியோகித்தல்		21		
கொள்வனவு செய்யப்பட்ட அளவு (மெ. தொ.)			1794	
விநியோகிக்கப் பட்ட அளவு (மெ. தொ.)			1680	
வசதிகள் வழங்கப்பட்ட கைத்தொழிலாளர்களின் எண்ணிக்கை	25	21	596	

அட்டவணை – 4.4.1



படம் 4.4.1 – வழங்கப்பட்ட சந்தைப்படுத்தல் சேவைகள் - 2017



உரு 4.4.2 – சந்தைப்படுத்தல் வசதிகள் வாயிலாக ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் - 2017

4.5 கைத்தொழில் பேட்டைப் பிரிவு (IED)

கைத்தொழிற் பேட்டைப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள போதியளவு உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட காணிகள் மற்றும் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் நீண்டகாலக் குத்தகை அடிப்படையில் வழங்கப்படுவதுடன் சிறந்த கைத்தொழில் சூழமைவுடன் கூடிய இடங்களில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழில்களைத் தாபிப்பதற்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுதல் கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் பிரதான பணியாகும்.

மேலும், கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்கள் மற்றும் பிரதிப் பணிப்பாளர்களின் ஒத்துழைப்புடன் தனியார் துறைக்கு அதிகமான வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுத்து, கைத்தொழில் அபிவிருத்திச் சபை அதன் தொழிற்பாடுகளை விரிவாக்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. 1970ஆம் ஆண்டு முதல் அபிவிருத்தி செய்யப்பட்ட ஒட்டுமொத்தக் காணியின் அளவு சுமார் 302 ஏக்கர்களாகும். அக்காணியில் 727 காணித் துண்டுகள் பிரித்து ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இற்றைவரை அக்காணித்துண்டுகள் 408 கைத்தொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

அக்கைத்தொழிலாளர்களுக்கிடையில் 299 பேர் அவர்களின் கைத்தொழில்களை ஆரம்பித்து 8097 தொழில் வாய்ப்புக்களை வழங்கியுள்ளனர். மேலும், 40 கைத்தொழில்கள் அவற்றின் தொழிற்சாலைக் கட்டிடங்களை நிர்மாணிக்கும் பல்வேறு கட்டங்களில் உள்ளன. மேலும், கைத்தொழில் பணிகளுக்காக ஈடுபடுத்தப்படாமல் வதிவதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள 69 கைத்தொழில் அலகுகளுக்கு ஏதுவான ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதற்குத் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டள்ளன.

மேலும், கட்டி முடிக்கப்பட்டுள்ள 80 கட்டிடங்களில் 60 கட்டிடங்கள் கைத்தொழிலாளர்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அதனூடாக 1616 தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

30 வருடங்களாக இந்நாட்டில் நிலவிய சிவில் யுத்தத்தின் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டை முழுமையாக அழிவிற்குள்ளாகியது. 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட இலங்கை ரூபாய் 220 மில்லியன் நிதியுதவியுடனும் இலங்கை அரசினால் வழங்கப்பட்ட ரூபாய் மில்லியன் 50 மேலதிக ஒதுக்கீட்டின் கீழும் கருத்திட்ட சேவைகளுக்காக ஐக்கிய நாடுகளின் மதியுரை மற்றும் மேற்பார்வையின் கீழ் அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டை மீண்டும் கட்டியெழுப்பப்பட்டது. இதற்கமைவாக அச்சுவேலிக் கைத்தொழிற் பேட்டை மீண்டும் கைத்தொழிற் பேட்டையாகத் தொழிற்படக் கூடிய வகையில் புதுப்பிக்கப்பட்டு 2014ஆம் ஆண்டு மீளத் திறந்துவைக்கப்பட

கைத்தொழிற் பேட்டைப் பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள பணிகள்

- கைத்தொழிற் பேட்டைகளை ஆரம்பிப்பதற்குப் பொருத்தமான இடங்களை இனங்கண்டு கொள்வதற்கான ஆரம்பக்கட்ட ஆய்வுகளை நடாத்துதல், அக்காணிகளை அபிவிருத்தி செய்து கைத்தொழில்களைத் தாபிப்பதற்குக் கைத்தொழிலாளர்களுக்குக் குத்தகை அடிப்படையில் காணித்துண்டுகளையும் கட்டிடங்களையும் வழங்கிக் கைத்தொழிற் பேட்டைகளைத் தயாரித்தல்.
- சம்பந்தப்பட்ட நிறுவனங்களிலிருந்து தேவையான நிதி மற்றும் அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்குக் கருத்திட்ட முன்மொழிவுகளைத் தயாரித்தல்.
- ஏற்கனவே உள்ள கைத்தொழிற் பேட்டைகளைப் பராமரித்தல், அவற்றின் செயலாற்றுகையை மேற்பார்வை செய்தல் மற்றும் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தல்.

2017ஆம் ஆண்டில் கைத்தொழிற் பேட்டைப் பிரிவு நிரல் அமைச்சின் வாயிலாகத் திறைசோியிலிருந்து பெற்றுக்கொண்ட ரூபாய் மில்லியன் 65இற்கு அண்மித்ததொரு பணத்தொகை கைத்தொழிற் பேட்டைகளில் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளைப் புதுப்பிப்பதற்காகவும்
மேம்படுத்துவதற்காகவும்
செலவிடப்பட்டதுடன் அதன் கீழ்ப் பின்வரும் மூன்று கைத்தொழிற் பேட்டைகளின் எல்லைச் சுவர்கள், மதில்கள், வடிகான்கள் போன்றவை நிர்மாணிக்கப்பட்டன.

தொிவு செய்யப்பட்ட சில கைத்தொழிற் பேட்டைகளில் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வருமாறு

தொ.இல.	செயற்பாடு	கைத்தொழிற் பேட்டையின் பெயர்	பணத்தொகை (ரூ.)
01	வடிகான்கள் மற்றும் நடைபாதைகளை அமைத்தல், அத்துடன் ஏற்கனவே உள்ள மதில்களைப் புதுப்பித்தல்.	பல்லேகல	16,000,000
02	எல்லைச் சுவரை அமைத்தல்	பானலுவ	2,980,000
03	பாரியதொரு கிணற்றினை அமைத்தல் மற்றும் அஞ்சல் அலுவலகக் கட்டிடம் அத்துடன் அலுவலகக் கட்டிடம் ஆகியவற்றைப் புதுப்பித்தல்	அச்சுவேலி	3,835,250
மொத்தம்			**22,815,250**

அட்டவணை – 4.5.1

இதற்கு மேலதிகமாக கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சினால் 2016/2017 துரித அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதன் கீழ்க் கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை நவீன மயப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கு ரூபாய் மில்லியன் 250 வழங்கப்பட்டதுடன் இதன் மூலம் அரச கட்டிட நிர்மாண ஒத்துழைப்புடன் நிர்மாணப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ்ப் பிரதானமாக 10 பிரதேசங்களில் அமைந்துள்ள கைத்தொழிற் பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டதுடன் அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு:

உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யப்படவிருக்கும் கைத்தொழிற் பேட்டைகள் பற்றிய விபரங்கள்

தொ. இல.	செயற்பாடு	கைத்தொழிற் பேட்டையின் பெயர்	பணத்தொகை (ரூ.)
01	உள்வாரியான வீதிகள் மற்றும் வடிகான்களை அமைத்தல்	களுதாவல	39,000,000
02	(அ)மின்மாற்றியொன்றைப் பொருத்துதல்	பன்னல	2,750,000
	(ஆ) 2ஆம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்	பன்னல	76,670,000
03	உள்வாரியான வீதிகளுக்குக் காப்பற் இடுதல் மற்றும் வீதிகளை அமைத்தல்	ஹொரண	11,000,000
04	உள்வாரியான வீதிகளுக்குக் காப்பற் இடுதல் மற்றும் எல்லை வேலிகளை அமைத்தல்	பல்லேகல	35,710,000
05	உள்வாரியான வீதிகள் மற்றும் மலசல கூடங்களை அமைத்தல் மற்றும் பிரதான வாயிலைப் பழுதுபார்த்தல்	கொட்டகல	4,000,000
06	உள்வாரியான வீதிகள் மற்றும் வடிகான்களை அமைத்தல்	புஸ்ஸல்ல	7,900,000
07	உள்வாரியான வீதிகளை அமைத்தல்	வவுனியா	11,000,000
08	(அ)உள்வாரியான வீதிகளுக்குக் காப்பற் இடுதல்	ஏகல	31,000,000
	(ஆ)மலக்கழிவகற்றும் தொகுதியின் எஞ்சிய பகுதியினை அமைத்தல்	ஏகல	5,825,000
09	(அ) 2ஆம் கட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள்	நாகம்பக	2,760.000
	(ஆ) காணிகளைத் துப்பரவு செய்து எல்லை வேலிகளை அமைத்தல்	நாகம்பக	5,130,000
10	உள்வாரியான வீதிகள் மற்றும் வடிகான்களை அமைத்தல் அத்துடன் எல்லை வேலியினை அமைத்தல்	புத்தல	22,130,000
மொத்தம்			**252,115,000**

அட்டவணை - 4.5.2

4.5.1 கைத்தொழில் அலகுகளைப் பெற்றுக்கொண்டு 2017ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள்

வழங்கப்பட்ட கைத்தொழில் அலகுகள் மற்றும் 2017ஆம் ஆண்டுக்கான உத்தேச முதலீடு மற்றும் தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை

தொ.இல.	கைத்தொழற் பேட்டை	மேற்கொள்ளப்படும் உற்பத்தி	உத்தேச முதலீடு (ரூ.மில்.)	உத்தேசத் தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை
01	அச்சுவேலி	நயிலோன் பீ.வீ.சி. உற்பத்தி	100	90
02	ஏகல	உருக்கு சார்ந்த உற்பத்திகள்	114.7	60
		உருக்கு சார்ந்த உற்பத்திகள்	78.6	40
		பிளாஸ்டிக் சார்ந்த உற்பத்திகள்	15	10
		கம்பி ஆணிகள்	108	37
		கம்பி ஆணிகள்	20	10
		பிளாஸ்டிக் சார்ந்த உற்பத்திகள்	5	15
		பொதியிடல் பொருட்கள்	15	28
03	தளுதாவல	உணவுசார் உற்பத்திகள்	3.2	10
		புதிய சோபாக் கதிரைகள்	17	20
04	லுணுவில	தும்புசார்ந்த உற்பத்திகள்	25	28
05	பல்லேகல	ஆயுர்வேத உற்பத்திகள்	9.5	15
		Pet போத்தல்கள்	10	30
		பொதியிடல் பொருட்கள்	7	17
		கூரைத் தகடுகள்	30	24
06	புஸ்ஸல்ல	இலகு பொறியியல்	12.3	29
		இலகு பொறியியல்	5.1	21
		சீமெந்துசார்ந்த உற்பத்திகள்	3	8
07	வவுனியா	சலவைச் சவற்காரம்	2	5
		சேவை நிலையம்	5.7	8
மொத்தம்			**586.1**	**505**

அட்டவணை - 4.5.3

கைத்தொழிற் பேட்டைகளில் 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கைத்தொழில்கள், அவற்றின் முதலீடு, தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை மற்றும் உற்பத்திகள்.

தொ. இல.	கைத்தொழற் பேட்டை	மேற்கொள்ளப்படும் உற்பத்தி	தொழில் வாய்ப்புக்களின் எண்ணிக்கை	முதலீடு (ரூ.மில்.)
01	புத்தல	உருக்குசார் உற்பத்தி	145	70
02	ஏகல	உருக்குசார் உற்பத்தி	52	78.6
		ஸ்கிம் கோட்	15	75
		பிளாஸ்டிக்சார் உற்பத்திகள்	6	120
03	கலிகமுவ	மரத்திலான தளபாடங்கள்	6	13
04	களுதாவல	பொலித்தீன் உற்பத்தி	10	20
		காரீயம் உற்பத்தி	15	32
05	லுணுவில	தும்புசார்ந்த உற்பத்திகள்	32	142
06	பல்லேகல	வாகன உதிரிப்பாகங்களை ஒன்றுசேர்த்தல்	10	90.8
		ஆயுர்வேத உற்பத்திகள்	8	57
07	பன்னல	பொதியிடல்	16	125
		கைத்தொழில் தேங்காய் எண்ணெய்	4	8.8
		றேடியேட்டர்	10	50
08	புஸ்ஸல்ல	இலகு பொறியியல்	18	12.3
09	வவுனியா	சேவை நிலையம்	8	5.7
மொத்தம்			**355**	**900.2**

அட்டவணை - 4.5.4

புதிய காணித்துண்டுகள்/ கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடங்கள் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பித்துள்ள சாத்தியவளமுடைய கைத்தொழிலாளர்கள் 20 பேர் நேர்முகப்பரீட்சை அமர்வுகள் வாயிலாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

4.5.2 குத்தகை ஒப்பந்தங்களைக் கைச்சாத்திடுதல்

காணிகள்/ கட்டிமுடிக்கப்பட்ட கட்டிடங்கள் போன்றவற்றுக்கு ஏதுவாகக் கைத்தொழிலாளர்களுடன் 20 – 30 வருட காலத்திற்குக் குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இதற்கமைவாக 2017ஆம் ஆண்டில் 43 குத்தகை ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டதுடன் அதன்மூலம் ரூபாய் 0.67 மில்லியன் வருமானமாக ஈட்டிக்கொள்ளப்பட்டது.



உரு 4.5.1 – கைத்தொழிற் பேட்டைகளின் வருமானம் 2017

4.5.3 வாடகை வருமானங்களை அறவிட்டுக்கொள்ளுதல்

குத்தகையின் கீழ்ப் பெற்றுக்கொள்ளப்பட்ட காணிகள் மற்றும் கட்டிடங்களுக்கு வாடகை, நீர்வழங்கல் கட்டணம் மற்றும் நிலுவைப்பணத்தொகையை அறவிட்டுக் கொள்வதனூடாக ஈட்டிக்கொள்ளப்பட்ட ஒட்டுமொத்த மாதாந்த/ வருடாந்த வருமானம் ரூபாய் 66.6 மில்லியனாக இருப்பதுடன் அதே 2017ஆம் ஆண்டு செலவுறுதிச்சீட்டுக்கு உட்படுத்தப்பட்ட மொத்த வருமானத்தின் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமாகும். மீள்செலுத்தப்பட வேண்டிய மூன்றாண்டுகால வைப்பீடாக அமையும் குத்தகைத் தொகையிலிருந்து அறவிட்டுக்கொள்ளப்பட வேண்டிய பணத்தொகைக்காகப் பேணிவரப்படுகின்ற சுழற்சி நிதியங்களின் திரண்ட பெறுமானம் 2017ஆம் ஆண்டு இறுதியாகின்ற போது ரூபாய் 9.3 மில்லியனாக அமைந்தது.

4.5.4 பல்லேகல கைத்தொழிற் பேட்டையின் 50 ஆண்டுகாலப் பொன் விழாவினைக் கொண்டாடுதல்

கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 19 கைத்தொழிற் பேட்டைகளில் ஒரு கைத்தொழிற் பேட்டையாக அமையும் கண்டி மாவட்டத்தில் அமைந்துள்ள பல்லேகல கைத்தொழிற் பேட்டை 2017 நவம்பர் 17ஆம் திகதி அதன் 50 ஆண்டு நிறைவினைக் கொண்டாடியது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டதுடன் இக்கால கட்டத்துக்குள் நிறைவேற்றப்பட்ட சேவைகளைப் பாராட்டி உத்தியோகத்தர்களுக்கும் கைத்தொழிலாளர்களுக்கும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன.

கண்டி பல்லேகல கைத்தொழிற் பேட்டையின் அனுசரணையின் கீழ்த் தற்போது 64 வகையிலான கைத்தொழில்கள் செயற்படுத்தப்படுகின்றன. இக்கைத்தொழில்கள் ஊடாக 2800 நேரடித் தொழில் வாய்ப்புகளும் மறைமுகமாக ஆயிரக்கணக்கான தொழில் வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளன. மேலும், இக்கைத்தொழிலாளர்களுக்கு அவர்களின் தொழிற்பாடுகளைச் சர்வதேச மட்டத்திற்கு விருத்தி செய்துகொள்ளக்கூடிய வகையில் புதிய தொழில்நுட்பம் பற்றிய அறிவினை வழங்குதல், சந்தை பற்றி ஆய்வினை மேற்கொள்வதற்கும் போட்டிமிகு சந்தைக்குள் நிலைத்து நிற்பதற்கும் தேவையான அறிவினை வழங்கும் பொருட்டு வெளிநாட்டு விஜயங்களை ஒழுங்கு செய்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன.

நாட்டினுள் கைத்தொழிற் பேட்டைகள் தாபிக்கப்பட்டுள்ள இடங்கள்



4.6 பொறியியல் பிரிவு (ED)

கைத்தொழிலாளர்களின் கைத்தொழில் திட்டங்களை உள்நாட்டு மற்றும் உலகளாவிய ரீதியில் உயர்ந்த சந்தைப் போட்டிகளுடன் கூடிய உற்பத்தியாக அமையும் பொருட்டு மிகவும் பொருத்தமானதாக மாற்றியமைக்கப்படுவதுடன் அவர்களின் "தொழில்நுட்ப மற்றும் தொழிற்படுத்தல்" ஆற்றல்களை மேம்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொறுப்பு பொறியியல் பிரிவுக்குச் சாட்டப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இப்பிரிவு பொறியில் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்துக்குத் தேவையான அனைத்து உள்வாரியான சாட்டுதல்களுக்காகவும் தேவையான வழிகாட்டல்களையும் ஒத்துழைப்பினையும் வழங்குகின்றது.

உள்வாரியான பிரிவுகளில் குறிப்பாக நாடளாவிய ரீதியில் அமைந்துள்ள கைத்தொழில் பேட்டைகள் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஆற்றல் கிட்டும் வகையில் பொறியியல் பிரிவு பின்வரும் துணைப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

(அ) கட்டுபத்த தலைமை அலுவலகம் – பொறியியல் வேலைத்தளம், பொறியியல் வார்ப்பு வேலைத்தளம், பணிப்பாளர் (பொறியியல்) அலுவலகம், (தொழில்நுட்பத் தகவல்கள் மற்றும் ஆலோசனைச் சேவைகள், மதிப்பீட்டு அறிக்கைகள் போன்றவை) சிவில் பொறியியல் மற்றும் மின் பொறியியல் சேவைகள் எனும் பிரிவுகள் இதில் உள்ளடங்குகின்றன.

(ஆ) மின் முலாம் பூசும் நிலையம் – பேலியகொடை

(இ) பொருத்தமான தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் – பன்னல

(ஈ) பொது சேவைகள் நிலையம் – மாத்தறை

(உ) பித்தளைப் பொருட்கள் சேவை நிலையம் – பமுணுவ

4.6.1 இப்பிரிவின் செயற்பாடுகள்

2017ஆம் அண்டில் பொறியியல் பிரிவின் செயற்பாடுகள் பின்வரும் விடயங்களை நோக்காகக் கொண்டு திட்டமிடப்பட்டது.

(அ) கைத்தொழிலாளர்களுக்கு மூலப்பொருட்களைத் தெரிவு செய்துகொள்ளும் போது, இயந்திர உபகரணங்களை வடிவமைக்கும் போது/ விருத்தியாக்கும் போது மற்றும் பொறியியல் விடயங்களில் தொழில்நுட்பம்/ செயன்முறையினை விருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

(ஆ) கோரிக்கைகளின் அடிப்படையில் கைத்தொழிலாளர்களுக்கு பதனிடல், வார்ப்பு, உலோக விரிவாக்கற் சேவைகளை வழங்குதல்.

(இ) அனைத்து தாபன தொடர்புகளின் போதும் தேவையான சிவில், இயந்திர மற்றும் மின் பொறியியல் ஒத்துழைப்பினை வழங்குதல்.

(ஈ) நிதி நிறுவனங்களினால் கைத்தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற கடன் வசதிகளுக்கு இயந்திர உபகரண மதிப்பீடுகளை வழங்குதல் மற்றும் இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோக வார்ப்பு நடவடிக்கைகள், இறப்பர் உற்பத்தி, உலோக முடிவாக்கம், உணவு, எண்ணெய், நார், கட்டிடப் பொருட்கள் மற்றும் விசேட இரசாயனப் பொருட்கள் போன்றவற்றிற்கு இரசாயனவியல் பரிசோதனை சேவைகளை வழங்குதல் ஏனைய செயற்பாடுகளில் சிலவாகும்.

(உ) கைத்தொழில்களுக்கு அடிப்படை மாதிரிகளுடன் கூடிய சிக்கனம் மிக்க விசேட இயந்திர உபகரணங்களைத் தயாரித்தல்.

(ஊ) அவ்வப்போது எழுகின்ற கைத்தொழில் பிரச்சினைகளுக்குத் தீர்வு தேடும்போது தொழில்வாண்மை சார்ந்த பொறியியல் உதவிகளை வழங்குதல்.

4.6.2 2017ஆம் ஆண்டின் செயலாற்றுகை

அண்டிற்குள் ஈடேற்றப்பட்ட செயற்பாடுகளின் பௌதிக மற்றும் நிதிப் பெறுபேறுகளுக்கு அமைவாகப் பிரிவின் செயலாற்றுகை அளவிடப்படுகின்றது. பிரிவினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் பிரதானமாக வேலைத்தளம், வார்ப்பு வேலைத்தளம், மின் முலாம் பூசல் நிலையம், இரசாயனக் கூடம், இயந்திர உபகரணங்களை மதிப்பிடுவது சம்பந்தமான பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் வார்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகப் பல்வேறு பொருட்களை விற்பனை செய்தல், ஆகியற்றினூடாக ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானமாகும்.

இப்பிரிவிற்குச் சொந்தமான பல்வேறு அலகுகளினால் வெளிவாரியான சேவைகளை வழங்குவதன் ஊடாக ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் பற்றிய விபரங்கள் 4.6.1 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக பொறியியல் பிரிவு ஏனைய பிரிவுகளுக்கு சிவில் இயந்திர மற்றும் மின் பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்பிரிவினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் பற்றிய விபரங்கள் பின்வருமாறு பொழிப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.(4.6.1 அட்டவணையைப் பார்க்க)

2017ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்ட சேவைகளின் மூலம் வெளிவாரியாக ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம்.

தொ. இல.	பிரிவு	மொத்த வருமானம் (ரூ.) (வற் மற்றும் தே.க.வ. தவிர்ந்த)
01	பொறியில் வேலைத்தளம் – தலைமை அலுவலகம், கட்டுபத்த	5,655,898
02	வார்ப்பு வேலைத்தளம் – தலைமை அலுவலகம்	3,363,656
03	மதிப்பீட்டு அறிக்கைகள் - தலைமை அலுவலகம்	2,456,08
04	பொருத்தமான தொழில்நுட்ப விருத்தி நிலையம் - பன்னல	2,978,670
05	மின் முலாம் பூசும் நிலையம், பேலியகொடை	1,611,316
06	பொது சேவைகள் நிலையம், மாத்தறை	1,331,707
07	பித்தளைப் பொருட்கள் சேவை நிலையம்	344,067
மொத்தம்		**17,741,400**



உரு 4.6.1 – பொறியியல் பிரிவின் வருமானம் - 2017



உரு 4.6.2 - பொறியியல் பிரிவினால் வழங்கப்பட்ட சேவைகள் – 2017

உள்வாரியான சேவைகள்

பொறியியல் பிரிவின் கீழ் பல்வேறு அலகுகளினால் உள்வாரியாக ஈடேற்றப்பட்டுள்ள பணிகளின் பெறுமதி (சேவை அடிப்படையில் கிரயம்) பின்வருமாறு:

தொ. இல.	அலகு	பூர்த்தியாக்கப்பட்ட உள்வாரியான பணிகளின் பெறுமதி (ரூ.)
1	வேலைத்தளம் – தலைமை அலுவலகம்	142,930.35
2	வார்ப்பு வேலைத்தளம் - தலைமை அலுவலகம்	509,574.89
3	சிவில் பொறியில் சேவை - தலைமை அலுவலகம்	1,753,545.79
4	மின் பொறியில் சேவைகள் - தலைமை அலுவலகம்	488,806.05
மேற்படி பிரிவுகளினால் வழங்கப்பட்ட உள்வாரியான சேவைகளின் மொத்தப் பெறுமதி		**2,894,857.08**

ஆலோசனை/ பரவலாக்கல் சேவை

ஆலோசனை சேவை

2017ஆம் ஆண்டு 60 கைத்தொழிலாளர்களுக்கு தொழில்நுட்ப/ செயன்முறையாக்கல் தகவல்கள் பற்றிய ஆலோசனைகள் மற்றும் திட்டமிடல் அத்துடன் பதனிடல் பற்றிய ஆலோசனைச் சேவைகள் வழங்கப்பட்டன. இவற்றுள் 6 பொருத்தமான தொழில்நுட்பத்தை விருத்தியாக்கும் நிலையத்தினூடாகவும் 14 மின் முலாம் பூசும் நிலையங்கள் ஊடாகவும் எஞ்சிய 40 தலைமை அலுவலகத்தினாலும் வழங்கப்பட்டன.

இயந்திர உபகரணங்கள்/ உபகரணங்கள் செயன்முறை விருத்தி

2017ஆம் ஆண்டில் உள்நாட்டுச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான கைத்தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கமைவாக இப்பிரிவினால் பின்வரும் இயந்திர உபகரணங்கள் விருத்தி செய்யப்பட்டுள்ளன.

- இடத்திற்கிடம் எடுத்துச் செல்லக்கூடிய களிமண் குளைக்கும் இயந்திரம்.
- பொலித்தீன் கழிவுகளைக் கட்டுகளாகக் கட்டி வைக்கும் இயந்திரம்
- நெல்லிச் சாற்றினை வடிகட்டுவதற்கான இயந்திரம்

இடத்திற்கிடம் எடுத்துச் செல்லக்கூடிய களிமண் குளைக்கும் இயந்திரம்

பொலித்தீன் கழிவுகளைக் கட்டுகளாகக் கட்டி வைக்கும் இயந்திரம்

4.7) தொழில்முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவை நிலையம் (CEDACS)

புடவைக் கைத்தொழில் மற்றும் கிராமியக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சினால் தொழில் முயற்சி அபிவிருத்திக்காக முகாமைத்துவத் திறன்கள் தொடர்பிலான பயிற்சியை வழங்குவதற்குப் பயிற்சி நிலையமாக இப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது. இந்நிலையம் பயிற்சிப்பிரிவு, நூலகம், தகவல் பிரிவு, தகவல் தொழில்நுட்பப் பிரிவு மற்றும் அச்சிடல் பிரிவு எனும் உப அலகுகளைக் கொண்டதாகும்.

இப்பிரிவின் பிரதான நோக்கங்கள்

- புதிய தொழில் முயற்சிக் கலாசாரம் ஒன்றை உருவாக்குதல்.
- ஏற்கனவே உள்ள கைத்தொழில்களை விரிவாக்குவதற்குப் புதிய முகாமைத்துவ மூலோபாயங்களை அறிமுகப்படுத்துதல்.
- பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல் (தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ ஆலோசனை)
- உள்நாட்டுக் கைத்தொழிலாளர்களுக்குத் தொழில்நுட்ப அறிவு மற்றும் வர்த்தக அனுபவங்களை வழங்குதல்.
- காலோசிதமான முறையில் முக்கியத்துவம் வாய்ந்த தொழில் முயற்சிமற்றும் கைத்தொழில் துறை பற்றிச் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சியாளர்களுக்கும் எதிர்காலத் தொழில் முயற்சியாளர்களுக்கும் விழிப்புணர்வூட்டுதல்.
- ஆலோசனைச் சேவைகள் மற்றும் தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதல்.

4.7.1 தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவைகள் நிலையத்திற்குச் சாட்டப்பட்டுள்ள செயற்பாடுகள்

- தொழில் முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- வர்த்தக ஆக்கத்திறன் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- உற்பத்தித் திறனை மேம்படுத்துவதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்.
- முகாமைத்துவத் திறன்களை அபிவிருத்தி செய்துகொள்வதற்கான நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- தொழில் முயற்சியாளர்களுக்கான வர்த்தக நடவடிக்கைகள் மற்றும் வர்த்தகம் பற்றிய பயிற்சியினைப் பெற்றுக்கொடுத்தல்.
- கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்குள் 'எஸ் 5' எனும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- இணையத்தள மற்றும் மின்னஞ்சல் சேவைகளை வழங்குதல்.
- வெளியீடுகளை விற்பனை செய்தல்.
- நூலக சேகரிப்புக்களை விருத்தி செய்தல். (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்)
- நூலகப் பொருட்களைச் செயன்முறைக்கு உட்படுத்துதல்.
- கைத்தொழில் தகவல்களை ஒழுங்கமைப்புச் செய்தல்.
- கைத்தொழில் அபிவிருத்திச் சேவை பெறுனர்களுக்கு இணையத்தள வாயிலான பதிவினைப் பெற்றுக் கொடுத்தல்.
- பிரதேச காரியாலயங்களுக்கு இணையத்தள வாயிலான பதிவுடைய சேவை பெறுனர்கள் பற்றிய விபரங்களை வழங்குதல்.
- கைத்தொழிலாளர்கள், சேவை வழங்குனர்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபை ஆளணிக்குக் கைத்தொழில் தகவல்களைப் பிரச்சாரம் செய்தல்.
- நூலகத்துக்குப் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட பொருட்கள் பற்றிய தகவல்களை விநியோகித்தல்.
- நூல்களின் பெயர்ப்பட்டியல் சார்ந்த தரவுகள், உள்நாட்டு இயந்திர உபகரணங்கள் மற்றும் உற்பத்திசார் உற்பத்தியாளர்கள் அறிக்கைகள், இலங்கைத் தர நியமங்கள், உதவி நிறுவனங்கள் மற்றும் சட்டங்களின் தொகுப்புப் பற்றிய தரவுக் களஞ்சியமொன்றைப் பேணி வருதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு இயந்திரோபகரணங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- "கைத்தொழில்கள்" சஞ்சிகை மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் செய்திச் சஞ்சிகையைத் தயாரித்தல்.

- கைநூல் பொதி, கையேடு, விபரப்பட்டியல், பத்திரங்கள் போன்ற வெளியீடுகளை உருவாக்குதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.
- விசாரணைகள் மற்றும் பதில் சேவைகள்.
- ஆற்றுப்படுத்தல் சேவைகள்.
- கண்காட்சி அரங்குகள், வேலை அமர்வுகள் போன்றவற்றில் பங்குபற்றல் மற்றும் நூலகத் திரட்டுக்களை இற்றைப்படுத்துதல் மற்றும் தேவையாயின் புதிய தகவல்களை ஒன்று திரட்டுதல்.

4.7.2 மகாவலி இளைஞர், யுவதிகளுக்கான தொழில் முயற்சி உருவாக்க நிகழ்ச்சித் திட்டங்கள்

தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரை சேவை நிலையத்தினால் மகாவலி இளைஞர் யுவதிகளுக்கான தொழில்நுட்ப அவிருத்தி மற்றும் தொழில் முயற்சி உருவாக்கம் பற்றிய முகாமைத்துவ ஆற்றலை மேம்படுத்தும் நோக்கில் தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் தொழில் முயற்சி உருவாக்கம் சார்ந்த பல நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியது.

நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்ட வகைகள் மற்றும் அது தொடர்பான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

பிரிவின் மீது சாட்டப்பட்டுள்ள செயற்பாடுகள்

நிகழ்ச்சித் திட்ட வகை	ஆரம்பிக்கப்பட்ட திகதி	இடம்
சீமெந்து சார்ந்த மற்றும் இழைக் கண்ணாடி சார்ந்த தொழில் முயற்சி உருவாக்கம்	2017 ஜூலை 9 – 11	அரவ்வத்தை
சீமெந்து சார்ந்த உற்பத்திகள் பற்றிய தொழில் முயற்சி உருவாக்கம்	2017 மே 19 -21	தம்புத்தேகம
வீடுகளி வயரிங் செய்தல் பற்றிய தொழில் உருவாக்க நிகழ்ச்சித் திட்டம்	2017 ஜூலை 28 - 30	வெலி ஓயா
செல்லிடத் தொலைபேசிகளைப் பழுது பார்த்தல் பற்றிய தொழில் உருவாக்க நிகழ்ச்சித் திட்டம்	2017 ஜூலை 28 - 30	வெலி ஓயா
வீடுகளி வயரிங் செய்தல் பற்றிய தொழில் உருவாக்க நிகழ்ச்சித் திட்டம்	2017 ஆகஸ்ட் 25 - 27	துல்கிரியாவ
சீமெந்து சார்ந்த உற்பத்திகள் பற்றிய தொழில் முயற்சி உருவாக்கம்	2017 ஆகஸ்ட் 25 - 27	துல்கிரியாவ
தொழில் முயற்சி அபிவிருத்தி	2017 ஜூலை 14 - 15	வகமூண
உங்கள் தொழில் முயற்சியினை முன்னேற்றிக் கொள்ளுங்கள்	2017 மே 25 - 27	தம்புத்தேகம
பேக்கரி உற்பத்தி பற்றிய பல்வகைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டம்	2017 ஜூன் 16 – 18	தம்புத்தேகம
உங்கள் தொழில் முயற்சிக் கருத்துக்களைத் தோற்றுவித்துக் கொள்ளுங்கள்	2017 ஜூன் 22 - 24	தம்புத்தேகம

அட்டவணை – 4.7.1

4.7.3 சமூர்த்தித் தொழில் முயற்சியாளர்களுக்கான முகாமைத்துவத் திறன் அபிவிருத்தி

இதற்கு மேலதிகமாகத் தொழில் முயற்சி அபிவிருத்தி மற்றும் மதியுரைச் சேவை நிலையம் 2017 செப்டெம்பர் 16 -18 திகதிகளில் வகமூணப் பிரதேசத்தில் சமூர்த்தித் தொழில் முயற்சியாளர்கள 20 பேருக்கு முகாமைத்துவத் திறன் விருத்திப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தியதுடன் அதனூடாக அவர்களின் தொழில்முயற்சி ஆற்றல் மற்றும் சந்தைப்படுத்தல், அறிக்கைகளைப் பேணி வருதல் மற்றும் தொழில் முயற்சிகளைத் திட்டமிடுதல் பற்றிய ஆற்றலை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. இலங்கைச் சமூர்த்தி அதிகார சபையினால் இந்நிகழ்ச்சித் திட்டம் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் அதற்கான நிதியம் வழங்கப்பட்டது.



உரு 4.7.1 – பிரிவினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் – 2017

4.8 தொழில்நுட்ப சேவைப் பிரிவு (TSD)

தொழில்நுட்ப சேவைப் பிரிவு தற்போது கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர்களுக்கும் எதிர்காலக் கைத்தொழிலாளர்களுக்கும் அவர்களினால் கோரப்படுகின்றவாறு தொழில்நுட்பத் துறைகளுக்கு ஏதுவான பயிற்சி, மதியுரை மற்றும் தேவையான வழிகாட்டல்களை வழங்கியுள்ளது. அடிப்படையில் கைத்தொழில்களை நவீனமயப்படுத்தி, பல்வகைமைக்கு உட்படுத்துவதற்காகவும் அவற்றின் உற்பத்தித் தரம் மற்றும் செயன்முறை வினைத்திறனைச் சந்தைக்குள் மிகவும் போட்டி மிக்கதாக மாற்றி அமைப்பதற்கும் தேவையான தொழில்நுட்பம் வழங்கப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக இப்பிரிவு இத்துறையினால் அனுமதியளிக்கப்பட்டுள்ள உற்பத்தி அளவுகோல்களுக்கு இசைந்தொழுகும் புதிய உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குவதுடன் ஒட்டுமொத்த சேவைகளாகிய உணவு, இரசாயனப் பொருட்கள், எண்ணெய் மற்றும் நார், கட்டிடப் பொருட்கள் மற்றும் கணணித் தொழில்நுட்பம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சுற்றாடல் நேயமிக்க சூழமைவொன்றைப் பெற்றுத் தருகின்றது.

<u>செயலாற்றுகை வெற்றிகள்</u>

தொழில்நுட்ப சேவைப் பிரிவின் 2017ஆம் ஆண்டிற்கான செயற்திட்டத்தில் அப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதிக மற்றும் நிதிசார் செயலாற்றுகைக்கும் அவற்றின் வினைத்திறனுக்கும் ஏதுவாக அளவீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2017ஆம் ஆண்டிற்குள் இப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு:

4.8.1 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுத் தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொள்ளுதல்

காலி மாவட்டத்தில் கறுவாய் எண்ணெய் உற்பத்தியாளர்களுக்குக் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்ட "பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா உற்பத்திகள்" தொடர்பாகத் தொழில்நுட்பத்தை வளர்க்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக கறுவா எண்ணெய் சார்ந்த களும்புகள் மற்றும் கறுவா எண்ணெய் சார்ந்த எயார் பிரஸ்னர் ஆகியவற்றை உற்பத்தி செய்தல் தொடர்பாகத் தொழில்நுட்பம் பெற்றுக் கொள்ளப்பட்டன. மேலும், கொணன்வூவவில் அமைந்துள்ள உணவு ஆராய்ச்சிப் பிரிவினால் நடாத்தப்பட்ட "பெறுமதி சேர்க்கப்பட்ட காளான் உற்பத்திகள்" பற்றிய செயலமர்வு வாயிலாக காளான் மா, பிஸ்கட், சொசேஜஸ், கத்தரிப் பொரியல் பைற்ஸ், மற்றும் காளான் சீனிச் சம்பல் போன்றவற்றைத் தயாரித்தல் தொடர்பிலான புதிய தொழில்நுட்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

4.8.2 உற்பத்திகளை விருத்தியாக்குதல்

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் உணவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி டபிள்யு.எல். இசுரு விஜயசேகர அவர்களின் மேற்பார்வையின் கீழ் "கடல் தாவரங்களினால் போசாக்கூட்டப்பட்ட பிஸ்கட்" "பலாக்கொட்டையினால் தயாரிக்கப்பட்ட இனிப்புக்கள்" "நீர் நீக்கம் செய்யப்பட்ட மரக்கறி சூப் கலவை" ஆகிய 3 புதிய உற்பத்திகள் தயாரிக்கப்பட்டன.

4.8.3 தேசிய பசுமை அறிக்கையிடல் முறைமையின் கீழ் பசுமை அறிக்கையிடலில் ஈடுபட்டுள்ளவர்களின் ஆற்றலை விருத்தி செய்தல்

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தொழில்நுட்ப சேவைகள் பிரிவு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுடன் இணைந்து பசுமை அறிக்கையிடல் முறைமை பற்றிய அறிவினை மேம்படுத்தும் பொருட்டு தேசிய பசுமை அறிக்கையிடல் முறைமையின் கீழ்ப் பதிவு செய்துகொண்டுள்ள உற்பத்தித் துறையின் கைத்தொழிலாளர்கள் மற்றும் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி அமர்வொன்றை நடாத்தியது. இந்நிகழ்ச்சித் திட்டம் 2017 மார்ச் மாதம் 28ஆம் திகதி இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை மத்திய வங்கியின் கேட்போர் கூடத்தில் நடாத்தப்பட்டது. 2017ஆம் ஆண்டில் கைத்தொழில்களினால் முன்வைக்கப்படுகின்ற பசுமை அறிக்கைகளை மெய்ப்பித்து அளவிடக்கூடிய வெளி நிறுவனமாக பசுமைக் கைத்தொழில் அபிவிருத்திச் சபை கீழே பெயர் குறிப்பிடப்படுகின்ற 5 கைத்தொழில்களுக்குப் பசுமை எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தியது. ஈ.பீ. கிரீசி அன்ட் கம்பனி பீ.எல்.சீ., ரசோதா டயரி புரொடக்ற்ஸ் தனியார் கம்பனி, போபிட்டிய ஓட்டோ என்ரபிரைசஸ், கதிகல்லைத் தேயிலைத் தொழிற்சாலை மற்றும் கால்ட்டன் ஸ்வீற் கவுஸ் தனியார் கம்பனி.

4.8.4 சேவை பெறுனர்களின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்

தொழில்நுட்ப சேவைப் பிரிவிற்குள்ளும் அதற்கு வெளியிலும் 497 கைத்தொழிலாளர்களின் பங்கேற்புடன் சேவை பெறுனர்களின் தேவைக்கேற்ப தயாரிக்கப்பட்ட குறுங்கால 17 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் வாயிலாக ஈட்டிக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூபாய் 1,150,238.19 ஆகும்.

இல.	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	நிகழ்ச்சித் திட்டத்தின் விபரம்	வருமானம் (ரூ.)
01	"உணவுக் கைத்தொழில் துறைக்குச் சிறந்த உற்பத்தி அனுபவங்கள்" பற்றிய நிகழ்ச்சித் திட்டம் (2017 மார்ச் 29 – 30)	பரிசோதனைகளை மேற்கொள்ளும் பொருட்டு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகங்களில் உள்ள 32 உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளித்தல் மற்றும் சிறந்த உற்பத்தி அனுபவங்களைச் சான்றுப் படுத்தும் மட்டத்திற்குக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புதல் இதன் நோக்கமாகும்.	127,587.00
02	"சலவைச் சவற்கார உற்பத்தி" பற்றிப் பயிற்றுவிப்பாளர்களைப் பயிற்றுவித்தல் (2017 ஜூன் 30)	வெலிக்கடைச் சிறைச்சாலையின் உத்தியோகத்தர்களுக்கு இந்நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.	23, 445.00
03	"கூட்டுப்பசளை உற்பத்தி மற்றும் உயிர் வாயுத் தொழில்நுட்பம்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 ஜூலை 03 – 07)	இந்நிகழ்ச்சித் திட்டம் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கேற்ப சேனபுர மூன்றாம் நிலைக் கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சி நிலையத்தில் வதிவிடப் புனர்வாழ்வு பெறுனர்களினால் நடாத்தப்பட்டது.	88,179.24
04	"பாடசாலை மாணவர்களுக்கான கூட்டுப்பசனை உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (நிகழ்ச்சித் திட்டம் 02) (2017 மே 15 – 20)	இந்நிகழ்ச்சித் திட்டம் மொனராகலை மாவட்டத்தின் றோயல் கல்லூரியிலும் மகாநாம கல்லூரியிலும் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது.	90,357.09
05	"பாடசாலை மாணவர்களுக்கான கூட்டுப்பசனை உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (நிகழ்ச்சித் திட்டம் 02) (2017 ஜூன் 17 – 26)	இந்நிகழ்ச்சித் திட்டம் மொனராகலை மாவட்டத்தின் விவில, மதகம கல்லூரியிலும் நான்ன புராவ கல்லூரியிலும் பாடசாலை மாணவர்களுக்காக நடாத்தப்பட்டது.	155,609.16

இல.	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	நிகழ்ச்சித் திட்டத்தின் விபரம்	வருமானம் (ரூ.)
06	"உணவுப் பொதியிடல் மற்றும் லேபல் ஒட்டுதல்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 ஆகஸ்ட் 23)	இந்நிகழ்ச்சித் திட்டம் இரத்மலானை பிரதேச செயலகத்தின் வேண்டுகோளுக்கிணங்க சமுர்த்திப் பயனாளிகளுக்காகத் தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் நடாத்தப்பட்டது.	10,350.00
07	"உடனடிப் பழப்பானம், ஜாம் மற்றும் கோடியல் உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 ஆகஸ்ட் 25)	இந்நிகழ்ச்சித் திட்டம் இரத்மலானை பிரதேச செயலகத்தின் வேண்டுகோளுக்கிணங்க சமுர்த்திப் பயனாளிகளுக்காகத் தொழில்நுட்ப சேவைப் பிரிவினால் நடாத்தப்பட்டது.	17,457.00
08	"கூட்டுப்பசளை உற்பத்தி மற்றும் உயிர் வாயுத் தொழில்நுட்பம்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 செம்ரெம்பர் 03 - 06)	இந்நிகழ்ச்சித் திட்டம் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க சேனபுர மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தின் வதிவிடப் புனர்வாழ்வு பெறுனர்களினால் நடாத்தப்பட்டது.	89,417.10
09	"உணவுப் பதனிடல் தொழில்நுட்பம்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 ஒக்ரோபர் 13 - 14)	இந்நிகழ்ச்சித் திட்டம் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தின் பணியகத்தினால் முன்வைக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க சேனபுர மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி நிலையத்தின் வதிவிடப் புனர்வாழ்வு பெறுனர்களினால் நடாத்தப்பட்டது.	79,350.00
10	"வாழைச் சீவல்கள் (பெத்தி), மரவள்ளிச் சீவல்கள் மற்றும் பைற் கலவைகளைத் தயாரித்தல்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 ஒக்ரோபர் 23)	இந்நிகழ்ச்சித் திட்டம் தொடாங்கொட பிரதேச செயலகத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்களைச் சேர்ந்த 20 பங்கேற்பாளர்களைக் கொண்ட குழுவொன்றினால் நடாத்தப்பட்டது.	32,890.00
11	"பெறுமதி சேர்க்கப்பட்ட கறுவா உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 ஒக்ரோபர் 27)	வட்டபொல பிரதேசத்தில் கறுவாக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கைத்தொழிலாளர் குழுவொன்றுக்கு கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் காலி மாவட்ட அலுவலகத்துடன் இணைந்து இந்நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.	38,571.00
12	"செங்கல் உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 ஒக்ரோபர் 20 - 22)	இந்நிகழ்ச்சித் திட்டம் செங்கல் உற்பத்தியில் ஈடுபடுகின்ற குழுவொன்றுக்கு மன்னார் சின்னப்பண்டிவிரிச்சான் செங்கல் உற்பத்தி நிலையத்தில் நடாத்தப்பட்டது.	82,940.00

இல.	நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	நிகழ்ச்சித் திட்டத்தின் விபரம்	வருமானம் (ரூ.)
13	"சீமெந்து சார்ந்த உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 ஒக்ரோபர் 30 - 31)	இந்நிகழ்ச்சித் திட்டம் களுத்தறை மாவட்டத்தின் சிறிய தொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் வேண்டுகோளுக்கிணங்கக் கைத்தொழிலாளர்கள் குழுவொன்றிற்கு நடாத்தப்பட்டது.	29,000.00
14	"யோகட், பொப்சிகல்ஸ் மற்றும் பால் புடிங் உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 நவம்பர் 17)	இந்நிகழ்ச்சித் திட்டம் மூலட்டியன பிரதேச செயலகப் பிரிவின் மனையியல் ஆசிரியர்கள் குழுவொன்றுக்காக நடாத்தப்பட்டது.	24,670.00
15	"டயிட்டேனியம் கலந்த சீமெந்து சார்ந்த உற்பத்திகள்" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 நவம்பர் 18 - 19)	இந்நிகழ்ச்சித் திட்டம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கேகாலை மாவட்ட அலுவலகத்தின் வேண்டுகோளுக்கிணங்கக் கைத்தொழிலாளர்கள் குழுவொன்றுக்குக் கேகாலை இளைஞர் நிலையத்தில் நடாத்தப்பட்டது.	50,428.00
16	"கூட்டுப் பசளை உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 நவம்பர் 29 - டிசம்பர் 11)	இந்நிகழ்ச்சித் திட்டம் "குரு கெதரட்ட களஎலியக்" எனும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தின் துட்டுகமுணு தேசியப் பாடசாலை மற்றும் தணமல்வில தேசியப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த பாடசாலை மாணவர் குழுவொன்றுக்காக நடாத்தப்பட்டது.	204,957.60
17	"தேங்காய் எண்ணெய் உற்பத்தி" பற்றிய பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் (2017 டிசம்பர் 29)	இந்நிகழ்ச்சித் திட்டம் கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதேச அபிவிருத்திப் பிரிவுடன் இணைந்து குருநாகல் மாவட்டத்தில் கைத்தொழிலாளர் குழுவொன்றுக்காக நடாத்தப்பட்டது.	28,475.00
மொத்தம்			**1,150,238.19**

4.8.5 கைத்தொழில் சான்றிதழ் பாடநெறிக்காக நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

2017ஆம் ஆண்டில் 104 கைத்தொழிலாளர்களின் பங்கேற்புடன் 6 நீண்டகாலக் கைத்தொழில் சான்றிதழ் பாடநெறிகள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக ஈட்டிக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூபாய் 1,975,450 ஆகும்.

இல.	பாடநெறியின் பெயர்	பாடநெறிக் காலம்	வருமானம் (ரூ.)
01	கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு உருவாக்கம் பற்றிய சான்றிதழ்ப் பாடநெறி (08ஆம் குழு)	2016 டிசம்பர் 14 – 2017 மார்ச்	207,000.00
02	PLC மற்றும் HMI நிகழ்ச்சித் திட்டமாக்கல் பற்றிய சான்றிதழ்ப் பாடநெறி	2017 மே 20, 27 மற்றும் ஜூன் 03 (03 நாட்கள்)	126,500.00

இல.	பாடநெறியின் பெயர்	பாடநெறிக் காலம்	வருமானம் (ரூ.)
03	வாசனைத் திரவியங்கள் பதனிடல் தொழில்நுட்பம் பற்றிய சான்றிதழ்ப் பாடநெறி	2017 மே 27 - ஆகஸ்ட் 05 (10 சனிக்கிழமை நாட்கள்)	644,000.00
04	கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு உருவாக்கம் பற்றிய சான்றிதழ்ப் பாடநெறி (09ஆம் குழு)	2017 மே – ஜூலை	286,350.00
05	கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு உருவாக்கம் பற்றிய சான்றிதழ்ப் பாடநெறி (10ஆம் குழு)	2017 ஜூலை - 2017 ஒக்ரோபர்	270,000.00
06	போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் உற்பத்தி பற்றிய சான்றிதழ்ப் பாடநெறி	2017 நவம்பர் 18 - டிசம்பர் 16 (05 நாட்கள்)	441,600.00
மொத்தம்			**1,975,450.00**

4.8.6 பொருத்தமான வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தை வழங்குதல்

சிறியளவிலான 23 கைத்தொழிலாளர்களைக் கொண்ட குழுவொன்றுக்குத் தொழில்நுட்ப சேவை நிலையத்தில் "பால் பதனிடல் தொழில்நுட்பம்" பற்றிய உயர் பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்தப்பட்டதுடன் அதனூடாக ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் ரூபாய் 99,052 ஆகும். கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சின் ஆலோசனையின் கீழ் நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது.

4.8.7 தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வு

தொழில்நுட்ப சேவைப் பிரிவுடன் தொடர்புடைய உணவு, இரசாயனப் பொருட்கள், எண்ணெய், நார் வகைகள் மற்றும் கட்டிடப் பொருட்கள் ஆகிய துணைப்பிரிவுகளின் கீழ் 90 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அதன் மூலம் ரூபாய் 4,764,362 வருமான் ஈட்டிக்கொள்ளப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக 1,867 பேர் பயிற்றுவிக்கப்பட்டனர்.



உரு 4.8.1 - பிரிவினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானம் - 2017

4.8.8 வாசனைத் திரவியங்கள் பதனிடல் தொழில்நுட்பம் பற்றிய சான்றிதழ்ப் பாடநெறி

வாசனைத் திரவியங்களைப் பதனிடும் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த துறைகள் பற்றிய முழுமையான அறிவினை வழங்குவதற்காக இந்நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் வாயிலாக முறையாக வாசனைத் திரவியங்களைப் பதனிடுதல் மற்றும் அது சார்ந்த தர நியமங்கள் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்குச் சந்தர்ப்பத்தை வழங்கும் பொருட்டு வாசனைத் திரவியங்கள் பதனிடுதல் கைத்தொழிலைப் பார்வையிடுவதற்கான விஜயமொன்று ஒழுங்கு செய்யப்பட்டு அத்துறை தொடர்பாக முறையான அறிவினை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டது.



உரு 4.8.2 - இப்பிரிவினால் பயிற்சியளிக்கப்பட்ட மற்றும் உதவி வழங்கப்பட்ட ஆட்கள் – 2017

4.9 தோற்பொருள் உற்பத்தி மற்றும் பாதணி அபிவிருத்தி நிலையம் (CDLPF)

இலங்கையில் தோற்பொருள் உற்பத்தித் துறையினை அபிவிருத்தி செய்வதற்கு 1998ஆம் ஆண்டு இந்நிலையம் தாபிக்கப்பட்டது. இதற்கேற்ப இப்பிரிவின் மூலம் குறுங்கால மற்றும் நீண்டகாலப் பாட நெறிகளை நடாத்துவதன் மூலம் சம்பந்தப்பட்ட தொழில்நுட்பத் தகவல்களை வழங்குவதற்கும் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. இது பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தி தொடர்பாக உள்நாட்டுக் கைத்தொழில்களைக் கட்டியெழுப்புவதற்கு உதவி வழங்கியுள்ளது. இப்பிரிவின் தலைமை அலுவலகம் மொறட்டுவ கட்டுப்பத்தையில் அமைந்துள்ளதுடன் அதன் பிரதேச இரண்டு பிரிவுகள் வாரியபொல மற்றும் அமைந்துள்ளன.

4.9.1 இந்நிலையத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள்

- பாதணி மற்றும் தோற்பொருட்கள் உற்பத்தி தொடர்பான தொழில்நுட்பத்தை வழங்கும் செயலமர்வுகளை நடாத்துதல்.
- பாதணிகளை வடிவமைத்தல் மற்றும் அதனை அழகு படுத்துதல் பற்றிய உதவிகளை வழங்குதல்.
- புதிய உற்பத்திகள் மற்றும் உற்பத்தி விருத்தி தொடர்பான அறிவு மற்றும் வடிவமைப்புக்களை வழங்குதல்.
- சந்தைப்படுத்தல் மற்றும் இயந்திர உபகரணங்கள் பற்றிய தகவல்களை வழங்குதல்.
- ஆரம்பக்கட்ட இடர்வரு நிலைகளைக் குறைத்துக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல்.
- இத்துறையிலுள்ள ஊழியர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குதல்.
- பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல்:
  - வடிவமைப்புக்களைத் தயாரித்தல்.
  - பாதணிகளின் மேற்பகுதியினைத் தயாரித்தல்.
  - தோல் வெட்டுதல்
  - பெண்களுக்கான பாதணி உற்பத்தி
  - சிறுவர்களுக்கான பாதணி உற்பத்தி
  - தோற்பொருள் உற்பத்தி

4.9.2 இந்நிலையத்தினால் பெற்றுக்கொள்ளக் கூடிய வசதிகள்

- தோல் வெட்டும் இயந்திரம்
- பிளக்கும் இயந்திரம்
- தோல் வார்களை வெட்டும் இயந்திரம்
- வடிவங்களை வெட்டும் இயந்திரம்
- அழுத்த மற்றும் திரவ தெளிப்பு அறை
- மினுக்குதல் மற்றம் முடிவாக்கத்தை மேற்கொள்ளும் இயந்திரம்
- பாதணிகளின் அடித்தோலை அழுத்துவதற்கான இயந்திரம்
- செயற்பாட்டு இயந்திரம்

4.9.3 இப்பிரிவினால் ஆற்றப்படும் செயற்பாடுகள்

அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிதியளிப்பின் கீழ் அம்பாறை, பதுளை, கொழும்பு, காலி, குருநாகல், மாத்தறை, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பொலன்னறுவை மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் பாதணிகள் மற்றும் தோற்பொருட்களை உற்பத்தி செய்தல் பற்றிய தொழில்நுட்பத்தை வழங்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இப்பயிற்சித் திட்டங்களில் அநேகமானவை பிரதேச அபிவிருத்திப் பிரிவின் ஒருங்கிணைப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

1) ஊழியர்களின் திறன்களை மேம்படுத்துவத்காகவும் சுய தொழில்களை ஆரம்பிப்பதற்காகவும் நாடளாவிய ரீதியில் உள்ள தொழில் முயற்சியாளர்களுக்காக 23 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் அதன் மூலம் ரூபாய் 4,030,662 ஒட்டுமொத்த வருமானமாக ஈட்டிக்கொள்ளப்பட்டது.
2) பாதணி உற்பத்தித் துறையின் ஊழியர்களுக்குக் கோரிக்கைகளின் அடிப்படையில் (கேள்வியின் அடிப்படையில்) தயாரிக்கப்பட்ட "பாதணி வடிவமைப்பு மற்றும் அலங்கார உருவாக்கம்" எனும் 3 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இந்நிகழ்ச்சித் திட்டங்களின் வாயிலாகப் பாதணி உற்பத்தித் துறைக்கு நவீன வடிவமைப்புக் கலைகளையும் பாதணிகளைத் வடிவமைக்கும் தொழில் நுணுக்க முறைகளையும் பற்றித் தேர்ச்சியுடன் கூடிய வடிவமைப்பாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டனர். இந்த ஒட்டுமொத்தக் கருத்திட்டத்தின் மூலம் ரூபாய் 583,472 வருமானமாக ஈட்டிக்கொள்ளப்பட்டது.
3) பைகளை உற்பத்தி செய்யும் பிரிவினால் பைகளை வடிவமைத்தல் பற்றிய கோரிக்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட 3 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் வாயிலாகப் பைகளை உற்பத்தி செய்யும் துறைக்கு நவீன வடிவமைப்புக்களையும் திட்டமிடல் நுணுக்கங்களையும் பற்றிச் சிறந்த அறிவுடைய, சிறந்த தேர்ச்சியுடைய தொழில்நுட்ப ரீதியில் ஒழுங்குமுறை சார்ந்த உற்பத்தியாளர்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஒட்டுமொத்தக் கருத்திட்டத்தின் மூலம் ரூபாய் 396,473 வருமானமாக ஈட்டிக்கொள்ளப்பட்டது.
4) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைகளுடன் போட்டியிடக்கூடிய வகையில் சிறிய அளவிலான பாதணி உற்பத்தியாளர்களின் உற்பத்தித் தரத்தை மேம்படுத்தல்.
5) கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்ட மூலதனப் பாதீட்டின் வாயிலாக நடைமுறைப்படுத்தக்கூடிய விசேட கருத்திட்டத்தின் கீழ்த் தரத்தினை மேம்படுத்துவதற்கான 5 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் மாவட்ட அலுவலகங்களின் ஒத்துழைப்புடன் குருநாகல், பதுளை, மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
6) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் இணைந்து பல்வேறு குழுக்களில் பங்கேற்றுக் கொள்கை வகுத்தல் செயன்முறைக்குப் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆலோசனைக் குழு அமர்வுகளுக்கிடையில் இலங்கையின் பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தித் துறையினை விருத்தி செய்வதற்கான பிரேரணைகள் முன்வைக்கப்பட்டன.

7) பல்வேறு அரச நிறுவனங்களில் பாதணி மற்றும் தோற்பொருள் தேவைகளுக்கான கொள்வனவுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களில் பங்கேற்றல்.

8) இளம் பட்டதாரிகளை இந்தத் துறைக்கு ஈர்த்துக் கொள்ளும் நோக்குடன் வடிமைப்புக் கலை பற்றிய பாடத்துடன் தொடர்புடைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டதுடன் இவர்களின் நடைமுறைக் கருத்திட்டங்களுக்குக் கைத்தொழில் அனுபவங்கள் வழங்கப்பட்டன.

9) பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தியாளர்களின் உற்பத்திச் செயன்முறைக்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு அவர்களுக்குப் பதனிடல் வசதிகள் வழங்கப்பட்டன. 131 கைத்தொழிலாளர்களுக்குச் சேவைகளை வழங்குவதனூடாக ரூபாய் 192,186 ஈட்டிக்கொள்ளப்பட்டுள்ளது.

10) கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ்ப் பயிற்சி பெற்ற பாதணிக் கைத்தொழிலை ஆரம்பிப்பதற்குக் கரிசனை காட்டுகின்ற தொழில் முயற்சியாளர்களுக்கு ஆரம்பக் கட்ட இடர்வரு நிலைகளைக் குறைத்துக் கொள்வதற்குச் சலுகை அடிப்படையில் வசதிகள் வழங்கப்பட்டன.

11) இலங்கையிலுள்ள பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்தியாளர்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்கள் பற்றிய தரவுக்களஞ்சியமொன்றைப் பேணி வருதல்.

12) பாதணி உற்பத்தி மற்றும் பைகள் மற்றும் தோற்பொருட்கள் உற்பத்தி பற்றிய 18 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பொலன்னறுவை மற்றும் வவுனியா புனர்வாழ்வளிப்பு நிலையங்களில் நடாத்தப்பட்டதுடன் புனர்வாழ்வளிப்பு ஆணையாளர் நாயகத்தினால் இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதிகள் வழங்கப்பட்டன.

13) அண்மைக்காலத்தில் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற இலங்கை இராணுவ வீரர்களுக்கான செயலமர்வுகள் மற்றும் களவிஜயங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. இதன் மூலம் அவர்களுக்குப் பாதணி மற்றும் தோற்பொருள் உற்பத்திக் கைத்தொழில் துறையில் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தித் தேசியப் பொருளாதாரத்துக்கு அவர்கள் கொண்டுள்ள ஆற்றல்கள் மூலம் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது.

14) 2017ஆம் அண்டில் இந்நிலையத்தினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் ரூபாய் 5,782,437 ஆகும்.

4.1.0 இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் (RPD & SC)

1980ஆம் ஆண்டில் உலக வங்கியின் உதவியின் கீழ் பேலியகொடையில் தாபிக்கப்பட்ட இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவைகள் நிலையம் இலங்கையில் இறப்பர் சார்ந்த கைத்தொழில்களுக்கு உதவிகளை வழங்குகின்றது. இறப்பர் சார்ந்த உற்பத்திகளை மேற்கொள்கின்ற சுமார் 200 கைத்தொழிலாளர்கள் நீண்டகாலமாகக் கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் வழங்கப்படுகின்ற சேவைகளைப் பெற்றுக்கொண்டு இந்நிலையத்தின் நிரந்தரச் சேவை பெறுனர்களாக இருப்பதுடன் அவர்கள் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பரிசோதனை வசதிகள், விரிவாக்கல் மற்றும் மதியுரை சேவைகள், வாடிக்கையாளர்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப இயற்கை மற்றும் செயற்கை இறப்பர்க் கலவைகளைத் தயாரித்தல், இரசாயனப் பொருட்கள் மற்றும் ஏனைய பதனிடல் பொருட்களைச் சில்லறையாகக் கொள்வனவு செய்தல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்கின்றனர்.

இந்நிலையத்தினால் 2017ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய விபரங்கள் மற்றும் அவற்றின் செயலாற்றுகை பின்வரும் அட்டவணையில் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளது.

இந்த நிலையத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகள் பற்றிய விபரப் பொழிப்பு

	சேவை	குறிகாட்டி	எண்ணிக்கை
(அ)	தொழில்நுட்பத்தை வழங்குதல்	சேவை பெறுனர்களின் எண்ணிக்கை	38
(ஆ)	பரிசோதனை வசதிகள் (ஏற்றுமதிச் சந்தைக்கு இறப்பர் உற்பத்திகளை உற்பத்தி செய்கின்ற கைத்தொழிலாளர் களுக்குப் பரிசோதனை வசதிகளை வழங்குதல் இதில் உள்ளடங்குகின் றது)	நிறைவேற்றப் பட்ட வேலைகளின் எண்ணிக்கை	135
(இ)	துணை ஒப்பந்த வாய்ப்புகள்	வேலைகளின் எண்ணிக்கை	02
(ஈ)	உற்பத்தி அபிவிருத்தி மற்றும் பல்வகைப் படுத்தல்	வேலைகளின் எண்ணிக்கை	27
(உ)	தொழில்நுட்ப ஆலோசனை	எண்ணிக்கை	86

அட்டவணை - 4.10.1

4.10.1 அபிவிருத்திச் செற்பாடுகள்

இந்நிலையம் 2017ஆம் ஆண்டில் பின்வரும் கலவைகளைத் திட்டமிடுதல் மற்றும் தயாரித்தல், தரத்தினை மேம்படுத்துதல் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி போன்ற பணிகளை மேற்கொண்டுள்ளது.

ஆண்டிற்குள் நிறைவேற்றப்பட்ட அபிவிருத்திச் செயற்பாடுகள் – 2017

அ)	கலவைகளைத் திட்டமிடுதல் மற்றும் விருத்தி செய்தல்
	மேற்கொள்ளப்பட்ட விசேட உற்பத்தி வேலைகள்
i	பிரேக் சிலிண்டர் வூட்
ii	ஒணன் கமின்ஸ் ஜெனரேட்டருக்கான மவுண்டிங் சூ
iii	டயர் ட்ரேட்
iv	ப்ரசர் ஸ்விச் டயப்ரம்
v	ஒயில் ஸ்விச்
vi	மெடிக்கல் மெட்
vii	வ்ளோ பைப்
viii	யோகா மெட்
ix	கேஸ் சீல்
x	றபர் மவுன்ட்
xi	டீ/வொக்ஸ்வால்வ்
xii	சீல்

ஆ)	தரத்தை மேம்படுத்தும் செயற்பாடுகள் – 146 சான்றிதழ்கள்	
	விசேட உற்பத்திகள்	சான்றிதழ்கள் (எண்கள்)
i	டயர் ட்ரேட்	72
ii	சொலிட் டயர்	10
iii	றபர் வீடிங் பென்டர்ஸ்	02
iv	ஒயில் தடுப்புப் பாதுகாப்பு சூஸ்	04
v	எக்சர்சைசஸ் றபர் பான்ட்	02
vi	றபர் மவுன்ட்	10
vii	லேட்டக்ஸ் க்ளவுஸ்	02
viii	வோட்டர் சீல்	06
ix	டயர் பிளப்	10
x	றபர் பான்ட்	02
xi	றபர் மெட்	02
xii	றபர் கேஸ்கட்	03
xiii	றபர் றீபில்டிங்	16
xiv	ஒயில் சீல்	05

இ)	பிரதான உற்பத்தி அபிவிருத்தி வேலைகள்
	உற்பத்தியின் பெயர்
i	றபர் கேஸ்கட்
ii	வோட்டர் சீல்
iii	டஸ்ட் சீல்
iv	புட் கிரேட் சீல்
v	வாத் கெப்
vi	ஹயிட்ரோலிக் சீல்
vii	புட் வால்வ்
viii	வயரிங் பீல்
ix	மெட் மூடி
x	வோட்டர் சீல்
xi	டயர் ப்ளப்
xii	டயர் ட்ரேட்

அட்டவணை – 4.10.2

இந்நிலையத்தினால் புதிய கைத்தொழிலாளர்களை மேம்படுத்தும் பொருட்டும் ஏற்கனவே உள்ள கைத்தொழிலாளர்களினால் உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்திகளின் தரத்தினை மேம்படுத்தும் பொருட்டும் உலர்ந்த இறப்பர் மற்றும் இறப்பர் பால்சார்ந்த உற்பத்திகள் பற்றிய தொழில்நுட்பச் செய்முறை விளக்க நிகழ்ச்சித் திட்டங்கள் 23 நடாத்தப்பட்டுள்ளன.

மேலும், இந்நிலையம் இலங்கை பிளாஸ்டிக் மற்றும் இறப்பர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் இறப்பர் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா பாடநெறியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு இரசாயனக்கூட நடைமுறைப் பயிற்சி வகுப்புக்களை நடாத்தியுள்ளது.

இந்நிலையம் இவ்வருடத்திற்குள் சுய நிதியினை உருவாக்கிக்கொள்கின்ற பிரிவாக மாற்றமடையும் நோக்கத்தினை ஈடேற்றிக்கொள்ளும் பொருட்டு திருப்திகரமான முன்னேற்றத்தை அடைந்துகொண்டுள்ளது. இவ்வருடத்தில் தொழில்நுட்ப மற்றும் வணிகத் தொழிற்பாடுகளின் மூலம் ஈட்டிக்கொள்ளப்பட்ட வற் மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி தவிர்ந்த வருமானமாக ரூபாய் 20.5 மில்லியனை ஈட்டிக்கொண்டுள்ளது.

பொருட்கள் உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் - 2017

இல.	பொருட்கள்	அளவு (கி.கி)	விற்பனைப் பெறுமதி (ரூ.)	மொத்தம் (ரூ.)
(01)	இறப்பர் கலவை விற்பனை கி.கிராம்	27,900.97	15,414,534.32	
(02)	மீள் அரைத்தல் உள்ளிட்ட அரைத்தல் கட்டணம்	15,615.18	282,286.29	
(03)	கலவையாக்கப்பட்ட இறப்பர் பால் (L3) - கலன்	1,654.00	2,255,170.00	
(04)	மைய நீக்கம் செய்யப்பட்ட இறப்பர் பால் (C.Latex) - கலன்	444.25	568,896.74	
(05)	இரசாயனப் பொருட்கள்	1,009.00	600,630.73	
(06)	கெம்லொக் – லீட்டர்	30.80	183,926.20	
(07)	பொலித்தீன் – கி.கிராம்	317.73	112,684.97	
(08)	பிரிப்பு	369.00	193,218.00	
	துணை மொத்தம்			**19,611,347.25**
(09)	சேவைகள்			
	(9.1) பரவலாக்கல் மற்றும் மதியுரை		216,212.50	
(10)	செய்முறை விளக்கம்/ செயலர்வு/ துணை ஒப்பந்தங்கள்			
	(10.1) தரக்கட்டுப்பாடு மற்றும் இரசாயனகூடப் பரிசோதனைகள்		387,622.61	
	(10.2) உற்பத்தி அபிவிருத்தி		128,546.76	732,381.87
	மொத்தம்			**20,343,729.12**
	2% தே.க.வரி			406,874.58
	15% வற்			3,112,590.56
	வரியுடன் கூடிய மொத்தம்			**23,456,319.68**

உரு 4.10.1 – இறப்பர் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தினால் வழங்கப்பட்ட சேகைள் – 2017

நிதிக் கூற்றுக்கள்

- விரிவான நிதி நிலைமை பற்றிய கூற்று
- விரிவான வருமானக் கூற்று
- உரிமைப் பங்கிலான மாற்றம் பற்றிய கூற்று
- காசுப்பாய்வுக் கூற்று
- முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும் ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களும்

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரபை

2017 டிசெம்பர் 31 இல் விரிவான நிதிநிலைக் கூற்று

(அனைத்தும் இலங்கை ரூபாய்களில் காட்டப்பட்டுள்ளது)

	குறிப்பு	2017	2016
சொத்துக்கள்			
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
ஆதனங்கள், இயந்திரத்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்	14	1,451,043,622	1,350,056,061
நடைபெறும் வேலைகளில் மூலதன வேலை		33,744,045	19,280,725
நிலையான வைப்புகள்	15	59,764,317	54,003,793
		1,544,551,984	1,423,340,579
நடைமுறை சொத்துக்கள்			
இருப்புகள் (இருப்பு மற்றும் நடைபெற்றுவரும்வேலைகள்)	16	22,150,901	30,900,030
வியாபாரம் மற்றும் ஏனைய வருமதியானவை (கடன்பட்டோர்)	17	19,269,861	26,035,847
ஏனைய நடைமுறை சொத்துக்கள்	18	108,821,480	77,333,136
முன்கொடுப்பனவுகள்	19	32,913,210	14,420,904
விசேட கருத்திட்டங்கள்	20	6,676,099	-
காசு மற்றும் காசுக்கு சமமாவைகள்	21	108,805,600	194,895,214
		298,637,150	343,585,131
மொத்த சொத்துக்கள்		1,843,189,134	1,766,925,710
உரிமைப்பங்குகள் மற்றும் பொறுப்புகள்			
மூலதன ஒதுக்கங்கள்			
தேறிய அரச கொடைகள்	22	289,185,401	282,787,422
முலதன ஒதுக்கங்கள்		6,243,013	6,243,013
மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி	23	13,447,061	13,447,061
நிலையானசொத்துக்களின் மீள்கணிப்பு மீதான மிகை	24	988,387,631	961,817,782
ஏனைய அரச கொடைகள்	25	391,692,201	342,657,514
		1,688,955,307	1,606,952,792
அரச கொடைகள்		1,930,291,117	1,930,291,117
ஒட்டுமொத்த நட்டம்	26	(2,203,038,173)	(2,154,331,321)
		(272,747,056)	(224,040,204)
மொத்த உரிமைப்புங்குகள்		1,416,208,251	1,382,912,588
நடைமுறையல்லாத பொறுப்புகள்			
பணிக்கொடைக்கான ஒதுக்கீடுகள்	27	149,510,467	137,072,925
விசேட கருத்திட்டத்திற்கான கொடைகள்	28	15,508,332	35,863,915
கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டியவைகள்	29	-	12,939,579
		165,018,798	185,876,418
நடைமுறைப் பொறுப்புக்கள்			
அரசிற்குசெலுத்வேண்டியவைகள்	30	84,059	83,814
கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கவேண்டியவைகள்	31	27,469,211	27,097,701
வங்கிக் கடன் மீதி	21	38,761,209	42,376,612
ஒதுக்கீடுகளும் அட்டுறுசெலவுகளும்	32	195,647,606	128,578,576
		261,962,085	198,136,703
		1,843,189,134	1,766,925,710

பணிப்பாளர் - நிதி - வை.ஜே.ஹசன்

பக்கம் இல 05 முதல் 11வரையிலான கணக்கீட்டுக்கொளகைகளும் பக்கம் இல 12 முதல் 21 வரையிலான குறிப்புகள் இக்கூற்று முழுமைடைவதற்கு தேவையான பகுதியாகும். இந்த நிதிக்கூற்றனை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தலின் பொறுப்பு பணிப்பாளர் சபையை சாரும். பணிப்பாளர் சபை இக்கூற்றனை அங்கீகரித்துடன் பணிப்பாளர் சபையின் சார்பில் ஒப்பமிட்டுள்ளவர்கள் பின்வருமாறு

மஹிந்த ஜினசேன — **பீ.என்.பீ.மென்டிஸ்**

தலைவர் — **பணிப்பாளர் சபை உறுப்பினர்**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரபை

2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று

(அனைத்து பணத் தொகையும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது)

	குறிப்புகள்	2017	2016
வருமானம்	05	283,928,764	166,992,951
விற்பனை மற்றும்சேவைகிரயம்	06	(187,867,297)	(135,446,906)
மொத்த இலாபம்		**96,061,468**	**31,546,045**
ஏனைய வருமானங்கள்	07	89,522,766	102,363,963
அரசின் மீண்டெழும் கொடைகள்	08	278,000,000	286,000,000
நிர்வாக செலவுகள்	09	(490,715,818)	(439,742,618)
விற்பனை விநியோக செலவுகள்	10	13,993,716	(7,978,261)
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் விளைவு		**(13,137,868)**	**(27,810,871)**
நிதிக் கிரயம்	11	(4,990,928)	(2,218,712)
வரிசெலுத்துவதற்கு முன்னரான தேறிய இலாபம்/ (நட்டம்)		(18,128,796)	(30,029,583)
ஏனைய விரிவான வருமானங்கள்	12	605,676	28,873,913
ஆண்டிற்கான முழு மொத்த வருமானம் /(நட்டம்)		**(17,523,120)**	**(1,155,669)**
அதிவிசேடவிடயம்	13	-	(510,690)
அதிவிசேட விடயங்களின் பின்னர் மொத்த விரிவான (நட்டம்)/வருமானம்		**(17,523,120)**	**(1,666,359)**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்த சபை

உரிமைப்பங்கு மாற்றம் பற்றிய கூற்று

(அனைத்தும் இலங்கை ரூபாய்களில் குறிப்பிடப்பட்டுள்ளது .)

	நிகர அரச கொடை	மூலதனம் மற்றும் ஒதுக்கம்	சாட்டப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி	மீள்கணிப்பு மிகை	ஏனைய அரச கொடைகள்	அரச கொடைகள்	ஒட்டுமொத்த மிகை / பற்றாக்குறை	மொத்தம்
2017 சனவரி 01 இல் மீதி	277,910,082	6,243,013	13,447,061	999,334,417	165,498,930	1,930,291,117	(2,175,923,392)	**1,216,801,232**
முன்னைய வருடத்தின் சீராக்கம்	-	-	-	-	-	-	23,258,430	**23,258,430**
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	-	-	(1,666,359)	**(1,666,359)**
மீள்கணிப்பு மிகை மற்றும் சீராக்கங்கள்	-	-	-	(37,516,635)	-	-	-	**(37,516,635)**
அரச கொடைகள்	45,000,000	-	-	-	202,192,297	-	-	**247,192,297**
கொடைகளை இலதாக்குதல் (முன்னைய ஆண்டு)	-	-	-	-	(39,034)	-	-	**(39,034)**
கொடைகளை இலதாக்குதல்	(40,122,661)	-	-	-	(9,994,678)	-	-	**(50,117,339)**
2016 டிசெம்பர்31திகதியில் மீதி	**282,787,422**	**6,243,013**	**13,447,061**	**961,817,783**	**357,657,514**	**1,930,291,117**	**(2,154,331,322)**	**1,397,912,592**
2017 டிசம்பர் 31 ஆம் திகதியில் மீதி	282,787,422	6,243,013	13,447,061	961,817,783	357,657,514	1,930,291,117	(2,154,331,322)	**1,397,912,592**
விசேட கருத்திட்டத்திற்கு மாற்றுமதல்	-	-	-	-	(15,000,000)	-	-	**(15,000,000)**
	282,787,422	6,243,013	13,447,061	961,817,783	342,657,514	1,930,291,117	(2,154,331,322)	**1,382,912,592**
முன்னைய ஆண்டின் சீராக்கங்கள்	-	-	-	-	-	-	(31,183,732)	**(31,183,732)**
ஆண்டிற்கான இலாபம்	-	-	-	-	-	-	(17,523,120)	**(17,523,120)**
முன்னையை ஆண்டின் சீராக்கங்கள்	-	-	-	26,569,849	-	-	-	**26,569,849**
அரச கொடைகள்	55,000,000	-	-	-	66,953,882	-	-	**121,953,882**
கொடைகளின் இலதாக்கல்	(48,602,021)	-	-	-	(17,919,195)	-	-	**(66,521,216)**
2017 டிசெம்பர் மாதம் 31 திகதியில் மீதி	**289,185,400**	**6,243,013**	**13,447,061**	**988,387,632**	**391,692,201**	**1,930,291,117**	**(2,203,038,174)**	**1,416,208,255**

கைத்தொழில் அபிவிருத்தி சபை

2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்வுக்கூற்று

(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளது.)

ஆண்டிற்கான தேறிய (நட்டம்)/இலாபம்		**(17,523,120)**
காசல்லாத வகைகளுக்கான சீராக்கம்		
தேய்மானம்	44,772,522	
கடன் மற்றும் முற்பணங்களுக்கான ஒதுக்கங்கள்	5,201,003	
மூலதன கொடைகளுக்கான இலதாக்கல்	(66,521,216)	
அறிவிட முடியாத மற்றும் ஐயக் கடன்	(14,303,301)	
ஓய்வூதிய நன்மைகளின் கடப்பாடு	20,005,711	(10,845,279)
		(28,368,399)
செலுத்தப்பட்ட ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்		(7,568,169)
		(35,936,568)
தொழிற்பாட்டு மூலதனத்தின் மாற்றங்கள்		
இருப்பின் அதிகரிப்பு/வீழ்ச்சி	8,749,129	
கடனாளிகள் மற்றும் வருமாதியானவைகளில் அதிகரிப்பு/வீழ்ச்சி	21,069,287	
ஏனைய நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பு/வீழ்ச்சி	(26,287,341)	
தேறிய முற்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு/வீழ்ச்சி	(18,492,306)	
அரசிற்கு செலுத்தப்படவேண்டியவைகளின் அதிகரிப்பு/வீழ்ச்சி	245	
கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படவேண்டியவைகளின் அதிகரிப்பு/வீழ்ச்சி	(12,568,069)	
கடனாளிகள் மற்றும் அட்டுறுக் கட்டணங்களின் அதிகரிப்பு/வீழ்ச்சி	67,069,029	39,539,974
தொழிற்பாடுகளிலிருந்து தோற்றம்பெற்ற காசு		**3,603,406**
முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்வு		
நிலையான சொதுக்க்களில் முதலீடு	(5,760,524)	
நடைபெறும் முலதன வேலைகள் மீது முதலீடு செய்யப்பட்ட தொகை	(14,463,320)	
ஆதனம், இயந்திரத்தொகுதிகள் மற்றும் உபகரணங்களை அடைந்துகொள்ளுதல்/நிருமானம்	(140,039,987)	(160,263,831)
		(156,660,424)
நிதிச் செயற்பாடுகளிலிருந்து தோற்றம்பெற்ற காசுப்பாய்வு		
அரசாங்கத்திலிருந்து கிடைத்த கொடைகள்	121,953,882	
விசேட கருத்திட்டங்களில் முதலீடு	(47,767,670)	74,186,212
		(82,474,213)
சேர்க்க: 2017 .01.01 இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சம்மானவைகள்		**152,518,603**
2017.12.31 இல் உள்ளவாறு காசு மற்றும் காசுக்கு சமமானவைகள்		**70,044,390**

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை

இலங்கை கைத்தொழில் சபை முக்கிய கணக்கீட்டு கொள்கைகளும் நிதிக் கூற்றுக்கான குறிப்புகளும்

1 பொதுவான தகவல்கள்

இலங்கை கைத்தொழில் சபை 1936 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபை சட்டத்தின் கீழ் நியதிக்கசட்ட முறையிலானதொரு சபையாகும. இச்சபையின் தலைமை அலிவலகம் இல. 615 காலி வீதி கட்டுபெத்த எனும் முகவரியில் அமைந்துள்ளது.
இலங்கையிலுள்ள கைத்தொழில்களை ஊக்குவித்தல், மேம்படுத்துதல்,அபிவிருத்தி செய்தல் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் பிரதான செயற்பாடாகும்.

2 முக்கியமான கணக்கீட்டுக் கொளகைகளின் பொழிப்பு

2.1

தயார் செய்யும் அடிப்படை மற்றும் இலங்கை நிதிசார் அறிக்கையிடல் நியமங்களை பின்பற்றுதல்

சபையின் நிதிக் கூற்றுக்கள் அட்டுறு கணக்கீட்டு அடிப்படையாக அமையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக வரலாற்றுக்கிரய நியமங்களின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த முழுக்காலத்திற்கும் பொருந்தக்கூடியவாறு இடையறாதவாறு இக்கணக்கீட்டு கொள்கைகள் ஏற்புடையதாக்கப்பட்டுள்ளன.

2.2 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

அனைத்து ஆதனங்களும், பொறித்தொகுதிகளும், உபகரணங்குளும் முதலாவதாக செலவினத்தில் பதிவு செய்யப்பட்டதையடுத்து வரலாற்றுக் கிரயத்தில் தேய்பெறுமானம் கழித்து காட்டப்படும். சம்பந்தப்பட்ட உருபப்படிகளை கைக்கொள்வதற்கு நேரடியாகவே மேற்கொள்ளப்ட்ட செலவினங்கள் வரலாற்றுக்கிரயத்தில் உள்வாங்கப்படுவதுடன் உருப்படியை கைக்கொள்ளும் போது அல்லது ஏதேனும் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் இருப்புகளை விளைவிப்பது தவிர்ந்த வேறு விடயங்களுக்காக அக்காலகட்டத்திற்குள் அவ்வாறான உருப்படிகளை பயன்படுத்துவதின் விளைவாக நிறுவனம் கொண்டிருக்கும் கடப்பாடாகிய அவ்வாறான உருப்படியை கழற்றி அகற்றி அந்த உருப்படி இருந்த இடத்தை மீள் நிலைப்படுத்தும் பொருட்டு துவக்கத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயமும் வரலாற்றுக்கிரயத்தில் உள்ளடங்குகின்றது.
தேறிய புத்தகத் தொகை	**591,367**	**6,606,768**	**686,384**	**15,291,324**	**930,735**	**36,956,001**	**1,350,056,060**
2017 டிசெம்பர் 31திகதியில் முடிவடைந்த ஆண்டு							
தேறிய புத்தக தொடக்கப் பெறுமதி /மீள்கணிப்பீடு செய்யப்பட்ட பெறுமானம்	591,367	6,606,768	686,384	15,291,324	930,735	36,956,001	**1,350,056,060**
முன்னைய ஆண்டின் சீராக்கங்கள்(கிரயம்)	-	-	(581,022)	(1,618,580)	-	-	**-**
முன்னைய ஆண்டின் சீராக்கங்கள் (திரண்ட தேய்மானம்)	-	-	58,025	1,342,967	-	5,131,000	**5,720,097**
தொடக்கப் பெறுமதி	591,367	6,606,768	163,387	15,015,711	930,735	42,087,001	**1,355,776,157**
சேர்ந்தவைகள்	-	3,785,595	60418.60	4,143,726	1,054,485	211,300	**140,039,987**
அகற்றப்பட்டவை	-	-	-	-	-	-	**-**
தேய்மானக் கட்டணம் (குறிப்பு 9)	(161,778)	(1,106,583)	(340,204)	(5,245,855)	(103,214)	(11,268,333)	**(44,772,522)**
இறுதி தேறிய புத்தகத் தொகை	**429,589**	**9,285,780**	**(116,398)**	**13,913,582**	**1,882,006**	**31,029,968**	**1,451,043,622**
2017 டிசெம்பர் 31 திகதியில்							
கிரயம்	4,308,731	25,586,123	382,087	21,704,680	3,051,136	56,365,801	**1,857,032,014**
திரண்ட தேய்மானம்	(3,879,142)	(16,300,343)	(498,485)	(7,791,098)	(1,169,130)	(25,335,833)	**(405,988,393)**
தேறிய புத்தகத் தொகை	**429,589**	**9,285,780**	**(116,398)**	**13,913,582**	**1,882,006**	**31,029,968**	**1,451,043,622**

கைத்தொழில் அபிவிருத்தி சபை
நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

15 நிலையான வைப்புக்கள்	2017	2016
இலங்கை வங்கி -இடம கிளை	54,346,182	50,025,000
வருமதியாகவுள்ள நிலையன வைப்பீட்டு வட்டி	5,418,136	3,978,793
	59,764,317	**54,003,793**

16 இருப்பு மற்றும் நடப்பிலுள்ள வேலை	2017	2016
எந்திரவியல் மூலப்பொருட்கள் - (தலைமை அலுவலகம்)	822,233	868,765
அச்சு மூலப்பொருட்கள்	150,977	171,729
எழுதுகருவிகள்	3,032,894	2,036,129
வேறு மூலப்பொருட்கள்	2,271,734	2,281,915
கிராம அபிவிருத்தி கருத்திட்ட கையிருப்பு	5,498,945	11,278,520
துணை களஞ்சியம் - வார்ப்பு வேலைத்தளம்	2,891,293	3,870,395
துணை களஞ்சியம் - இறப்பர்	3,334,318	4,218,673
துணை களஞ்சியம் தோற்பொருள்	98,447	352,323
துணை களஞ்சியம் - சீ.ஏஸ் சீ.- மாத்தறை	566,982	158,009
துணை களஞ்சியம் - மின் உலோகமுலாம்பூசல் நிலையம்	1,331,900	1,258,138
துணை களஞ்சியம் - A T R D C பன்னல	605,817	892,962
துணை களஞ்சியம் - திவநெகும	17,000	17,000
துணை களஞ்சியம் - கித்துள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	243,662	272,527
பித்தளை நிலையம் - பிலிமத்தலாவ	237,371	129,582
நடைபெற்றுக்கொண்டிருக்குவேலை - நேரடிப்பொருட்கள் (தலைமை அலுவலகம்)	1,091,119	1,411,614
நடைபெற்றுக்கொண்டிருக்குவேலை - நேரடி ஊழியம்	240,709	383,379
நடைபெற்றுக்கொண்டிருக்குவேலை -பொதுமேந்தலை	268,802	285,120
நடைபெற்றுக்கொண்டிருக்குவேலை - தொழிற்சலை மேந்தலை	106,856	198,652
முடிவுப்பொருட்கள்	291,612	-
இரும்பல்லாத உலோகக் கழிவு	2,096,786	3,863,155
அசையா கையிருப்புக்களின் சேதங்களுக்கான ஒதுக்கீடுகள்	(1,584,236)	(1,584,236)
காலாவதியான கையிருப்புக்களின் சேதங்களுக்கான ஒதுக்கீடுகள்	(1,464,321)	(1,464,321)
	22,150,901	**30,900,030**

17 வியாபார மற்றும் ஏனைய வருமதிகள்	2017	2016
பலவின கடன்கொடுத்தோர் -தலைமை அலுவலகம்	264,713	264,713
பலவின கடன்கொடுத்தோர் -தோலபொருள்	18,270	18,270
பலவின கடன்கொடுத்தோர் -எந்திரவியல்	607,062	604,611
பலவின கடன்கொடுத்தோர் -எந்திரவியல் வேலைத்தளம்	6,135,571	19,881,863
பலவின கடன்கொடுத்தோர் -இறப்பர் பிரிவு	1,335,201	1,612,460
பலவின கடன்கொடுத்தோர் - A T R D C பன்னல	1,485,799	1,843,934
பலவின் கடன்கொடுத்தோர் - மின் மூலாம்பூசல் நிலையம்	73,272	73,272
பலவின கடன்கொடுத்தோர் -அச்சு	374,061	374,061

கைத்தொழில் அபிவிருத்தி சபை

நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

17 வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் (தொடர்ச்சி)	2017	2016
பலவின கடன்கொடுத்தோர் -மின்	248,334	701,826
பலவின கடன்கொடுத்தோர் - வார்ப்பு வேலைத்தளம்	1,042,207	4,739,535
பலவின கடன்கொடுத்தோர் -சிவில்	2,155,803	2,155,803
பலவின கடன்கொடுத்தோர் -லக்நிபயும்	42,120	42,120
பலவின கடன்கொடுத்தோர் -C.S.C -மாத்தை	939,153	346,492
பலவின கடன்கொடுத்தோர் - C.S.C. அநுராதபுரம்	15,025	15,025
கடனகொடுத்தோர் - மீள அனுப்பிய கசோலைகள்	209,398	209,398
குத்தகைதாரர் கடன்கொடுத்தோர்	30,096,011	33,227,904
பலவின கடன்கொடுத்தோர்	406,707	406,707
	45,448,707	66,517,993
கழிக்க: அறிவிட முடியா மற்றும் ஐயக்கடன்	(26,178,846)	(40,482,147)
	19,269,861	**26,035,847**

18 ஏனைய நடைமுறைச் சொத்துக்கள்	2017	2016
பண்டிகை முற்பணம்	407,300	364,800
பண்டிகை முற்பண சேத இழப்புக்கான ஒதுக்கீடுகள்	(141,050)	-
துவிச்சக்கர வண்டிக் கடன்	1,175,405	333,748
துவிச்சக்கர வண்டிக் கடன் சேத இழப்புக்கான ஒதுக்கீடு	(195,960)	-
துவிச்சக்கர வண்டிக் கடன்	116,304	129,254
துவிச்சக்கர வண்டிக் கடன் சேத இழப்புக்கான ஒதுக்கீடு	(2,504)	-
இடர் கடன்	47,643,990	39,320,914
இடர் கடன் சேத இழப்புக்கான ஒதுக்கீடு	(342,209)	-
விசேட கடன் முற்பணம் (வெள்ளம்)	1,324,764	-
கழிக்க - தாமத பணியாட்டொகுதி கிரயம்	(37,226,305)	(37,226,305)
தயாரிக்கப்பட்ட பணியாளர் கிரயம் (IFRS சீராக்கங்கள்)	37,226,305	37,226,305
விசேட முற்பணப் புத்தகம்	13,100	11,500
ஏனைய திணைக்களங்களிலிருந்து வருமதியாக உள்ளவை	421,933	421,933
துணை ஒப்பந்த பரிமாற்றம்	429,823	863,057
பிடித்துவைத்தல் வரி	2,423,630	2,016,777
வருமதியான வற்வரி	51,363,240	28,944,779
கித்துள் - சந்தைப்படுத்தல்	281,675	281,675
உலோகமல்லாத – கட்டுப்பாட்டுக் கணக்கு	-	742,661
பொருளாதார சேவைக் கட்டணம்	170,872	170,872
நிரல் அமைச்சிலிருந்து வருமதியாகவுள்ள	3,731,167	3,731,167
	108,821,480	**77,333,136**

கைத்தொழில் அபிவிருத்தி சபை

நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

19 வைப்பீடுகளும் முற்கொடுப்பனவுகளும்	2017	2016
காப்பு வைப்பீடுகள்	253,460	241,132
முனகொடுப்பனவுகள்	42,115,041	18,853,860
முன்கொடுப்பனவு இழப்பீடுகளுக்கான ஒதுக்கீடுகள்	(11,673,095)	(7,226,319)
முன்கொடுப்பனவுகள் முற்பணம் - (தலைமை அலுவலகம்)	192,206	192,206
பணியாட்டொகுதிக்கான முற்பணம் - தலைமை அலுவலகம்	928,370	871,275
முன்கொடுப்பனவு முற்பணம் இழப்பீட்டுக்கான ஒதுக்கீடுகள்	(635,977)	(560,073)
பணியாளர்களுக்கான எரிபொருள் முற்பணம் - தலைமை அலுவலகம்	232,212	292,312
முன்கொடுப்பனவு முற்பணம் இழப்பீட்டுக்கான ஒதுக்கீடுகள்	(232,212)	(235,612)
வருமதியாகவுள்ள ஏனைய வைப்புகள்	1,187,725	1,576,503
பிரயாண முற்கொடுப்பணவு(வெளிநாட்டு)	-	190,620
முன்கூட்டி செலுத்தப்பட்ட பணீயாட்களுக்கான கிரயம்	545,480	225,000
	32,913,210	**14,420,904**

20 விடேச கருத்திட்டங்களுக்கான கொடைகள்	2017	2016
ISO 14001 சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு நி.ந.கைத்தொழில்களுக்கு வசதி வழங்குதல் (முன்னோடித் திட்டம்ம)	1,152,971	-
தொழில்முயற்சி கலாசாரம் மற்றும் திறன் அபிவிருத்தி கருத்திட்டம்	1,977,770	-
திவயட்ட உதானய	3,545,357	-
	6,676,099	**-**

21 காசு மற்றும் வங்கி மீதிகள்			2017	2016
கணக்குக் குறியீடுகள்		**கணக்கு இலக்கம்**		
	வங்கிக் கணக்கு - லக்நிபயும் -பொலனறுவை		-	11,605
185200	நடைமுறைக் கணக்கு - IRDP - மாத்தறை	**00022667-9**	-	2,076
185010	நடைமுறைக் கணக்கு - இடம் - மொரட்டுவ	**682974**	(38,761,209)	(40,960,624)
185110	நடைமுறைக் கணக்கு - பேலியாகொட- RPD&SC .	**4064199**	125,366	967,295
185020	நடைமுறைக் கணக்கு - மூலதன கொடை வங்கிக் கணக்கு	**683231**	751,982	(1,415,987)
185030	வங்கி மீதி - எத்திரவியல் பிரிவு	**683144**	46,510	516,176
185180	வங்கி மீதி - கிராம அபிவிருத்தி கருத்திட்டம்	**4204245**	454,396	5,248,932
185070	வங்கி மீதி - உலோகம் அல்லாத	**682519**	25,647,206	321,639
185060	வங்கி மீதி - பிராந்திய பிரிவு (கித்துள்)	**683237**	4,929,617	32,971,946
185412	BOC - "இடம" கழிவுக் கருத்திட்டத்தின் சேமிப்புக் கணக்கு	**7271240**	194,868	187,240
185090	நடைமுறைக் கணக்கு - மக்கள் வங்கி	**100153657035**	7,361,875	48,610,950
185415	நடைமுறைக் கணக்கு - லக்கம் விற்பனை நிலையம்	**7153282**	2,053,989	1,127,322
185015	நடைமுறைக் கணக்கு - விடுவிக்கப்பட்ட பற்று வரி		4,024,074	2,368,416
185125	மாவட்ட அலுவலகம் - வங்கிக் கணக்கு (பிரதேச)		20,892	307,717
185413	சேமிப்புக் கணக்கு - CESS நிதியம்	**9123868**	1,582,752	1,525,279
	குறுங்கால வைப்பீடு		58,400,907	100,013,581
	வருமதியாகவுள்ள குறுங்கால வைப்பீடு வட்டி		608,408	646,305
	முற்பணம் கணக்கு		22,308	4,669
	விசேட முற்பணம் - காசாளர்		23,379	23,379
	வழியிடைப் பணம்		2,544,531	28,148
	வழியிடைப் பணம் -உலோக கழிவு கருத்திட்டம்		12,540	12,540
			70,044,390	**152,518,603**
	வரவு மீதி		108,805,600	194,895,214
	கடன் மீதி		(38,761,209)	(42,376,612)
	காசு மற்றும் காசுக்கு சம்மாவைகள்		**70,044,390**	**152,518,603**

கைத்தொழில் அபிவிருத்தி சபை

நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

22 தேறிய அரச பங்களிப்புகள்	2017	2016
2017 சனவரி 1ஆம் திகதியில் அரச மூலதன	282,787,422	277,910,082
2017 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கொடைகள்	55,000,000	45,000,000
மூலதன கொடை மாற்றம்	(48,602,021)	(40,122,661)
	289,185,401	**282,787,422**

23 மாற்றப்பட்ட சொத்துக்களின் பெறுமதி	2017	2016
1969 இற்கு முன்னர் கை.அ.ச .	4,403,441	4,403,441
கைத்தொழில் பேட்டை கூட்டுத்தாபனம்	9,043,620	9,043,620
	13,447,061	**13,447,061**

24 நிரந்த்த சொத்துக்களின் மீள்மதிப்பீட்டு மிகை	2017	2016
மு/கொ மீதி	961,817,782	999,334,417
மீள்மதிப்பீட்டு மிகை	26,569,849	(37,516,635)
	988,387,631	**961,817,782**

25 ஏனைய அரச கொடைகள்	2017	2016
செஸ் நிதியம்	10,500,000	10,500,000
Sirap நிதியம் - கட்டிடங்கள்	24,541,653	25,388,919
கொடை - இ.உ.அ.சே. நி.பேலியகொடவிற்கு இன்ஜெக்சன் மோல்டிங் இயந்திரம்	8,406,159	9,318,027
அமைச்சு நிதியம் அச்சுவேலி	25,926,815	22,834,039
அமைச்சு நிதியம் கைத்தொழில் பேட்டை	262,043,880	260,126,686
உலோகம் அல்லாத	10,000,000	10,000,000
அமைச்சு நிதியம் - தொழில்நுட்ப சேவைகள் பிரிவு இராசயனக்கூடம்	3,952,137	4,489,843
பானலுவ கைத்தொழில் பேட்டை	28,821,558	-
ஏற்றங்கீகாரம் பெற்ற உணவு இராயசனக்கூடம்	17,500,000	-
	391,692,201	**342,657,514**

26 அரச கொடைகள்	2017	2016
மீதி	1,930,291,117	1,930,291,117
திரண்ட நட்டம்	(2,154,331,321)	(2,175,923,391)
சீராக்கங்கள்	(31,183,732)	23,258,430
முன்கொண்டுசெல்லப்பட்ட பற்றாக்குறை	(17,523,120)	(1,666,359)
திரண்ட நட்டங்கள்	**(2,203,038,173)**	**(2,154,331,321)**
	(272,747,056)	**(224,040,204)**

கைத்தொழில் அபிவிருத்தி சபை

நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

27 ஓய்வூதிய நன்மைக் கடப்பாடுகள்

நிதிநிலைக் கூற்றில் இனங்காணப்பட்டபெறுமதிகள்பின்வருமாறு தீர்மானிக்கப்படும் :

	2017	2016
நிதியளிக்கப்படாத கடப்பாடுகளின் நடப்பு பெறுமதி	149,510,467	137,072,925
நிதிநிலைக்கூற்றின் பொறுப்பு	**149,510,467**	**137,072,925**

ஆண்டில் விளக்கமளிக்கப்படாத கடப்பாடுகளின் அசைவு பின்வருமாறு

	2017	2016
சனவரி 01 ஆம் திகதியில்	137,072,925	155,623,529
நடப்பு சேவைக் கிரயம்	9,125,230	8,045,317
வட்டிக் கிரயம்	11,486,158	10,798,742
சேவைக்கு பின்னரான நன்மை கடப்பாடு மீது ஆயுட்கால நட்டம்/(இலாபம்)	(605,676)	(28,873,913)
	157,078,636	145,593,675
செலுத்தப்பட்ட நன்மைகள்	(7,568,169)	(8,520,751)
டிசெம்பர் 31 ஆம் திகதியில்	**149,510,467**	**137,072,925**

பயன்படுத்தப்பட்ட முதன்மை ஆயுட்கால எடுகோல்கள் பின்வருமாறு

	2017	2016
கழிவு விகிதம்	9.50%	7.00%
எதிர்கால சம்பள அதிகரிப்பு	5.00%	5.00%
பணியாளர்களின் புரள்வு விகிதம்	2.70%	4.06%
ஓய்வபெறும் வயது	60	60

28 விசேட கருத்திட்டங்களுக்கான கொடைகள்

	2017	2016
கிராம அபிவிருத்தி கருத்திட்டம்	11,793,229	20,726,052
இருப்பு கொள்வனவு - யாழ்ப்பாணம்	-	137,863
அமைச்சு நிதியம் - Robot Arm	2,804,780	15,000,000
உணவுப் பிரிவின் சிறிய மற்றும் நடுத்தர் அளவிலான கைத்தொழில்களுக்கு வசதியளித்தல்,பொதியிடல்	910,322	-
	15,508,332	**35,863,915**

29 சபைகளுக்குக்கும் கூட்டுத்தாபனங்களுக்குமான நிலுவைகள்

	2017	2016
ஊ.சே.நி செலுத்தப்படவேண்டிய நிலுவை	-	12,939,579
	-	**12,939,579**

30 அரசாங்கத்திற்கு செலுத்தப்படவேண்டிய

	2017	2016
உள்நாட்டு இறைவரி ஆணையாளர்	28,879	28,879
உள்நாட்டு இறைவரி ஆணையாளர் முத்திரைக் கட்டணம்	55,180	54,935
	84,059	**83,814**

கைத்தொழில் அபிவிருத்தி சபை

நிதிக்கூற்றுக்கான குறிப்புகள் (தொடர்ச்சி)

31 சபைகள் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்படவேண்டிய	2017	2016
இலங்கை மத்திய வங்கி ஊசே.நி	5,632,953	3,988,778
ஊ.சே.நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டிய நிலுவை	12,939,579	16,174,480
ஊ.ந.பொ நிதியத்திற்கு செலுத்தப்படவேண்டிய நிலுவை	8,128,549	6,389,567
ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்	768,130	544,877
	27,469,211	**27,097,701**

32 வியாபார, ஏனைய கடனகொடுத்தோர்,ஒதுக்கம் மற்றும் அட்டுறுசெலவினங்கள்

	2017	2016
வர்த்தக கடன் கொடுத்தோர்	54,773,145	5,560,107
ஊழியர் நன்கொடை	700	8,695
துணை ஒப்பந்த பரிமாற்றம்	-	25,639
தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி 2%	6,064,996	3,338,717
செலுபணியாளர்களிடமிருந்து கழித்வைகள் -செலுத்தவேண்டியவைகள்	8,707	11,207
ஈட்டும்போது செலுத்தவேண்டிவைகள்	156,827	106,779
தேர்தல் ஆணையாளர்	-	54,446
பலவின கடன்கொடுத்தோர்	3,072,949	3,072,949
வேறு கடன் கொடுத்தோர்	40,883	40,883
பலவின கடன்கொடுத்தோர் -தலைமைக் காரியாலயம்	2,918,974	1,925,374
பலவின கடன்கொடுத்தோர் -உலோகமல்லாத	-	124,787
தீர்ப்பனவு செய்யப்படவேண்டிய வைப்பீடுகள்	831,674	1,093,683
செலுத்தப்பவேண்டிய சம்பளங்கள்	8,606	(12,590)
லக்நிபயும் சநதைப்படுத்தல், கணகாட்சி நிலையம் - கடன்கொடுத்தோர்	89,753	89,753
வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த முற்பணங்கள்	1,829,800	3,614,812
மீளச்செலுத்தப்படவேண்டிய கேள்விப்பத்திர வைப்பீடு	-	32,320
காப்பு வைப்பீடு	253,460	241,132
மீளச்செலுத்தப்படவேண்டிய கேள்விப்பத்திர வைப்பீடு –கைத்தொழில் பேட்டை	57,766,295	50,730,932
பௌத்த சங்கம் கட்டுப்பாட்டுக் கணக்கு -தலைமை அலுவலகம்	-	4,230
சிக்கனச் சங்க கட்டுப்பாட்டுக் கணக்கு	-	36,510
ஏனைய திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கு	-	69,221
செலுத்தப்பவேண்டிய கட்டுப்பாட்டுக் கணக்கு -தலைமை அலுவலகம்	-	2,376
தொழிலற்சங்க கட்டுப்பாட்டுக் கணக்கு	-	4,979
காப்புறுதி கட்டுப்பாட்டுக் கணக்கு	-	1,178,882
வாடிக்கையாளர்களுக்கு மிகையாக செலுத்தல்	-	2,734,019
மருத்துவ திட்டம்	2,717,504	2,816,609
தொழில் பிணக்குகளுக்கான ஒதுக்கீடுகள்	4,747,407	4,747,407
துணை ஒப்பந்த விவசாய கடன் கொடுத்தோர்	614,420	2,202,546
அட்டுறுசெலவினங்கள்	55,293,896	39,261,285
லக்கம் கடன்கொத்தோர்	2,021,433	3,433,936
கண்காட்சிக்காக செலுத்தப்படவேண்டியவைகள்	2,436,177	2,026,951
	195,647,606	**128,578,576**

சபையின் கருத்துரைகள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No. ஐஎம்யூ/ஏ/ஐடீபீ/1/17/25

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2018 ஒக்தோபர் 05

தலைவர்,
இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1969 இன் 36 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 38(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 32 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு நியமம் மூலம் தேவைப்படுத்தப்படுகின்ற அல்லது அனுமதி வழங்கப்பட்டவைகள் தவிர சொத்துக்களும் பொறுப்புக்களும் ஒன்றுக்கொன்று ஈடுசெய்ய முடியாதிருந்தது. எனினும் ரோபோ தொழில்நுட்ப நிலையத்தை தாபிப்பதற்காக அமைச்சின் மூலம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 60,000,000 மானியம் மற்றும் அப்பணத்தை செலவிட்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 57,195,219 தொகையான சொத்துக்கள் ஒன்றுக்கொன்று ஈடுசெய்யப்பட்டு ரூபா 2,804,781 தொகையான தேறிய மீதி மாத்திரம் நடைமுறையல்லா பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதன மானியம் என்பன ரூபா 57,195,210 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08

நியமத்தின் 42 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனமொன்றினால் போதியளவான முன்னைய காலப்பகுதியின் போது தவறுகள் ஏற்பட்ட காலப்பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டு ரீதியான பெறுமதி மீண்டும் வெளியிடுதல் கடந்த காலரீதியில் சீரமைக்கப்பட வேண்டிய போதிலும்,

அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் முன்னைய ஆண்டின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதியில் சீராக்கப்பட்டு 2016 ஆம் ஆண்டின் ஒப்பீட்டு ரீதியாக பெறுமதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் நியமத்தின் 49 ஆவது பந்தியின் பிரகாரம் முன்னைய காலப்பகுதியின் தவறுகள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் தேவையானளவு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) நியமத்தின் 36 ஆம் பிரிவின் பிரகாரம் நிலையான சொத்து விடயமொன்றை மீள்மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்து வகுப்பு முழுதும் மீள்மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், காணி மற்றும் காணி அபிவிருத்தி மற்றும் கட்டிட மீள்மதிப்பீட்டின் போது முறையே ரூபா 39,163,047 தொகை மற்றும் ரூபா 155,469,122 தொகையான சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) இயந்திர உபகரணங்கள், அச்சிடல் இயந்திரங்கள், அலுவலக உபகரணம் மற்றும் கணனி மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 65,735,659 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், கிரயத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய பெறுமானத்தேய்வு ரூபா 881,401 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18

கோரப்பட்ட உற்பத்தியை மேற்கொண்டு கையளிக்கப்படாதிருக்கும் போது நியமத்தின் 14 ஆவது பிரிவிற்கு முரணாக விலைப்பட்டியல் பெறுமதி ரூபா 3,902,217 தொகையான உற்பத்தியில் மீளாய்வாண்டில் விற்பனையாக அதற்குரிய கிரயம் ரூபா 2,225,726 தொகை விற்பனைக் கிரயமாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் 20

அரசாங்கத்தின் மானியமாக பலவருட காலமாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 1,964,238,178 தொகையான மூலதன மானிய மீதி நியமத்தின் 12 ஆம் பந்தியின் பிரகாரம் சீரான அடிப்படையில் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39

நியமத்தின் 46(அ) பிரிவின் பிரகாரம் சந்தை வட்டி விகிதத்திற்கு குறைவாக வழங்கப்பட்ட ஊழியர் கடன், நேர்கோட்டு வட்டி விகித முறைமை பயன்படுத்தப்பட்டு காலக்கழிவு கிரயத்தில் இனங்காணப்பட வேண்டியிருந்ததுடன் சந்தை வட்டி விகிதத்திற்கும் கடனுக்காக கிடைக்கின்ற வட்டி விகிதத்திற்கும் இடையே வேறுபாடு ஊழியர் கிரயமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 06 விசேட செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்காகக் கிடைத்த 30,600,174 தொகையான மீண்டெழும் மானியம் மற்றும் அந்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட ரூபா 36,365,951 தொகையான செலவினம் விரிவான வருமானக் கூற்றில் சீராக்கப்படாமல் மானிய கணக்கூடாக சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒப்பந்தத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது மீளாய்வாண்டில் குறைக்கப்பட்ட நிறுத்தி வைத்தல் பணம் ரூபா 3,062,748 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) புத்தள கைத்தொழில் பேட்டையின் உள்ளக வீதிகள், வடிகாண் முறைமை அமைத்தல் மற்றும் வேலி நிர்மாணம் என்பவற்றிற்கான ஒப்பந்தங்களுக்காக மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்ட பெறுமதி சேர் வரி ரூபா 1,644,239 தொகை நடைமுறை வேலையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) அனுராதபுரம் நேகம்பஹ கைத்தொழில் பேட்டையில் காணிகளைச் சுத்தப்படுத்துதல் மற்றும் வேலி நிர்மாணத்திற்கான ஒப்பந்தங்களுக்குரியதாக செலுத்த வேண்டிய செலவினமான ரூபா 993,089 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) முன்னைய ஆண்டிற்குரிய காலக்கழிவாக பிழையாக மீள் மதிப்பீட்டு ஒதுக்கத்தில் வரவு வைக்கப்பட்டிருந்த ரூபா 11,051,161 தொகை மீளாய்வாண்டின் போதும் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பல வருட காலமாக மானியமாகக் கிடைத்த இருப்பு விடயங்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கைத்தொழில் பேட்டை பிரிவின் அறிக்கையின் பிரகாரம் 13 கைத்தொழில் வலயங்களில் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 15,277,733 ஆக இருந்த போதிலும், கணக்குப் பிரிவின் அறிக்கையின் பிரகாரம் அது ரூபா 36,150,400 ஆனமையால் ரூபா 20,872,667 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இருப்புப் பெறுமதி ரூபா 9,494,613 ஆக இருந்த போதிலும், பௌதீக மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் இருப்பு மீதி ரூபா 8,594,832 ஆனமையால் ரூபா 899,781 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய பெறுமதி சேர் வரி ரூபா 51,363,240 ஆக இருந்த போதிலும், உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி அறிக்கையின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 29,408,699 ஆனமையால் ரூபா 21,954,541 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏனைய பெறவேண்டிய சொத்தாக 2013 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளிலிருந்து கொண்டுவரப்படுகின்ற 04 மீதிகளின் கூட்டுமொத்தமான ரூபா 1,304,303 தொகையைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கைத்தொழில் பேட்டையிலும் கடன்பட்டோர்களிடமிருந்தும் கிடைக்க வேண்டிய ரூபா 45,448,707 தொகையான மீதியில் 05 வருடங்களை விஞ்சிய மீதி ரூபா 24,037,750 ஆக இருந்ததுடன் மொத்தமாகக் கிடைக்க வேண்டிய பெறுமதியில் 66 சதவீதம் அதாவது ரூபா 30,096,011 தொகை கைத்தொழில்

வலயங்களிலிருந்து அறவிட வேண்டிய வாடகைப் பெறுமதியில் உள்ளடங்கியிருந்தது.

(இ) ஐந்து வருடங்களுக்கு முன்பிருந்து கொண்டு வரப்படுகின்ற ஊழியர் முற்பணம் ரூபா 928,370 தொகை தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உடைந்த பொருட்களைக் கொள்வனவு வெய்வதற்காக 2009 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் செலுத்தப்பட்ட ரூபா 5,402,511 தொகையான முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கைத்தொழில் பேட்டையின் கைத்தொழிலாளர்களுக்கு 05 வருடங்களுக்கு முன்பிருந்து செலுத்த வேண்டியதாக காணப்பட்ட ரூபா 3,072,949 தொகையான கடன்கொடுத்தோர் மீதி உரிய கைத்தொழிலாளர்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2016 ஆம் ஆண்டு மற்றும் அதற்கு முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 2,761,479 தொகை மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 3,303,517 தொகையான தேசத்தைக் கட்டியெழுப்பும் வரித்தொகை என்பன உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2016 ஆம் ஆண்டு முதல் செயற்திட்ட செலவினத்திற்காக வரிசை அமைச்சிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,731,167 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட 2012 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது மதிப்பிழந்த ரூபா 209,398 தொகையான காசோலை தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 189 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 18,128,796 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் பற்றாக்குறை ரூபா 30,029,583 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 11,900,787 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிர்வாகச் செலவினம் ரூபா 50,973,200 இனால் அதிகரித்திருந்த போதிலும், மொத்த இலாபம் ரூபா 64,515,423 இனால் அதிகரித்துச் சென்றமை நிதிவிளைவின் அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 84,728,727 தொகையான பற்றாக்குறை 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 27,259,111 தொகையான மிகை வரை அதிகரித்திருந்த போதிலும், மீண்டும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது முறையே 30,029,583 மற்றும் ரூபா 18,128,796 தொகையான பற்றாக்குறை ஏற்பட்டிருந்தது. எனினும், நிதி விளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கும் போது 2013 ஆம் ஆண்டில் ரூபா 68,532,050 ஆகக் காணப்பட்ட பங்களிப்பு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 213,500,294 வரை அதிகரித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

4.1.1 திட்டமிடல்

2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் அது தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

4.1.2 செயற்படுநிலையும் மீளாய்வும்

(அ) சபையினால் 05 பிரதான பணி அடைவுக் குறிகாட்டிகள் (KPI) இனங்காணப்பட்டு அதற்குரிய செயற்பாடுகள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்த இலக்குகள் அடையப்படாதிருந்தமை கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்களின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 400 கைத்தொழிலாளர்களின் வருமாத்தை அதிகரித்தல் மற்றும் 2000 வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்குதல் என்பன எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 187 கைத்தொழிலாளர்களினது மொத்த வருமானம் மாத்திரம் அதிகரித்திருந்ததுடன் 675 வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் மாத்திரம் உருவாகியிருந்தது.

(ii) வலயங்களில் கடைகள் அல்லது காணியை வாடகைக்கு வழங்குவதன் மூலம் 125 புதிய வியாபார நிலையங்களை ஏற்படுத்தி அதில் 500 வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 29 வியாபார நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு 444 வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்கள் மாத்திரம் உருவாக்கப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்ட சகல வியாபார நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்குமாயின் கணிசமான வேலை வாய்ப்புச் சந்தர்ப்பங்களை உருவாக்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

(iii) மீளாய்வாண்டில் 600 ஊழியர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 198 ஊழியர்களுக்கு மாத்திரம் பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

(iv) வெளிநாட்டு சந்தைகளை அறிமுகப்படுத்தும் பணி அடைவு குறிகாட்டிகளின் கீழ் 100 கைத்தொழில்களில் 25 உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், 15 கைத்தொழில்களில் 12 உற்பத்திகள் மாத்திரம் வெளிநாட்டுச் சந்தைகளில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) இறப்பர் பொருள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் 2017 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட 11 செயற்பாடுகளுக்கிடையே 08 செயற்பாடுகளில் எதிர்பார்க்கப்பட்ட இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பத்தேகம கைத்தொழில் பேட்டையில் அமைந்தள்ள காணிக்கான நில அளவை வரைபடத்தை தயாரித்தல் மற்றும் அளவை நடவடிக்கைகளுக்காக ரூபா 15,576 தொகையும், காணியைக் கைப்பற்றுவதற்காக முற்பணமாக ரூபா 500,000 தொகையும் 2007 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 31 ஆந் திகதி வரையிலும் அந்தக் காணி கையேற்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது "Foundry Plant" என்ற பெயருடைய உபகரணத்தைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 16 மில்லியன் தொகையான மூலதன மானியம் கிடைத்திருந்த போதிலும், அந்த உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதம் திறத்தல் மாத்திரம் 2018 செப்தெம்பர் 12 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) 2017 ஆம் ஆண்டில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டத்தின் 5 தடவைகளிலும் அறவிடப்படாதுள்ள கடன்பட்டோர் மீதி, ஊழியர் முற்பணத்தை அறவிடல் மற்றும் புத்தகங்களை நாளதுவரையாக்குதல் தொடர்பான தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறப்பர் பொருள் அபிவிருத்தி மற்றும் சேவை நிலையத்தில் இறப்பர் உற்பத்தி நடவடிக்கைகளுக்காக நேரடியாகத் தேவைப்பட்ட 64 இயந்திரங்களில் 26 இயந்திரங்கள் பலவருட காலமாக செயலிழந்து காணப்பட்டது. மேலும், தரக்கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்திற்குச் (QC Lab) சொந்தமான பாவனைக்கு எடுக்க முடியாத நிலையில் செயலிழந்து 20 உபகரணங்கள் காணப்பட்டன.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 9,318,026 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட இறப்பர் இன்ஜெக்சன் மோல்டின் இயந்திரம் மூலம் இறப்பரை அண்மித்த உற்பத்திக் கைத்தொழில்களில் ஈடுபடுகின்ற 250 நலனாளிகளுக்கு தேவையாக பயிற்சிகளை வழங்குவதன் மூலம் கைத்தொழிலாளர்களுக்கு தமது உற்பத்திகளுக்குத் தேவையான மாதிரிகளைத் தயாரித்து வழங்குதல் நோக்கமாக இருந்தது. எனினும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது 17 பயிலுனர்கள் மாத்திரம் பயிற்றுவிக்கப்பட்டமை மற்றும் ஒரு நிறுவனத்திலிருந்து மாத்திரம் கட்டளை பெறப்பட்டு அதுவும் பரிசோதனை மட்டத்தில் காணப்பட்டமையின் காரணமாக மேற்கூறப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளுதல் பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(இ) கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தொழில் முயற்சியாளருக்கு பகிர்ந்தளிப்பதற்கு 2009 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,130,850 பெறமதியான இருப்புக்கள் 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் 728 பதவிகளுக்கிடையே மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 249 ஆக இருந்ததுடன், அதில் உள்ளடங்கியுள்ள உயர் முகாமைத்துவ மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 12 பதவிகளில் 05 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. மேலும், 2014 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அங்கீகரிக்கப்பட்ட 08 பதவிகளுக்காக 69 உத்தியோகத்தர்கள் ஒப்பந்த மற்றும் நாளாந்த கொடுப்பனவு அடிப்படையில் சேர்க்கப்பட்டு மாதாந்தம் ரூபா 2,236,324 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்படாத 04 ஆலோசனையாளர்கள் பதவிகளுக்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் போது உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டு 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 4,152,023 தொகை படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

5. நிலைபேறான அபிவிருத்தி

2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய என்பீ/எஸ்பீ/எஸ்டீஜீ/17 ஆம் இலக்க தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளரால் விநியோகிக்கப்பட்ட கடிதம் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு "2030 இன் நிகழ்ச்சி நிரல்" இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களாலும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக சபையினால் தமது விடயப்பரப்பின் கீழ் கொண்டு வரப்பட்ட பணிகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என்பன தொடர்பாக அறிவிக்காமையின் காரணமாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்கை அடைந்து கொள்ள வேண்டிய முறைகள், இலக்குகள் என்பவற்றை அளவிடுவதற்கான குறிகாட்டிகளும் அறிமுகப்படுத்தப்படவில்லை.

6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

6.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்குகள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 03 மாத கால தாமதத்தின் பின்னர் 2018 மே 21 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

6.2 பெறுகைகள்

2016/2017 காலப்பகுதிக்காக பாதுகாப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 2016 மார்ச் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட கேள்வி கோரலின் பிரகாரம் கேள்வி மதிப்பீட்டுக் குழுவினால் ஆகக் குறைந்த விலையுடன் 03 கேள்விகள் சிபாரிசு செய்யப்பட்டிருக்கும் போது எந்தவித காரணமும் இன்றி பெறுகைக் குழுவினால் அந்த கூறுவிலைகள் நிராகரிக்கப்பட்டு 2016 ஆகஸ்ட் 18 ஆந் திகதி மீண்டும் கேள்வி கோரப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இரண்டாவது தடவை கிடைத்த கேள்வி மதிப்பீட்டின் போது சிறு விலகலாக கவனத்தில் கொள்ளக்கூடிய கணக்கு அறிக்கை வழங்கப்படாமை போன்ற காரணங்கள் காண்பிக்கப்பட்டு 03 கேள்விகளும், சகல விபரங்களும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் போது அவை காணப்படாததாகக் கருதி மேலும் 10 கேள்விகளும் நிராகரிக்கப்பட்டு 19 ஆவது விலையுடன் உள்ள கேள்வி வெற்றியீட்டிய கேள்வியாளராக மதிப்பீட்டுக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது

பிரச்சினைக்குரியதாக இருந்தது. மேலும், அவ்வாறு தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் 02 மாத காலத்திற்கு மாத்திரம் சேவையினை வழங்கியிருந்ததுடன் அதற்குச் செலுத்தப்பட்ட விலை மற்றும் ஆரம்ப கேள்வி கோரல் விலையுடன் ஒப்பிடும் போது 02 மாதங்களுக்காக ரூபா 769,683 தொகை மேலதிகமாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது.

6.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.2.4 ஆம் பிரிவின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு அடுத்துவரும் ஆண்டின் 03 மாதங்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் அரசாங்கத்தின் பங்களிப்பு, நிறுவனத்தின் உழைப்பு மற்றும் ஒட்டுமொத்த செலவினங்களை உள்ளடக்கி வருடாந்த பாதீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் திறைசேரி மானியங்களுக்கான செலவின மதிப்பீடு மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது.

6.4 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2018 யூலை மாதம் வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

6.5 தீர்வு காணப்படாத கணக்காய்வுப் பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நவபிம களஞ்சிய தொகுதியில் (Yard) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 1,500 கிலோகிராம் ஆன உடைந்த இருப்புக்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருந்தும் அப்பெறுமதி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பானளுவ கைத்தொழில் பேட்டையின் காணியைக் கைப்பற்றுவதற்காக 2016 செப்தெம்பர் மாதத்தின் போது அமைச்சிலிருந்து ரூபா 25 மில்லியன் கிடைத்திருந்த போதிலும், இந்த அறிக்கைத் திகதி வரையிலும் காணி கைப்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) நீண்ட காலமாக உரிமை கோரப்படுகின்ற பிரதான அலுவலகக் காணி உட்பட 10 மாவட்டங்களில் நடாத்தப்படுகின்ற பிரதேச அலுவலகங்கள் மற்றும் ஏனைய நிலையங்கள் நடாத்திச் செல்லப்படுகின்ற காணிகளை சட்டரீதியாக கையேற்க முடியாமையின் காரணமாக அந்த சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் மீது விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள்	அவதானிப்புக்கள்
(அ) நிதிக் கட்டுப்பாடு	(i) வங்கி இணக்கங்கள் குறித்த திகதியில் சமர்ப்பிக்கப்படாமை
	(ii) பல்வேறு பிரிவுகளின் நிதிக்கொடுக்கல் வாங்கல்களுக்குரிய ஆவணங்கள் கணக்குப் பிரிவினால் செயற்திறனாக சேகரிக்கப்படாமை.
(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு	(i) மீதி உறுதிப்படுத்தல் பெறப்படாமை.
	(ii) பதிவேடுகள் நாளதுவரையாக்கப்படாமை.
(இ) இருப்புக் கட்டுப்பாடு	(i) இருப்பு பதிவேடு நாளது வரையாக்கப்படாமை
	(ii) சேதமடைந்த இருப்புக்களை கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(iii) சில இருப்பு விடயங்கள் தொடர்பாக பேரேட்டுக்காட் மற்றும் பின்காட் மீதிகளுக்கிடையே அசாதாரண நிலை காணப்பட்டமை.

(iv) விற்பனைப் பிரிவினால் ஒழுங்கு முறையாக புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை மற்றும் பொருள் விநியோகித்தலின் போது பேணப்பட்ட இருப்பு தொடர்பாக சரியான மேற்பார்வை செய்யப்படாமை.

(v) அதிக விலையான இருப்புக்கள் உரிய பிரகாரம் களஞ்சியப்படுத்தப்படாமை மற்றும் களஞ்சியத்தை சுற்றி பாதுகாப்பு ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்படாமை

(ஈ) பதிவேடுகளைப் பேணிச் செல்லல் நட்ட இழப்பு பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி